# தேரையர் அந்தாதி



பதிப்பாசிரியர்

டாக்டர் மா. புனிதா

# தேரையர் அந்தாதி

பதிப்பாசிரியர்
டாக்டர் ம. புனிதா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை-600 113

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title of the book | : | **Tēraiyar Antāti** |
| Editor | : | **Dr. M. Punitha** |
| Published by | : | **International Institute of Tamil Studies,** C.I.T. Campus. Tharamani Madras-600 113 |
| Price | : | Rs. 33.00 |
| Publication No. | : | 204 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Date of Publication | : | March. 1995 |
| Number of Pages | : | vi + 154 |
| Paper used | : | 16 kg. S.S. Map Litho |
| Size of the book | : | Demy 1/8 octav |
| Printing types used | : | 10 point |
| Number of copies | : | 1000 |
| Photo-typesetting and Offset Printing by | : | **Pavai Printers Pvt. Ltd.,** 142, Jani Jan Khan Road, Royapettah, Madras-600 014. Phone: 83 24 41 |

Published with the financial assistance from the Directorate of Tamil Development, Govt. of Tamil Nadu.

# அணிந்துரை

**ச. சு. இராமர் இளங்கோ**
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

நமக்கினிமை தரும்படியாக வாய்த்த நல் அமுதாகிய தமிழ் தொன்மையது. முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழையதாக விளங்குகின்ற அதே வேளையில் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாக இலங்குகிறது.

இவ்வாறு சீரிளமைத் திறத்துடன் தமிழ் இலங்குவதற்குக் காரணம் காலந்தோறும் பல்வேறு சங்கங்களும், இயக்கங்களும் நிறுவனங்களும் ஆற்றி வருகின்ற பணிகளே.

இவ்வகையில் தற்காலத்தில் தமிழுக்குத் தொண்டுசெய்யும் பல்வேறு அமைப்புகளில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பங்கு கணிசமானது. நுட்பமான புலமைமிக்க பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்டு பல்வேறு நூல்களை வெளியிட்டு இந்நிறுவனம் தமிழ்ப்பணியாற்றி வருகிறது.

குறிப்பாக இந்நிறுவனத்தின், தொன்மை வாய்ந்த ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து வரும் சுவடியியல் துறையின் செயல்பாடு பாராட்டத்தக்க ஒன்று. இத்துறையின்வழி அச்சில் வெளிவராத அழியும் நிலையிலுள்ள பல சுவடிகள் வெளியிடப் பட்டு வருகின்றன. 1979-ஆம் ஆண்டிலிருந்து இத்துறை சுவடியியல் பட்டய வகுப்பினைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் ஐந்து மாணாக்கர்களுக்கு மாதம் 300 ரூபாய் உதவித்தொகையும் வழங்கி, சுவடியியலில் பயிற்சியளித்து வருகின்றது. வெறும் ஏட்டுக்கல்வியாகப் பயிலாமல் செயல் முறையிலும் சிறந்து விளங்கும் இப்பயிற்சியில் பங்குபெறுகின்ற ஒவ்வொருவரும் ஆண்டிறுதியில் நிறுவனத்திலுள்ள யாதானுமோர் சுவடியினைப் பதிப்பிக்கின்ற ஆற்றலினைப் பெறுகின்றனர். அவர்களுள் பலர் நல்ல வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். எதிர் காலத்தில் இத்தகு சுவடியியல் அறிவு படைத்தோர் பலர் பல்வேறு பகுதிகளிலும் பரந்து தமிழுக்குத் தொண்டு செய்வார்கள் எனில் அந்தப் பெருமை முழுவதும் இந்நிறுவனத்தையே சாரும். இத்தகு சுவடியியல் பட்டயவகுப்பினை இந்நிறுவனம் ஒன்றே இதுகாறும் நடத்தி வருகின்றது.

மேலும் இந்நிறுவனம் இதுவரை இரு சுவடியியல் குறுங்காலப் பயிலரங்கினை நடத்தியுள்ளது. அவ்வகையில் அண்மையில் நடைபெற்ற பயிலரங்கில் எண்பது மாணவர்கள் கலந்து சுவடியியல் பயிற்சியை முடித்துச் சென்றனர். இன்னும் இதுபோன்ற பல பயிலரங்குகளை இந்நிறுவனம் நடத்தவுள்ளது.

இங்ஙனம் சுவடியியல் துறை தமிழுக்குத் தொண்டாற்றிவரும் இவ்வேளையில் சுவடிகளில் புதைந்துள்ள மாணிக்கங்களைத் தமிழன்னையின் முடியில் பதித்து அழகு பார்க்கும் முகமாகப் பல்வேறு சுவடிகள் நூல்வடிவம் பெற்றுள்ளன.

சித்தமருத்துவம் பெருவழக்காகி வரும் இந்நாளில், கணக்கின்றிக் காணப்படும் சித்த மருத்துவச் சுவடிகளில் சிலவற்றையும், அம்மானை, சதகம் போன்ற சிற்றிலக்கியங்களையும், கதைப்பாடல்கள் சிலவற்றையும் பதிப்பிக்க வேண்டுமென்ற வேணவாவோடு தெரிந்தெடுத்த சில நூல்கள் தற்போது அச்சேறுகின்றன.

இதுவரை வெளிவந்த இருபதுக்கும் மேற்பட்ட சுவடிப் பதிப்பு நூல்களுள் சித்த வைத்திய நூல்கள் குறிப்பிடத்தக்கவை. கண் மருத்துவம், கருவூரார் பலதிரட்டு என்ற மருத்துவ நூல்கள் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளன. மறைந்த முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் எட்டாம் மாநாட்டு வரவேற்புக் குழுவில் சித்த மருத்துவம் தொடர்பான சுவடிகள் அனைத்தும் நூல் வடிவம் பெறவேண்டும் என்ற தமது விருப்பத்தினை வெளிப்படுத்தினார். அவரது ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையில் ‘தேரையர் அந்தாதி’ என்ற இந்நூல் வெளிவருகிறது. மருந்து, துணை மருந்து, நோய், நோய்க்கான அறிகுறி, மரணம் உண்டாகக் கூடிய குறி குணம் முதலிய அரிய மருத்துவக் குறிப்புகள் இந்நூலுள் இடம்பெறுகின்றது.

இந்நூல் வாயிலாக ஏற்படும் தமிழ்ச் சிறப்பினை எண்ணி இறும்பூதெய்துகின்ற இவ்வேளையில், நிறுவன மேம்பாட்டிற்கு உறுதுணை புரிகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வியமைச்சர் க. பொன்னுசாமி அவர்களுக்கு நன்றிகூற இந்நிறுவனம் கடமைப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையின் நிதி உதவி பெற்று வெளிவரும் ஆறு நூல்களுள் இதுவுமொன்று. எங்கள் நிறுவனத்தின்பால் பேரன்பு காட்டுகின்ற தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. சா. பா. இளங்கோவன், இ.ஆ.ப. அவர்களையும், இச்சுவடி வெளியீட்டுக்கு நிதிவுதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் முனைவர் சி. செல்வராசு அவர்களையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

நூல்களின் அச்சேற்றும் பணிகளை முனைப்புடன் செய்த முனைவர் டி. மகாலட்சுமி அவர்களையும், தமிழுலகம் பயன் பெறும் வகையில் இந்நூலைச் சிறப்பாகப் பதிப்பித்துத் தந்த ம. புனிதா அவர்களையும் பாராட்டுகின்றேன். குறித்த காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த பாவை பிரிண்டர்ஸ் நிறுவனத்தார்க்கும் நன்றி.

சுவடிகளை வைத்திருப்போர் எங்களது நிறுவன நூலகத்திற்கு அதனை நல்கினால் தமிழில் பல அரிய நூல்கள் வெளிவர உறுதுணை புரிந்த பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவர்களாவர்.

**இயக்குநர்**

# பொருளடக்கம்

அணிந்துரை ........................................ iii

பதிப்புரை ........................................ 1

சித்த மருத்துவம்
நூலாய்வு

தேரையர் அந்தாதி ........................................ 39

மூலமும் குறிப்பும்

அடிக்குறிப்புகள் ........................................ 111

ஆய்வுக்குத் துணை நின்ற நூல்கள் ...... 124

பின்னிணைப்பு ........................................ 127

தொகைப்பெயர் விளக்கம்
மருந்துகளின் விளக்கம்
மருந்துகளும் அவை தீர்க்கும்
நோய்களும்

பாடல் முதற்குறிப்பு ........................................ 145

சொல்லடைவு ........................................ 150

# பதிப்புரை

தமிழின் பண்டை இலக்கியங்கள் மட்டுமின்றி மருத்துவ நூல்களும் சுவடிகளில் போற்றிப் பாதுகாக்கப்பெற்று வருகின்றன. அத்தகு மருத்துவச் சுவடிகளை அச்சேற்றுவதன் மூலம் மருத்துவ உலகில் புதிய ஒளியை நாம் ஊட்டமுடியும். அவ்வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில உள்ள 215 ஆம் எண்ணிட்ட தேரையர் அந்தாதி என்னும் பெயரிய சுவடி இங்குப் பதிப்பித்து வெளியிடப்பெறுகிறது.

## நூற்பெயர்

முதலில் சுவடியின் ஓலைச்சட்டங்களில் காணப்பட்ட 3 தலைப்புகள், எது உண்மையான தலைப்பாக இருக்க முடியும் என்ற குழப்பத்தை ஏற்படுத்தின. தேரையர் அந்தாதி, தேரையர் ரத்னாகரம் 1001, தேரையர் மனோகரம் 1001 என்பனவே அம்மூன்று தலைப்புகள். பாடல்களில்காணும் அகச்சான்றுகளினாலும் 3 தலைப்புக்களிலும் 'தேரையர்' பொதுவாக இருந்ததனாலும் நூல் தேரையருடையது என்ற முடிவுக்கு வர முடிந்தது. பாடல்களின் அந்தாதி அமைப்பினால் 'தேரையர் அந்தாதி' என்பதே நூலின் பெயராகக் கொள்ளப்பட்டது.

## சுவடியின் அமைப்பு

### புற அமைப்பு

19.5 செ.மீ. நீளமும், 2.8 செ.மீ. அகலமும் உடைய 58 ஏடுகளை உடையது இச்சுவடி. சுவடியின் இருபக்கங்களிலும் பக்கத்திற்கு ஒன்றாக முதுகுநரம்பு நீக்கப்படாத ஓலைச் சட்டங்கள் காணப்படுகின்றன. இது தவிரவும் அழகான ரோஜா வண்ணத்தில் அமைந்த இரு மரச்சட்டங்கள் அளவாக வெட்டப்பட்டுச் சுவடியின் இருபக்கங்களிலும் பாதுகாப்பாக அமைந் துள்ளன. ஏடுகளின் நீளத்தில் முதலாம் மூன்றிலொரு பாகத்தில் அளவான துளையிட்டு, அதில் அழகான சிவப்பு நூற் கயிறொன்று கோர்க்கப்பட்டு, ஏடுகள் சிதறாமல் பாதுகாப்பாகக் கட்டி வைக்கப்பட்டுள்ளது.

### அக அமைப்பு

சுவடியின் இருபக்க ஓலைச்சட்டங்களில் தேரையர் அந்தாதி, தேரையர் ரத்னாகரம் 1001, தேரையர் மனோகரம் 1001 என்ற மூன்று தலைப்புக்கள் பென்சிலால் எழுதிவைக்கப்பட்டுள்ளன. முதல்

ஏட்டிலே நூல் தொடங்குகிறது. நூல்பெயர், காப்புப்பாடல், கடவுள் வாழ்த்து எதுவும் இல்லை. சுவடியில் ஒன்றுமுதல், ஐம்பத்தொன்பது வரை (1 -59) எண்கள் வரிசையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. சுவடியின் எப்பகுதியிலும் நூலின் பெயரோ, சுவடி எழுந்த காலமோ சுவடி எழுதப்பட்ட வரலாறோ இல்லை. ஏடுகளில் 5 முதல் 8 வரிகள் எழுதப்பட்டுள்ளன. ஏட்டின் இடதுபக்க ஓரத்தில் 3.5 செ.மீ. இடை வெளியும் வலதுபக்க ஓரத்தில் 1 செ.மீ. இடைவெளியும் விட்டு எழுதப் பட்டுள்ளது. சொற்களுக்கு இடையே இடைவெளியின்றித் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளது. ஏடுகளிலும் பாடல் முடிவுகளிலும் தமிழ் எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## பாடல் எண்களில் மாற்றம்

பாடல்கள் இரு இடங்களில் திரும்ப எழுதப்பட்டுள்ளன. அவை அடிக்கப்பட்டுள்ளன. ஆனால் பாடல் எண்கள் மட்டும் அடிக்கப்பட்ட பாடல்களுக்கும் தொடர் எண்களாகவே கொடுக்கப்பட்டுள்ளன. எனவே பாடல் எண்களில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அது மட்டுமின்றி சில இடங்களில் வந்த எண்களே மீண்டும் வந்துள்ளமை, சில இடங் களில் எண்ணிடப்படாமை போன்றவற்றால், சுவடியின் இறுதியிலுள்ள 278 ஆம் எண் 282 ஆக நூலில் மாற்றம் பெறுகின்றது.

## எழுத்து அமைவு

எழுத்துக்கள் தெளிவாக அமைந்துள்ளன. ஒற்றுக்கள் புள்ளியிடப் படவில்லை. மிகச்சிலவிடங்களில் ஒற்றுக்கள் புள்ளியிடப்பட்டுள்ளன. தேவையில்லாதவிடத்து புள்ளியிட்டிருந்தால் அதனைச் சிறுகோடாக அடித்து, அப்புள்ளி தேவையில்லை என்பது சுட்டிக்காட்டப்பட்டுள் ளது. ரகர, றகர வேறுபாட்டுடனும், னகர ணகர வேறுபாட்டுடனும், குறில் நெடில் வேறுபாடின்றியும், பேச்சுநடையிலே எழுதப்பட்டுள் ளன. எனவே எழுத்துப்பிழைகள் மலிந்துள்ளன. ஷ், ஸ் போன்ற வடமொழி எழுத்துக்கள் பலவிடங்களில் காணப்படுகின்றன. யாப் பமைப்புப் பாடல்கள் அனைத்தும் அந்தாதி அமைப்பில் கலிவிருத்தப் பாக்களால் இயன்றுள்ளன.

ஒப்பீட்டுச் சுவடிகள் ஏதும் கிடைக்காதநிலையில் சுவடியில் விடு பட்ட இடங்கள், துளைவிழுந்த இடங்கள் இவற்றை நிரப்பச் சரியான பாடம் கிடைக்கவில்லை. எனவே மீட்டுருவாக்கம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது

ஒப்பீட்டுச் சுவடிகள் கிடைக்காமையினாலும் 3-ஆவது ஏடு இல்லாமையினாலும் தாளகக்கட்டு, வீரமெழுகு போன்ற சில நல்ல மருந்து செய் முறைகளை கிடைக்காமற் போயிற்று.

## பதிப்பில் மேற்கொண்ட திருத்தங்கள்

சுவடியில் காணும் மருந்துகளுக்கு மிகச்சில விடங்களிலே தலைப் புக்கள் கொடுக்கப்பட்டிருந்தன. அவையும் நோயை முதன்மைப்படுத்தி, மருந்தின் பெயரைக்குறிப்பிடாதனவாக இருந்தன. அவையெலலாம், நோயின் மருந்தின் பெயரையும் சேர்த்து பெயரிடப்பட்டன. இன்னும் சிலவற்றில் மருந்துகளின் பெயர் மட்டும் கொடுக்கப்பட்டிருந்தன. அவை தீர்க்கும் நோய்களுடன் சேர்த்துப் பெயரிடப்பட்டன. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களும் மாற்றங்களும் பிறை அடைப்பிலும் காட்டப்பட்டன.

ஒற்றுமிகுதி, ஒற்றுக்குறை, கால், ரகர மயக்கம், குறில் நெடில் மயக்கம், அகரம், இகர, உகர, ஐகாரமாதல், இகரம், அகர, உகர, யகரமாதல் முதலிய மாற்றங்களும் சீர் செய்யப்பட்டுள்ளன. வட மொழிச் சொற்கள், வழக்குச் சொற்கள், கொச்சைச்சொற்கள், பிழை கள் முதலியனவும் திருத்தப்பட்டே பதிப்பிக்கப்பட்டன.

தலைப்புகளற்ற இடங்களில் தலைப்புகள் கொடுத்தும், பிழையென உறுதியாகத் தெரிந்த இடங்கள் திருத்தப்பட்டும் பதிப்பிக்கப்பட்டுள் ளது. சிலவிடங்களில் சுருக்கக்குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன நூலுள் கடினபதங்களுக்கு அடிக்குறிப்பில் பொருள் தரப்பட்டுள்ளது. மேலும் நோய்வகை யாவும் நட்சத்திரக்குறியிட்டு, ஒரே பக்கத்தில் தர வியலாத இடங்களில் வெவ்வேறு இடங்களில் தரப்பட்டுள்ளன. சீர் குறைந்தவிடத்து, அந்தாதி அமைப்பு ஆசிரியர் மொழிநடை, பொரு ளடைவு முதலியவற்றைக் கொண்டு சொற்கள் அவ்வவ்விடங்களுக் கேற்பச் சேர்க்கப்பட்டுள்ளன. இவையாவும் பிறைஅடைப்பினுள் தரப் பட்டுள்ளது.

# சித்த மருத்துவம்

## ஓர் அறிமுகம்

### மருத்துவம்

இயற்கை, செயற்கை என்னும் இருநிலைகளில் மனிதன் போராடும் போது, உணவாதி செயல்களாலும், பருவ மாற்றங்களாலும், உடலின் வாத, பித்த, கபமாகிய முக்குற்றங்களும் தன்னிலை பிறழ்ந்து ஏற்படும் குறிகுணங்களே 'நோய்' எனப்பட்டது. இந்த நோயை மனிதன் அப்படியே விட்டுவிடுவதில்லை. இந்நோயைப் போக்க அவன் கண்ட பொருட்களே 'மருந்து' எனப்பட்டன. அம்மருந்தைக் கொண்டு நோயைப் போக்க முயற்சி செய்யும் பணியே 'மருத்துவம்' எனப்படுகிறது. அஃதாவது மருந்து எனும் சொல் வலித்தல் விகாரம் பெற்று, அத்துடன் தொழிற்பெயர் விகுதியாக 'அம்' சேர்க்கப்பட்டு 'மருத்துவம்' என்ற சொல் உருவாக்கப்பட்டது.

மருத்துவம் என்ற சொல்லுக்கு வைத்தியம், மருந்து, பரிகாரம் என்ற பொருளினைத் தருகிறது தமிழ்ப் பேரகராதி

வைத்தியம் என்றால் வைத்திய் சாத்திரம், சிகிச்சை, வைத்தியனது தொழில் என்ற பொருளையும் கூறுவது தமிழ்ப்பேரகராதியே

'மருந்து' என்றால் பல்வகை நோய்களைத் தடுப்பனவும், தீர்ப்பனவுமான பல்வேறு நலப்பொருள் தொகுதி[3] என்பது தேவநேயப் பாவாணரின் கூற்று.

### மருத்துவன்

'பண்டிதன் பரிகாரி நல்வைத்தியனெனப்பேர் கொண்டவன் பரனாம்' என்ற பாடல் வரிகளுக்கு இணங்க, பல கலைகளிலும் (மருந்து சுத்தி, மருந்து செய்தல், மருந்தின் குணம், நோயாளியின் தன்மை, மருந்து கொடுக்கும் அளவு, காலஅளவு, வானியல், சோதிடம்) பாண்டித்யம் பெற்றவன் 'பண்டிதன்' என்றும், நோய்களைப் பரிகரிப்பதனால் 'பரிகாரி' என்றும், தன் வித்தையின் இயல்பால் மருந்துகளைக் கொடுத்து நோய்களை நிவர்த்திப்பதனால் 'வைத்தியன்' என்றும், உடற்கு நலத்தைச் செய்யும் காரியத்தைப் புரிபவன் என்பதால் அகதங்காரன் என்றும், இறைவனுக்கு ஒப்பான நிலையில் மருத்துவன் விளங்குபவன் என்பதால் பரன் என்றும் குறிப்பிடப்படுகிறது.

மருந்துகளின் சுத்தி, அவற்றின் குணம், நிகண்டு (வேறுபெயர்கள்) என்ற மூன்று கண்களை உடையவன் மருத்துவன். எனவே முக்கண்ணன் ஆகிய பரமனுக்கு இணையானவன் மருத்துவன் என்றும் கொள்ளலாம். இதனை 'மருந்துசுத்தி குண நிகண்டு கண்கள் மூன்றாம்' என்பதனா லறியலாம். மருத்துவன்-மருத்துவக் கலைஞன், மருத்துவச்சி, வைத்தியன் என்ற பொருட்களைத் தருகிறது தமிழ்ப்பேரகராதி. வைத்தியன்-மருத்து வன், வேதாப்பியாசங்கள் செய்பவன் என்ற பொருள்களினைக் கூறு கிறது தமிழ்ப்பேரகராதி.

## மருத்துவ-இயல்புகள்

கடவுள் நம்பிக்கை, பல நூற்களை ஐயம் திரிபு அற ஆராய்ந்த அறிவு, மனம் மொழி மெய்களின் தூய்மை, பல நோய்களைத் தீர்க்கும் வன்மை, நோய்களைக் கண்டு அஞ்சாத நெஞ்சுறுதி, நுண்ணறிவு, பெரியோர்கள் நட்பு, அன்றாடம் கடைப்பிடிக்கும் நல்லொழுக்கம், மேன்மைக்குணம், பல உயிர்களிடத்தும் அன்புடைமை முதலியவற்றை மருத்துவன் கைக்கொள்ள வேண்டும். உடல், நாடு, காலம், நோய் மருந்து முதலியவற்றை அறிதல், நோய்க்குத் தக்க உணவுப் பொருள் களின் விதி உணர்தல், உடலுக்கு வன்மைதரும் பொருள் இன்னவை எனத்தெளிதல், அவரவர் உடல்வன்மை உணர்தல், நோயாளிகளின் பசித்தீயின் அளவறிதல், உணவு கொடுக்கும் விதியறிதல் ஆகியவற்றை நன்குணர்ந்தவராய் இருத்தல் வேண்டும்.

## உலக மருத்துவநெறிகளும், அவை தோன்றிய காலமும்

| | |
|---|---|
| 1. ரோமர் மருத்துவம் | — கி.பி. 300 |
| 2. யுனானி மருத்துவம் | — கி.பி. 600 |
| 3. கிரேக்க மருத்துவம் | — கி.பி. 900 |
| 4. அஷ்டாங்க ஹிருதயம் | — கி.பி. 900 |
| 5. சாரங்கதர சம்ஹிதை | — கி.பி. 1300 |
| 6. பாவப்பிரகாசம் | — கி.பி. 1600 |
| 7. அலோபதி என்னும் ஆங்கில மருத்துவம் | — கி.பி. 1775 |
| 8. சித்த மருத்துவம் | — துவாபரயுகம் இரண்டாயிரத்து ஒன்பதுக்கு முன்னும் (அதாவது 195 கோடியே, 50 இலட்சத்து 11 ஆயிரத்து 73 ஆண்டுகளுக்கு முன்) |

தோன்றியதாக வரையறுக்கப் பட்டுள்ளது.

இக்கருத்து ஏற்புடையதல்ல. ஏனெனில் உலக மருத்துவ நெறிகள் ஒவ்வொன்றுமே காலத்தால் முற்பட்டது தம்முடைய மருத்துவ முறை தான், என்பதை நிலைநாட்டுவதற்காக முயற்சி செய்கின்றன. கி.பி. 5-ம் நூற்றாண்டே சித்தர்களின் காலம் என்பது ஓரளவேனும் ஏற் புடைய கருத்தாகும். இருந்தபோதிலும் சித்தர்களின் காலத்தைக் கணிப் பதில் இன்னும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, அறுதியிட்டுக் கூறும் நிலை வரவேண்டும். அதுவும் கூட சுவடிகளின் அழிவினால் சாத்தியமானதுதானா என்பது சிந்திக்கப்பட வேண்டிய கருத்தாகும். சித்தர்களால் தோன்றியது, சித்தர்களால் வளர்க்கப்பட்டது என்ற கருத் துக்கள் நிலவுவதால் சித்தர் என்பவர் யார் என்பது பற்றியும் இங்கு குறிப்பிட வேண்டியதாகிறது.

## சித்தர்

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக் கரணங் களில் 'செய்து முடிக்கும்' தொழிலைக் கொண்ட சித்தத்தை வென்று, சித்தி பெற்றமையால் இவர்கள் சித்தர் எனப்பட்டனர். சித்தத்தை வென்றால், சகலமும் வாய்க்கும் என்பதை,

மனமது செம்மை யானால் மந்திரஞ் செபிக்க வேண்டா
மனமது செம்மை யானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மை யானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மை யானால் மந்திரஞ் செம்மையாமே

என்ற அகத்தியர் ஞானப்பாடலால் அறியலாம். இதுதவிரவும், 'சித்தத் தில் சிந்தித்தபடியே உடலும் உண்பனவும் அடைந்து அனுபவிக்கின்றவர் களே சித்தர் எனினும், ''மனிதன் நோய்வாய்ப்பட்டால் அவனையும் அவன் உடலையும் நன்கு ஆராய்ந்து நோய் இன்னதெனத் தெரிந்து, அந்நோயை நீக்குவதற்குரிய மருந்தையும் தெரிந்து, செய்து கொடுத்துக் குணமாக்கிய பெரியோர்கள் முற்றும் துறந்த முனிவர்களாகவும், முக் காலமும் உணர்ந்த மேதைகளாகவும் இருந்ததால் அவர்களை அக்கால மக்கள் சித்தர்களென அழைத்தனர்''

## சித்த மருத்துவம்

இறைவனால் படைக்கப்பெற்ற இச்சரீரத்தைக் கெடாமல் காக்கவும் குறை உண்டானவிடத்து நிவர்த்திக்கவும் சித்தரால் படைக்கப்பெற்ற முறையே சித்த மருத்துவம் என்று கருதப்படுகிறது.

சித்தர்களால் செய்யப்பட்டதாலும், உடலையும், உயிரையும் அழியா மல் காத்துச் சித்தி பெறச் செய்யும் மருத்துவ மாதலாலும், 'சித்த மருத்துவம்' எனப் பெயர் பெற்றதெனலாம். இதன் காலம் கி.பி. 5-ஆம் நூற்றாண்டு, துவாபார யுகத்துக்கு முற்பட்டது எல்லா மருந்து மருத்துவ முறைகளிலும் காலத்தால் முற்பட்டது என்று பல கருத்துக்கள் நிலவுகின்றன.

## பிற மருத்துவ முறைகள்: 1. ஆயுர் வேதம்

இது ஆசிரியர்களுக்குச் சொந்தமான மருத்துவம் என்றும் பிரம் மாவால் படைக்கப்பட்டது என்றும் கருத்துக்கள் நிலவி வந்தாலும் சித்த மருத்துவத்தைப் பின்பற்றி மிக எளிய முறையில் உருவாக்கப்பட்டதே ஆயுர்வேதம் என்பதும் பரந்துபட்ட கருத்துக்களாக விளங்குகிறது. இதன் தோற்றம் கி.பி. 700-ல் என்று தெரிய வருகிறது. ஆயுர்வேதம் என்ற சொல்லிற்கு மருத்துவக்கலை என்றே தமிழ் அகராதிகள் குறிப்பிடுகின்றன. ஆயுர்வேதம் மனிதனுடைய உடல் ஆரோக்கியத்தைக் கட்டிக்காத்து, அவனுடைய ஆயுளை வளர்த்துக் கொள்ள வழிகாட்டிய மருத்துவ சாத்திரம் ஆயுர்வேதம் எனப்பட்டது. அதுவே மருவி ஆயுர் வேதமாயிற்று. யசுர் வேதத்தில் ஒரு பிரிவாக விளங்குகிறது.

## யுனானி மருத்துவம்

அராபியர்கள் கி.பி. 4 முதல் 8-ஆம் நூற்றாண்டு இந்தியாவிற்கு வருகை தந்து, நம் கலைகளை அங்குக் கொண்டு சென்று அதைப் பாரசீக மொழியில் எழுதினர். அக்கலைகளில் ஒன்று 'மருத்துவம்' அதுவே யுனானி மருத்துவமாக வளர்ந்தது. இதுவே பின்னர் முகமதி யரின் வருகையால் நம் நாட்டிலும் பரவியது. கி.பி. ஆறாம் நூற் றாண்டில் தோன்றியதாகக் கருதப்படுகிறது. இம்முறையில் உயிரினங் களின் தசை சத்துக்கள், தாவர இனங்களின் வித்துக்கள் ஆகியவையே மிகுதியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

## ஓமியோபதி

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய

தாகக் கருதப்படும் இம்மருத்துவ முறை ஒரு கலப்பு மருத்துவ முறை எனக் கருதப்படுகிறது. இம்மருத்துவ முறை முதலில் ஜெர்மனியில் தோன்றியது. நம் நாட்டிலும் தற்போது பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## அலோபதி

கடந்த 200-ஆண்டுகளாக விரைவாக வளர்ந்த மருத்துவம். இம் முறையே தற்போது அதிக அளவில் உலகெங்கும் பயன்படுத்தப்படு கிறது. 'மருத்துவத்தின் தந்தை' என்று அழைக்கப்படும் ஹிப்பாக்கிரடீஸ் முதன்முதலில் கிரேக்க நாட்டு மருத்துவமுறைகளைத் தொகுத்தார் இவருக்குப்பின் அரிஸ்டாட்டிலும் மருத்துவத்திற்குச் சிறந்த தொண் டாற்றியுள்ளார். ஆனால் கி.பி. 15-ம் நூற்றாண்டிற்குப் பின்னரே ஐரோப்பிய நாடுகளில் மருத்துவத் துறையில் பல புதிய கண்டுபிடிப்புக் கள் ஏற்பட்டு உலகளாவிய நிலையில் சிறப்பிடம் வகிக்கும் நிலை உருவானது. இம்முறையில் நோய்கள் உடனடிக் குணம் அடைவதனா லும், அதிதீவிர நோய்ச் சிகிச்சையில் முத லிடம் வகிப்பதனாலும், அறுவைச் சிகிச்சை முறையினாலும் தற்காலத்தில் மிகச் சிறப்பான நிலையில் மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றி வருகிறது.

## சீன மருத்துவம்

5000-ஆண்டுகளுக்கு முன்னரே 'ஹுவாங் டை' என்ற மஞ்சள் மன்னர் (Huang Di — The Yellow Emperor) என்பவரே இதன் தந்தை யாக இருந்து சீன மருத்துவ முறைகளான அகு-பங்க்சர் (Acu-Puncture) அகு-பிரஷர் (Acu-Pressure) அகுடச் (Acu-Touch) முதலியனவற்றை வளர்த்ததாக வரலாறு கூறுகிறது. ஆனால் நம் நாட்டுச் சுவடிகள் அங்கு எடுத்துச்செல்லப்பட்டு, அவற்றிலுள்ள வர்மப் பரிகார முறை மையே வளர்ச்சிகள் பல பெற்று இம் மருத்துவ முறைகளாக நிலை பெற்றன என்றும் கூறுவர். இதனை ''பொன்னூசித் திறவுகோல்'' என்ற நூலைப் பண்டைநாளில் வெளிநாட்டார் தமது நாட்டுக்கு எடுத்துச் சென்று அங்கு அகு-பஞ்சர், அகு-பிரவுர் என்ற பெயரில் சிகிச்சை முறைகளை வளர்த்தனர்'' என்ற வர்ம ஆசான் தர்மலிங்கத் தின் கூற்றினால் அறியலாம்.

## இயற்கை மருத்துவம்

'உணவே மருந்து மருந்தே உணவு' என்ற சித்தர்களின் கொள்கை யினை வலியுறுத்தும் வகையிலும், அக்கருத்துக்களில் புதுமை பல செய்து

தனிமருத்துவக் கலையாக உருவாக்கப்பட்டும், இந்த நூற்றாண்டிலே நம் நாட்டில் தற்போது பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## காந்த சிகிச்சை

இதுவும் இந்நூற்றாண்டிலே தோற்றங் கொண்டு அண்மைக் காலங் களில் மூட்டுவலி, என்புத் தேய்மானம், நரம்புத் தளர்ச்சி முதலிய நோய்களுக்குச் சிறப்பான பலன் தருவதாகக் கருதப்பட்டுப் பரவலாகப் பயன்படுத் தப்பட்டு வருகிறது.

இவையே உலக அரங்கில் தற்போது பயன்படுத்தப்பட்டு வரும் மருத்துவ முறைகளாகும். இன்னும் இம்மருத்துவ முறைகளில் வளர்ச்சி தோன்றத் தோன்ற புதியதோர் மருத்துவக்கலையும் தோன்றக்கூடும். மனிதனின் தேவைகள் பெருகப் பெருக, அவனது கண்டு பிடிப்புகளும் பெருகிக்கொண்டே செல்கின்றன. அதனால் புதிய மருத்துவ முறைகள் கண்டு பிடிக்கப்பட்டாலும் ஆச்சர்யப்படுவதற்கு எதுவுமில்லை.

## இந்திய மருத்துவமுறைகள்

இவ்வுலகளாவிய மருத்துவ முறைகளில் சித்த மருத்துவமும், ஆயுர் வேத மருத்துவமும் நம் நாட்டிற்கே உரிய மருத்துவ முறைகளாகும். ஆனால் யுனானி மருத்துவ முறையும் இங்கிருந்து எடுத்துச் செல்லப் பட்டு, அராபிய நாட்டில் வளர்ந்தமையாலும், மொழி வேறு என்றாலும் அடிப்படைத் தத்துவங்கள் ஒன்றாகவே அமைந்துள்ளன, என்பதாலும் அதனையும் இந்திய மருத்துவமுறைகளுள் ஒன்றாகக் கொள்வாரும் உளர்.

## சித்த-ஆயுர்வேத மருத்துவமுறைகள்

1. இரு முறைகளிலும் பச்சிலை மூலிகைகள், தாவர இனங்கள், பால், நெய், எண்ணெய் போன்றவை அடிப்படைப் பொருள்களாகக் கருதப்படுகிறது.

2. வீரிய இயல்புடைய சில மூலிகைகள், உலோகங்கள், இரசக் கலப்புள்ள மருந்துச் சரக்குகள் முதலியவற்றில் பற்பம், செந்தூரம், சுண்ணம் முதலிய வீரிய மருந்துகள் இரு முறைகளிலும் பயன்படுத்தப் படுகின்றன.

3. ஆயுர்வேதத்தின் மூலவர்களான சரகர், சுசுருதர் போன்றோரின் மருத்துவ நூல்களில் இரசவாதம், நாடியால் நோயறிதல் பற்றிய செய்தி களில்லை. ஆனால் சித்த மருத்துவத்தில் இம்முறைகள் காணப்படு

கின்றன. இதனால், சித்தமருத்துமே ஆயுர்வேத முறையை விடக் காலத்தால் முந்தியது என்ற கருத்து நிலவுகிறது.

இருமுறைகளிலும் நாட்பட்ட நோய்களுக்கு மிகச்சிறப்பான மருத்துவமும் நிரந்தரத் தீர்வுதரும் மருந்துகளும் உள்ளன என்பது யாவராலும் மறுக்கமுடியாத உண்மை.

## மேனாட்டு-இந்திய மருத்துவ முறைகள்

நவீன மருத்துவத்திலிருந்து சித்த-ஆயுர்வேத மருத்துவ முறைகளை வேறுபடுத்துபவை ஐம்பூதம், அறுசுவை, முக்குற்றம் போன்ற அடிப்படைத் தத்துவங்கள், இதனை,

''அண்டத்தி லுள்ளதே பிண்டம்,
பிண்டத்தி லுள்ளதே அண்டம்,
அண்டமும் பிண்டமும் ஒன்றே
அறிந்துதான் பார்க்கும் போதே''

என்ற 'சட்டமுனி ஞானப்' பாடலால் அறியலாம்.

ஐம்பூதம், அறுசுவை, முக்குற்றம் இவற்றைக் கொண்டே நோய் கணிக்கப்பட்டு அந்நோய்க்கு மருந்தும் செய்து கொடுக்கப்படுவது இதன் சிறப்பான அம்சம். இம்மூன்றனுக்கும் உள்ள தொடர்பு வருமாறு:

### ஐம்பூதம்

நிலம் (பிருதிவி (அ) மண்)
நீர் (அப்பு (அ) தண்ணீர்)
தீ (தேயு (அ) நெருப்பு)
காற்று (வாயு (அ) வளி)
ஆகாயம் (விண் (அ) வெளி)

### அறுசுவை

இனிப்பு-மண்+ நீர்
புளிப்பு-மண் + தீ
உப்பு-நீர் + தீ
கைப்பு-காற்று + ஆகாயம்
கார்ப்பு-காற்று + தீ
துவர்ப்பு-மண் + காற்று

### முக்குற்றம்

வளி (வாதம்)-ஆகாயம் + வாயு

அழல் (பித்தம்)-தீ

ஐயம் (கபம்)-நீர் + மண்

எனவே முக்குற்றங்களும் 1, 1/2, 1/4 என்ற விகிதத்தில் நம் உடலில் காணப்படுவதே தன்னிலை. இம்முக்குற்றங்களும் தன்னிலை பிறழ்வது ஐம்பூதங்களின் மாற்றத்தினாலே. அதுவே நோயாகும். இதனை அறு சுவைகளில் எச்சுவை தீர்க்கும் என்பதை ஆராய்ந்து ஒப்புரை, எதிருரை, கலப்புரை என்ற நிலைகளில் மருத்துவம் அமைகிறது.

### ஒப்புரை

தீக்குற்ற மிகுதியினால் உண்டாகும் ஒருநோய்க்குத், தீயினைக் கொண்ட ஒரு சுவை (புளிப்பு, உப்பு, கார்ப்பு) யினையே மருந்தாகப் பயன்படுத்தல்.

(எ.கா.) பித்தவாந்தி-புளிப்புச் சுவையினால் தீருதல்.

### எதிருரை

எக்குற்ற மிகுதியினால் நோயுண்டானதோ, அதனைத் தணிக்கும் மாற்றுச் சுவையுள்ள மருந்து கொடுத்து அதனைப் போக்குதல்.

(எ.கா.) 'இருமல்' என்ற கபக்குற்ற மிகுதியால் வரும் நோய் வெப்ப வீரியமுடைய (தீக்குற்றம்—கார்ப்புச்சுவை) மிளகினைப் பொடித்துப் பாலில் கொடுக்கக் குணமாதல்.

### கலப்புரை

இவ்விரு முறைகளும் கலந்த நிலையில் வழங்கப்படுவது. இதற்கு எடுத்துக்காட்டாகப் பலசெய்முறைகளைக் கூறலாம். ஒரே நோய்க்குப் பலசுவையுள்ள மருந்துச் சரக்குகளும் கலந்து செய்யப்படுவது இக் கலப்புரை என்ற நிலையிலேதான். (எ.கா.) கந்த ரசாயன மருந்து, விடயாதிச் சூரணம்.

மேல்நாட்டு மருத்துவமுறைகளில் நீரினால் பரவுபவை, காற்றினால் பரவுபவை, கிருமிகளால் உண்டாகும் நோய்கள் என்று அனைத்திற்கும் பிறிதொரு உயிரி உடலுள் நுழைவதாலே தோன்றுகின்றது என்ற வரையறை உள்ளது. அவற்றைக் கொல்வதற்காக மருந்து கொடுக்கப் படுகிறது.

இந்திய முறைகளில் அவ்வாறு கிருமிகள் நுழைவதற்கும் கூட வாத, பித்த, கப குற்றங்கள் தன்னிலை பிறழ்தலே மூலகாரணம். அதனை நிவர்த்தித்தாலே நோய்ப்போகும் என்ற நிலையில் நோயின் மூல காரணம் வேரோடு அறுக்கப்படுகிறது.

நோய்க் கணிப்பிலும் இந்திய மருத்துவமுறைகள் அதிலும் சித்த மருத்துவம் சிறப்பான இடம் வகிக்கிறது. நா, நிறம், மொழி, விழி, நாடி, ஸ்பரிசம், மலம், மூத்திரம் என்னும் எண்வகைத் தேர்வினால் நோயைக் கணித்து, மருந்து கொடுக்கும் நிலையே நிலவுகிறது.

நவீன மருத்துவ முறைகளிலோ நோய்க்காகும் மருந்துச் செலவை விட, நோயினைக் கணிக்கப் பயன்படுத்தும் நவீனக் கருவி முறைகளிலே அதிகம் செலவாகிறது என்பது யாவரும் அறிந்த உண்மையாகும். இவ்விந்திய மருத்துவமுறைகளின் நோய்க்கணிப்பு முறைமைக்கும், அதனைப் போக்கும் தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டினை இங்கு தருவது தேவையாகிறது.

மிகுதியான உஷ்ணம் காரணமாகக் கண்களில் நீர் வரலாம். பிழை தோன்றும். காலையில் எழுந்தவுடன் கண்களைத் திறக்க முடியாத அளவுக்கு இமையோடு இமை ஒட்டிக்கொள்ளும். இதுபோன்ற நிலை ஏற்பட்டபோது அவர்கள் காலின் வழிக் கண்ணுக்கு மருந்திட்டனர். கண்கள் பாதிக்கப்பட்டதால் உள்ளங்காலில் மூன்று நாட்கள் அல்லது ஐந்து நாட்கள் விளக்கெண்ணெயை நன்றாகப் பதினைந்து நிமிடங்கள் அழுத்தித் தேய்க்கச் சொல்கின்றனர். அதன் பின்பு பிச்சிப்பூவை இரு கால்களிலும் வைத்துக் கட்டித் தூங்குகின்றனர். ஐந்து நாட்களிலும் இவ்வாறு செய்தால் ஆறாம் நாள் கண்கள் முழுநிலையில் நோய்நீக்கம் பெறுகிறது. கண்ணுக்கு நோயென்றால் காலில் மருந்திடுவது அதிசய மான கல்வி. அதுதான் தமிழ்க் கல்வி. நோயின் அடிப்படை எது எனத் தெரிந்து செயலாற்றுகின்றனர். நோயின் வேரையே நீக்குகின்றனர். அதுதான் நம் சித்தர் மருத்துவம். ஆயுர்வேத மருத்துவமும் கூட! உலகில் எந்த மேனாட்டு மருத்துவ முறையும் கண்ணுக்கு நோயென்றால் காலுக்கு மருந்திடுவதில்லை. இது எதிருரை-எனும் மருத்துவமுறைக்குச் சிறப்பான எடுத்துக் காட்டாகவும் அமைகிறது.

## சித்த மருத்துவச் சிறப்புக்கள்

1. உடலைப் பிணிக்கின்ற வாத, பித்த, கபம் என்னும் முக்குற்றக் கலப்புப் பிணிகளுடன், ஆணவம், கன்மம், மாயை என்னும் உயிரி னைப் பிணிக்கும் மும்மலங்களின்றும் விடுதலை பெறுகின்ற வழிமுறை

களைக் கற்றுத் தருவது சித்த மருத்துவம். சித்தம் பிணிகட்டிருக்கும் தன்மையே உடல் பிணியாகவும் மாறும்; உடலும் உள்ளமும் ஒன்றுக் கொன்று தொடர்பு உடையவையே என்பதைத் தற்கால விஞ்ஞானி களும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இதனை, ''மனமது செம்மையானால் மந்திரஞ் செபிக்க வேண்டா'' எனத் துவங்கும் அகத்தியர் ஞானப் பாடலால் (முன்னரே 'சித்தர்' எனும் தலைப்பின் கீழ் இம்முழுப் பாடலும் கொடுக்கப்பட்டுள்ளது) அறியலாம்.

2. 'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்' என்ற

குறளுக்கிணங்க, எண்வகைத் தேர்வினால் நோயினைக் கணித்து, வாத, பித்த, கப, தொந்தநிலைகளின் மிகுதி, குறைவு இவற்றினால் நோய் வந்த காரணம் அறிந்து, அறுசுவைகளினை உடைய தாது, தாவர, சீவ மருந்துப் பொருட்களால் செய்யப்படும் அகமருந்து-32, புறமருந்து-32 என்னும் மருந்துகளில் எது வந்த பிணியைத் தீர்க்கும் என்ற வகைமை தெரிந்து செய்யப்படும் மருத்துவ முறை சித்தமருத்துவ முறையாகும்.

3. நிதானமாகக் குணம் தருமெனினும், நிரந்தர குணம் தரவல்ல தும், நோய்களை வேரோடு அறுக்கும் தன்மை உடையதும், பக்க விளைவுகள் ஏதுமற்ற இயற்கைப் பொருட்களால் செய்யப்படுவதும் இம்மருத்துவம்.

4. வாதம், வைத்தியம், யோகம், ஞானம் என்ற நான்கு நிலைகளை யும் விளக்கிக் கூறுவது சித்தமருத்துவம். ஆனால் இரசவாதம் செய்வது பொருள் சேர்க்கும் நோக்கில் அமைந்துவிடக் கூடாது என்பதனால், இவற்றை மறைபொருளில் பாடிவைத்துள்ளனர். அதனால் இரசவாதம் மருத்துவ முறைகளுக்கு மட்டுமே பலிதமாகும். இதனை 'வாதி கெட்டு வைத்தியனானான்' என்ற பழமொழி விளக்கும். 'யோகம்' என்பது அட்டாங்கயோகம் ஆகும். இவற்றைக் கடைப்பிடித்தல் கடினம் என் றாலும் கடைப்பிடித்தோர் சான்றோர் எனப் பலராலும் போற்றப்படும சிறப்பு நிலையை அடைவர் என்பது திண்ணம்.

இயமம் நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணா யாமம்பிரத் தியாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
அயமுறும் அட்டாங்க மாவது மாமே

என்ற தமிழ் மூவாயிரச் செய்யுள் இதனை விளக்குகிறது.

| | | |
|---|---|---|
| இயமம் | — | மனத்தூய்மை |
| நியமம் | — | செயல்தூய்மை |
| ஆசனம் | — | இருக்கைப் பயிற்சி முறைகள் |
| பிராணாயாமம் | — | மூச்சுப் பயிற்சி |
| பிரத்தியாகாரம் | — | உடலை மறந்து ஆன்மாவில் ஒன்றுதல் |
| தாரணை | — | மனோவுறுதி |
| தியானம் | — | மெய்ப்பொருள் ஒன்றில் கவனத்தை நிலை நாட்டல் |
| சமாதி | — | இறைவனுடன் சமநிலை பெறுதல் |

ஞானமார்க்கமே சித்தர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. ஆனால், இதுபற்றிய உண்மைகள் சரிவரத் தெரியவில்லை. இதனால் முக்காலமும் உணரக்கூடும் என்பதை 'முக்காலமும் உணர்ந்தவன் ஞானி' என்று அழைக்கப்படுவதனால் காணலாம். ஞானம் பெறுமளவு மனதினைப் பக்குவப்படுத்த வேண்டும் என்பது மட்டும் தெளிவாகிறது. இதுவே 'சித்தத்துக்கு (மனதிற்கு) மருத்துவமாகிறது.

5. மணி, மந்திர, அவிழ்தங்களால் பிணிநீக்கும் தன்மை தற்போதும் சித்த மருத்துவத்தில் காணப்படுகிறது.

(அவிழ்தல்—என்றால் பிணிகளை அவிழ்க்கும் தன்மையுடையது)

6. 'இலக்கணம் பரம ஔடதம்' என்ற கூற்றினால் (இலங்கணம்—பட்டினி) பட்டினியிருத்தலையே சிலவகைப் பிணிகளுக்கு மருத்துவமாகப் பயன்படுத்துகிற தன்மையைச் சித்த மருத்துவத்தில் காணலாம். மாந்தசுரம், செரியாமை முதலிய நோய்களில் பட்டினியிருத்தலால் உடனே நோய் குணமாதலை இன்றும் காணலாம். இது தற்போது எல்லா மருத்துவ முறைகளும் ஏற்றுக் கொண்ட உண்மை.

7. தேவருரை, மக்களுரை, சூருரை என்னும் மூன்று நிலைகளில் சித்தமருத்துவம் செய்யப்படுவது இதன் தனிப்பெரும் சிறப்பாகும். இதனை,

''சூதகந்தி தாதுபற்பஞ் சொன்னநாட் டார்சிகிச்சை
ஓதரிய மூலியிம்மண் ணோர்ச்சிகிச்சை—வேதடரும்
சத்திரசா ராக்கினிநி சாசரச்சி கிச்சையென்றே
முத்திரத்த தாகும் மொழி''

என்ற தேரையர் பதார்த்த குண சிந்தாமணியால் அறியலாம்.

### தேவருரை (தேவ மருத்துவம்)

உலோகப் பொருட்களால் செய்யப்படும் கட்டு, களங்கு, பற்ப, செந்தூரங்கள் போன்ற உயரிய மருந்துகளால் செய்யப்படுவதாகும்.

### மக்களுரை (மனித மருத்துவம்)

மூலிகைகளின் சாறு, குடிநீர், சூரணம், மாத்திரை முதலியன கொண்டு செய்யப்படுவது.

### சூருரை (இராட்சத மருத்துவம் அல்லது அசுர மருத்துவம்)

அறுவை, கீறல், சுட்டிகை, சலாகை, கொம்புகட்டல் ஆகிய அறுவை மருத்துவக் கருவிகளால் செய்யப்படுவது.

இவ்வித மூன்று மருத்துவ முறைகளிலும் முதலில் மக்களுரையைச் செய்து, அதில் பலனின்றிப் போனால் தேவருரையைச் செய்துபார்த்து, அதிலும் குணமாகாத நோய்களையே சூருரைக்கு உட்படுத்துதல் என்பதே சித்தமருத்துவத்தின் கொள்கை ஆகும். இதனை,

'வேரு பாரு தழை பாரு மிஞ்சினக்கால்
மெல்ல மெல்லப் பற்ப செந்தூரம் பாரே'

என்ற பாடல் வரிகளால் அறியலாம். இது மிகவும் சிறப்பான கொள்கை என்பதில் எவ்விதக் கருத்து வேறுபாடு இல்லை. எடுத்தவுடனே அறுவைச் சிகிச்சை என்பதைவிட, தகுந்த உள்மருந்துகளால் குணமாக்க முடியுமா என்பதைக் கொடுத்துப் பார்த்து, முடியாத நிலைகளில் மட்டுமே அறுவைசிகிச்சை செய்தல் என்னும் கருத்து வரவேற்கத் தக்கது.

8. 'அறுவை மருத்துவம்' மிகச் சிறப்பாகச் சித்த மருத்துவத்தில் அன்று செய்யப்பட்டு வந்தது. ஆனால் இன்று வழக்கொழிந்து போனது. அன்று சித்தமருத்துவத்தில் அறுவை மருத்துவம் சிறப்பாக இருந்தது என்பதனை,

''நெய்க்கிழி வைக்கப்பட்டார் நெய்ப்பந்தல் கிடத்தப்பட்டார்
புக்குழி எஃகும் நாடி இரும்பினால் போழப்பட்டார்''

என்ற சிந்தாமணியினாலும் அறியலாம்.

''வாளா லறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல் நோயாளன் போல''

என்ற நாலாயிரத்திவ்விய பிரபந்தத்தினாலும்,

''உடலிடைத் தோன்றிற் றொன்றை அறுத்ததன் உதிரம் ஊற்றிச்
சுடலுற சுட்டு வேறோர் மருந்தினாற் றுயரந் தீர்வர்''

என்ற கம்பராமாயண அடிகளாலும்,

வழக்கொழிந்துபோன சித்தமருத்துவ அறுவை சிகிச்சை முறை மீண்டும் தழைத்தலே, அதன் சிறப்புக்கு எடுத்துக் காட்டாக அமையும்.

9. 'உணவே மருந்து மருந்தே உணவு' என்ற கோட்பாடு சித்த மருத்துவத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. இதனால் செய்யப்படும் மருந்துகள் கூட சுவையினடிப்படையிலும், வாதக்குற்றத்தைத் தணிப்பன, பித்தக் குற்றத்தைத் தணிப்பன, கபக்குற்றத்தைத் தணிப்பன என்ற நிலையிலும் மருந்துப் பொருட்களின் குண மறிந்து செய்யப்பட்டன. இது தவிரவும் உட்களி, அடை, பிட்டு, வடகம் போன்ற உள்மருந்துகளின் பெயர்களும், இக்கொள்கைக்கு வலுவூட்டுவனவாக அமைகின்றன.

10. வாத, பித்த, கப அடிப்படையில் நோயின் காரணத்தைக் கொண்டு பகுக்கப்பட்ட நோய்களும் கூட, பொதுமருத்துவம், சிறப்பு மருத்துவம், மகளிர் மருத்துவம், பாலர் மருத்துவம், என்ற நிலைகளில் நோயாளிகளைக் கொண்டும், குன்மரோக சிகிச்சை, வாதரோக சிகிச்சை, அறுவை சிகிச்சை என்ற நோய்களின் தன்மையைக் கொண்டும் பகுக்கப்பட்டுச் சிறப்பான நிலையில் மருத்துவம் மேற்கொள்ளப்பட்டது.

11. வர்மப்பரிகாரம், கற்பமருந்துகள் முதலிய சிறப்பான பகுதிகளைத் தன்னுள் அடக்கிய மருத்துவம் சித்தமருத்துவமாகும். 'வர்மம்' என்றால் உடலில் அடிபடுதலினாலோ, அழுத்துவத னாலோ நரம்பு நிலைகளைத் தாக்கி அதனால் நோயுறுதல் ஆகும். இவ்வாறு நோயுற்றவனை அது நீக்கும் வகைமை தெரிந்து செய்யும் தொழில் வர்மப் பரிகாரம் ஆகும். சித்தமருத்துவத்தில் வர்மம் மறைக்கப்பட்ட பகுதியாக இருந்து வருகிறது. காரணம் வர்மப் பரிகாரம் செய்யும் ஒருவனே வர்மத்தை இளக்குவதற்குப் பதிலாக, வன்மம் காரணமாக வர்மத்தை உண்டாக்கவும் முடியும் என்பதனால் தான். எனவே சித்தமருத்துவத்தில் வர்ம முறைகள் சிறப்பிடம் வகிக்கின்றன வர்மத்தில் எழும் குறிகுணத்தையும், அவை நிவர்த்திக்கும் தன்மையும் கீழ்வரும் பாடலினால் அறியலாம்.

''ஓமென்ற மூர்த்திரவர்மம் கொண்டு தானால்
உத்தமனே செய்குணத்தை உரைக்கக் கேளு
ஆமென்ற மண்டையிலே உணவு குத்து
அறிவுகெட்டு மயங்கும் பாரேயதன் பின்னால்
வாமென்று முன்கூட்டி வலிக்கு மப்பா
வரிசையாய் சித்திரத்தைப் பொடித்துக் கொள்ளு
தேவமென்ற சிறுபுள் ளடிவிட் டரைத்து
பொத்ததிதையும் நாளட்டத்தில் தீரும் பாரே.

வர்மக் குறிகுணங்கள், வர்மம் ஏற்படும் விதம், வர்மத்தில் தீரும், தீரா தவை அறிதல், வர்ம இளக்கு முறைகள், எத்துணை நாழிகைக்குள் இளக்க வேண்டும் என்னும் நிலையில் வர்மசிகிச்சை முறை அடங்கு கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்புச் சிகிச்சை முறையாக இது இப்போதும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு வர்மச் சிகிச்சை முறைகள் சித்தமருத்துவத்திற்குப் பெருமை சேர்ப்பது போலக் கற்ப மருந்துகளும் சித்த மருத்துவத்தின் தனித்தன்மையைத் தரணிக்கு உணர்த்துவன.

கற்ப மருந்துகள் உடலின் வன்மைக்காகச் சாப்பிடப்படுவன என்றும், உடலுக்குற்ற பிணியைப் போக்கச் சாப்பிடப்படுவன என்றும் இருநிலைகளில் முறையே 1. பொதுக் கற்பம், 2. சிறப்புக் கற்பம் என்ற இருநிலைகளில் கொடுக்கப்படுகின்றன. கற்பமருந்துகளின் சிறப்பியல்பை,

''கற்பத்தை உண்டால் காயம் அழியாது
கற்பத்தி னாலே காணலாம் கைலையை
கற்பத்தி னாலே காணலாம் சோதியை
கற்பத்தி னாலே காலையுங் கட்டியே''

என்ற திருமந்திரத்தால் அறியலாம். பொதுக்கற்பமாக வழங்கப்படும் நிலையினை,

''காலமே யிஞ்சியுண்ணக் காட்டினார் சூத்திரத்தில்
மாலையதிலே கடுக்காய் மத்தியானஞ் சுக்கருந்த
சூலமே தேகமடா சுக்கிலத்தைக் கட்டிவிடும்
ஞாலமே லுனதுவிந்து நற்றேங்காய் போலாமே''

என்ற பாடலால் அறியலாம். பிரணாயாமம் என்ற அட்டாங்கயோகத்துள் ஒன்றாகக் கூறப்படும் மூச்சுப் பயிற்சி உடலுக்கு வன்மைதரும் நிலையில் பொதுக்கற்பமாகவும், சுவாசப் பாதையிலெழும் இருமல், இரைப்பு, இளைப்ப, பீனிசம் என்னும் நோய்களின் சிறப்பை,

''ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும் கணக்கறி வாளருக்குக்
கூற்றை உதைக்கும் குறியது வாமே''

என்ற திருமூலர் திருமந்திரத்தினால் அறியலாம்.

12. பிறமருத்துவ முறைகளின் வளர்ச்சிக்குச் சித்தமருத்துவத்தின் பிரிவுகள் துணை செய்துள்ளன. எடுத்துக் காட்டாக இயற்கை மருத்துவம் சித்தர்களின் 'உணவே மருந்து' என்ற கொள்கையினையும், ஆசனப் பயிற்சி, மூச்சுப் பயிற்சி முதலியவற்றையும் உள்ளடக்கித் தனி மருத்துவமாக வளர்ந்திருப்பதையும், சீனமருத்துவ முறைகள் யாவும் இங்கிருந்து எழுத்துப்பட்ட வர்மநூலிலிருந்து வளர்ந்தவை என்பதையும், நவீன மருத்துவத்தில் பயன்படும் உடல்பயிற்சி முறைகளில் சில சித்த மருத்துவத்தின் தொக்கண முறைகளில் கூறப்பட்டவையே என்பதையும், சித்த மருத்துவத்தில் இன்று வழக்கொழிந்து போன அறுவைச் சிகிச்சை முறை, நவீனமருத்துவத்தில் வளர்ந்துள்ளதுடன், அன்று பயன்படுத்தப் பட்ட சத்திராயுதங்கள் இன்று அவற்றில் பயன்படுத்தப்படுகின்றன என்பதையும் குறிப்பிடலாம். அன்றைய சத்திராயுதங்கள் — 26 என்பதனைக் கீழ்க்காணும் 'அகத்தியர்' நயனவிதிப் பாடலால்' அறியலாம்.

'கத்தி சத்திரம் கவின்குறும்பி வாங்கியும்
முகவா தன்னுடன் முள்ளு வாங்கியும்
ஆழிக் கோலு மடுத்த பிறையுடன்
கத்தரிக் கையுடன் பரகரை வாங்கியும்
முச்சலா கையோடு முனிமொழி யோட்டும்
மட்டக் கோலும் மாறும் ஊசியும்
செப்புக் கிழையுஞ் சீரிய சலாகையும்
வட்டகை தன்னுடன் வளர்பஞ் சமுகமும்
செப்புச் சலாகையுங் கொம்புங் குடோரியும்
வெங்கலக் குழலும் ஈயச் சலாகையும்
காயக் கோலும் கண்கத்தி தண்டும்
இவையிவை யாயுத மிருபத் தாறுஞ்
சிவனவ னருளால் திகழ்சத் ராயுதமே''

இவற்றில்,

கத்தி — Surgical knife

கத்திரிக்கை — Scissors and Forceps

சலாகை — Catheter

குழல் — — Syringe

ஊசி — — Needle

போன்ற பல கருவிகள் நவீன மருத்துவத்தில் பயன்படுத்தப்படுதல், சித்த மருத்துவத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டவையோ என்று எண்ணத் தோன்றுகின்றன. மேலைநாடுகளிலும், கீழைநாடுகளிலும் காணும் தமிழ்ச் சுவடிகளே இவற்றிற்குச் சான்றுபகரும். இவ்வாறு பல நிலைகளில் சிறந்து விளங்கும் சித்தமருத்துவத்தினால், பிறமருத்துவ முறைகளால் தீர்க்கமுடியாத கொடிய நோய்களையும் தீர்க்க முடியும்.

(எ.கா.) 1. காளாஞ்சகபடை — Psoriasis
2. வளியழல் கீல்வாயு — Rheumatoid arthritis
3. ஒவ்வாமை நோய்கள் — Allergicduiseases like Bronchal Asthma and Ectzeme

இதுபோன்ற பல்வேறு சிறப்பியல்புகளைத் தமக்கே உரிமையாகப் பெற்றுத் தமிழர்தம் வரலாற்றிலேயே தோன்றி வளர்ந்து அவ்வரலாற்றுடனேயே வாழ்ந்துவரும் தனிப்பெரும் மருத்துவம் சித்தமருத்துவமாகும்.

### சித்தமருத்துவம், நலிவுறக் காரணங்கள்

மேலே குறிப்பிடப்பட்ட பல சிறப்பியல்புகளைத் தன்னகத்தே கொண்ட சித்தமருத்துவம் இன்று நலிவுற்றுக் காணப்படுகிறது. அதற்குப் பல காரணங்கள் உள்ளன.

1. சித்தர்களின் நூல்களில் காணும் மறைபொருட்சொற்றொடர்களால், அவற்றின் உண்மைப் பொருள் என்னவென்று அறியவியலாது, பல அரிய மருந்துகள் செய்ய இயலாமை.

எடுத்துக்காட்டாக 'முப்பு' எனும் பொருள். முப்புச் சேர்த்துச் செய்யப்படும் மருந்துகளே சரிவர முடிந்தவை என்பதை 'முப்பு மருந்துக்கு குரு' என்பதனால் அறியலாம். இதனை தீட்சை செய்த பூநீறு, மூன்று உப்புகளின் கூட்டு (மண்ணுப்பு, விண்ணுப்பு, கடலுப்பு), பனிக்குடத்து நீர், ஆறுமாத அன்னக்காடி என்று பல்வேறு நிலைகளில்

பொருட்செய்து கொண்டு உண்மையான பொருள் இன்னவென்று அறியக்கூடாத தன்மை; அதற்கான ஆராய்ச்சிகள் அரசு ஆதரவுடன் மேற்கொள்ளப் படாமை.

இதுபோலவே பனிநீர், சுத்தசலம், முதலியனவும் அறுதியிட்டுக் கூற இயலாத நிலையே நிலவுகிறது.

2. பல பரம்பரை மருத்துவர்கள் தமக்குக் குரு-சீட பரம்பரையில் தெரிந்த அரிய மருத்துவக் குறிப்புக்கள் இன்னும் வழி வழியாக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருதல், அவர்களை ஊக்குவித்து, உலகுக்கு உணர்த்த எடுத்துக் கொள்ளப்படாத முயற்சி.

3. அந்நியர் வருகையினால் ஏற்பட்ட பண்பாட்டுப் பாதிப்பு, ஆங்கிலக் கல்வியினால் தமிழ்க் கல்விக்கு ஏற்பட்ட பேரிழப்புக்களில் ஒன்று சித்தமருத்துவத்தின் நலிவு.

4. அதிதீவிர நோய்களில் உடனடித் தீர்வு தரும் கட்டு, களங்கு, ஊதல், அறுவை முறைகள் வழக்கில் மறைந்து போன உண்மையும், உடனடி நிவாரணம் தரும் நவீன மருத்துவத்தின் வளர்ச்சியும் ஒரு காரணமாகிறது.

5. பத்திய முறைகள், மெதுவாகக் குணமாக்கும் தன்மை இவற்றினால் தற்கால இயந்திரத்தனமான வாழ்விற்கு முரண்படும் தன்மை, மாத்திரை, ஊசி என்று வந்தபிறகு, சூரணம், இலேகியம், தைலம் என்ற பழங்கால மருந்துகள் புறக்கணிக்கப்பட்டமையாலும் இம்மருத்துவம் பின் தள்ளப்பட்டது எனலாம்.

6. உலகளாவிய மருத்துவமாக ஏற்றுக்கொள்வதற்கு, இன்னும் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்படாத நிலை ஒரு காரணமாகிறது.

7. மருத்துவ மூலிகைகள், மருந்துச் சரக்குகளை இனம் காண்பதில் நிலவும் சிரமம்.

8. இனம் காணப்பட்ட சரக்குகளும், இன்றைய சூழலில் அழிந்து கிடைப்பது அருமையாகிவிட்ட நிலை. எடுத்துக்காட்டாக கருவிழி, கருஞ்சித்திர மூலம், குங்குமப்பூ முதலிய மூலிகைகள், குதிரைப்பல் பாடாணம், கௌரிப் பாடாணம் முதலிய தாதுப் பொருட்கள், புனுகு கத்தூரி போன்ற சீவப் பொருட்கள் முதலியவற்றைச் சொல்லலாம்.

9. இவ்வாறு கிடைக்கும் அரிய பொருட்களும் கூடக் கலப்புச் சரக்குகளே கிடைக்கும் நிலைமையும் சித்தமருந்துகள் சிறந்த பலனளிக்கத் தவறுதலுக்குக் காரணமானது.

10. மருத்துவச் சுவடிகளின் அழிவு, பல நல்ல மருத்துவக் குறிப்புக் களை உலகுக்குத் தரத் தவறிவிட்டது.

11. சித்தமருத்துவக் கல்லூரிகளில் பயின்று வெளிவரும் மாணாக்க ரும், ஆசிரியருமே பொருள் சேர்க்கும் நோக்கில் சித்தமருத்துவத்தை மறந்து நவீன முறைகளை மேற்கொள்ளுதல்.

## சித்தமருத்துவ, மறுமலர்ச்சிக்குச் சில சிந்தனைகள்

சித்தமருத்துவம் நலிந்து கொண்டே வந்தாலும் கூட, அதன் சிறப்பை உணர்ந்த பலரும், நவீன மருத்துவத்தின் பக்க விளைவுகள் கண்டு அஞ்சுவோரும் தற்போது சித்த மருத்துவத்தையே நாடி வரும் நிலை நிலவுகிறது. இந்நிலையை வளர்ச்சி பெறச் செய்வதன் மூலம் சித்த மருத்துவத்தின் மறுமலர்ச்சிக் காலத்தை விரைவில் கொண்டு வர முடியும். அதற்குச் சிலவகையான பணிகள் உடனடியாக மேற்கொள் ளப்படுதல் வேண்டும்.

1. மருத்துவ அகராதிகள், மறைபொருட் சொல்லகராதிகள் முழுமையாகவும், பிழைநீக்கியும் ஆராய்ந்து வெளியிடப்படுதல் வேண்டும்.

2. சுவடிகளைத் திரட்டி பாதுகாத்து, அவற்றில் பொதிந்து கிடக்கும் அரிய மருந்துகளைச் செய்து, ஆராய்ந்து மக்களுக்கு வழங்கவேண்டும்.

3. சித்தமருத்துவ நூல்களின் மொழிபெயர்ப்பு, பலமொழிகளிலும் வரவேண்டும். அப்போதுதான் உலகமெலாம் நம்நாட்டு மருத்துவம் சிறப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

4. மருந்துகளின் செயல்பாடு நவீனமருத்துவக் கண்ணோட்டத் துடன் நிலைநாட்டப்படுதல் வேண்டும்.

5. தரமான மருந்து செய்முறைகள் அடங்கிய புத்தகங்கள் வெளி வருதல் வேண்டும்.

6. நோயினை வேரோடு அறுக்கும் தன்மை, பக்கவிளைவுகளற்ற தன்மை, நிரந்தரத் தீர்வு என்ற நிலைகளில் பயன்படுவன சித்தர் மருந் துகள் என்ற உண்மையைப் பொதுமக்களும் அறியும் வண்ணம் அறிக்கைகள், நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சிகளில் விளம் பரம், மாநாடுகள் முதலியவற்றை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

7. எல்லா மருத்துவ முறைகளையும் ஒப்பீட்டாய்வு செய்து, எம் மருத்துவ முறை எவ்வெவ் நோய்களுக்குச் சிறப்பான குணம் தரவல்லன என்பதனைப் பொதுமக்கள் அறியும் வண்ணம் செய்தல் வேண்டும்.

8, பரம்பரை மருத்துவர்களை ஊக்கப்படுத்தி அவர்களிடையே வழக்கில் பயன்படுத்தப்படும் அரிய மருத்துவக் குறிப்புக்களை எல்லோரும் பயன்படுத்த உய்யும் வண்ணம் பொதுமருத்துவ முறைகளாக்குதல் வேண்டும்.

9. மூலிகைப் பண்ணைகள் அமைத்துக் கிடைப்பதற்கு அரிய மூலிகைகளை வளர்த்தல், தாதுப் பொருட்கள், கத்தூரி, புனுகு கோரோசனை முதலிய கிடைப்பதற்கரிய உயிரினப் பொருட்களைப் பெற அவற்றைத் தரும் விலங்குகளைக் கண்காணிப்புடன் வளர்த்தல் முதலியன உடன்டித் தேவையாகிறது.

10. சித்தமருத்துவக் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் யாவருமே ஒப்பீட்டு நிலைக்காகப் பல மருத்துவ முறைகளின் அறிவு பெற்றிருந்தாலும் கூட, ஆழ்ந்த சித்தமருத்துவ ஈடுபாட்டுடன் சித்தமருத்துவத்தையே செய்து, மக்கள் மத்தியில் சித்தமருத்துவம் பரவ வழிவகை செய்ய வேண்டும்.

11. முப்பு போன்ற இனம்காணப்படாத மருந்து, எயிட்ஸ் - போன்ற நோய்களுக்கான மருந்து முதலியவற்றினை ஆராய்ந்து கண்டு பிடிக்க, முயற்சியும், ஈடுபாடும் கொண்ட மருத்துவக் குழுவொன்றை அமைத்து விரைவில் வெளிக் கொணரல் வேண்டும்.

# நூல் ஆய்வு

## நோய்கள்

### பொதுநிலை

இவ்வுலகில் காணும் நோய்கள் பொதுவாக '4448' என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவை யாவும் வாத, பித்த, கப அடிப்படையிலும், விடக்கடிகள், கர்ம நோய்கள் முதலியவற்றால் வருவனவாகும்.

### சுவடியில்

இச்சுவடியில் பயின்று வரும் நோய்கள் யாவற்றையும் இக்குற்ற அடிப்படையில் பிரிப்பது மிகவும் கடினமானது. அல்லாமல் சித்த மருத்துவம் பயின்றவர்களுக்கே இந்நோய் எப்படி வாதகுற்றத்திலடங்கும் என்ற மயக்கத்தைத் தரும். எனவே எல்லோருக்கும் எளிதில் புரியும் வண்ணம்,

1. பொதுவான நோய்கள்
2. மகளிர் நோய்கள்
3. ஆடவர் நோய்கள்
4. சிறுவர் நோய்கள்

என்ற வகையில் பாகுபடுத்தப்பட்டுள்ளன. இப்போது நோய்களைச்,

1. சுவாசப் பாதையில் தோன்றும் நோய்கள்
2. உணவுப் பாதையில் தோன்றும் நோய்கள்
3. கழிவுப் பாதையில் தோன்றும் நோய்கள்
4. இரத்த மண்டலத்தைப் பாதிக்கும் நோய்கள்
5. நரம்பு மண்டலத்தைத் தாக்கும் நோய்கள்
6. பிற நோய்கள்

என்ற நிலையில் பாகுபடுத்திப் பிற நோய்களும் மேலும் பகுப்புகளுக்குட்படுத்தப்பட்டு, அனைத்திற்கும் ஓரிரு எடுத்துக்காட்டுகளும் சுவடியிலிருந்தே கொடுக்கப்பட்டுள்ளன. இதனைப்பின் வரும் அட்டவணை விளக்கும்.

## நோய்கள்

| பொது நோய்கள் | | மகளிர்ஆடவர் நோய்கள் | ஆடவர் நோய்கள் | சிறுவர் நோய்கள் |
|---|---|---|---|---|
| 1. சுவாசப் பாதை நோய் கள்(Diseases of Respiratory tract) | 1. இரைப்பு (காசம்) | 1. சூதகவாய்வு | 1. இலிங்கப்புற்று | 1. கரப்பான் |
| | | 2. காய்க்கிரந்தி | 2. கிரந்தி | 2. தோடம் |
| | 2. இளைப்பு (சயம்) | 3. கொருக்கு | 3. அரையாப்பு | 3. மாந்தம் |
| | | 4. அரையாப்பு | 4. மேகநோய்கள் | 4. கணம் |
| | 3. இருமல் (ஈளை) | 5. வெள்ளை | 5. காமநோய் | |
| | | 6.மேகநோய்கள் | 6. விரைவாதம் | |
| | 4. பீனிசம் | 7. சுகசன்னி | 7. பாரிசவாயு | |
| | | 8. காமநோய் | | |

| | | |
|---|---|---|
| 2. உணவுப்பாதை நோய் கள்(Disease of Gastro Intestinal tract) | 1. பல்நோய்கள் | — பல்ரணசீழ்க்குத்தல், பல்லசைவு |
| | 2. பல்லீற்று நோய்கள் | — அரணை வீக்கம் |
| | 3. நாக்கு நோய்கள் | — அரோசகம் (ருசியின்மை) |
| | 4. வயிற்று நோய்கள் | — பொருமல், உப்புசம், பெரு வயிறு, அசீரணம், அக்கினிமந்தம் |
| | 5. கல்லீரல் நோய் | — ஆமை, நீராமைக்கட்டி, ஆமைப் பெருவயிறு |
| | 6. மண்ணீரல் நோய் | — பீலிகை |
| | 7. குடல் நோய்கள் | கிராணி, அதிசாரம், குடற்சயம் |
| 3. கழிவுப்பாதை நோய் கள் (Disease of Excretary system) | 1. சிறுநீரகப்பாதை நோய்கள் | வெள்ளை, நீர்ச்சருக்கு, கல் — லடைப்பு, மூத்திர பவுத்திரச் சிலந்தி. |
| | 2. எருவாய் நோய்கள் | — மூலமுளை, பலுத்திரம், பேதிக்கட்டு (மலக்கட்டு) |
| 4. இரத்தமண்டல நோய் கள் (Disease of Cardio Vascular system) | 1. ருத்ரசோகம் (தமரக நோய் | |
| | **2. சோகை** | |

| பொது நோய்கள் | மகளிர்ஆடவர் நோய்கள் | ஆடவர் நோய்கள் | சிறுவர் நோய்கள் |
|---|---|---|---|
| 5. நரம்பு மண்டல நோய்கள் (Diseases of Central Nervous system) | — கோராமை வலி, சன்னி, குலை, நடுக்கல், வாதநோய்கள் | | |
| 6. பிற நோய்கள் | — தோல் நோய்கள் | — குட்டம், பிளவை, புண், இரணம், கரப்பான், சிலந்தி | |
| | 2. கண்ணோய்கள் | — கண்காசம், படலம், பூ, சதை, கண்ணீர்ப் பாய்ச்சல் | |
| | 3. தலைநோய்கள் | — தலையிடி, தலைநோய் | |
| | 4. விடக்கடி | — நாய்க்கடி, நீர்வண்டுக்கடி, பொசிவண்டுக்கடி | |
| | 5. விதியிலுள்ள வியாதி — | கர்ம நோய்கள் | |
| | 6. பிற வாத, பித்த, கப மிகுதியாலும், இவற்றின் தொந்தத்தாலும், முக்குற்றக் கலப்பாலும் வரும் பிணிகள் | | |

## சுவடியில் பயின்று வரும் மருந்து வகைகள்

பெரும்பாலும் இச்சுவடியில் கூறப்பட்டுள்ள மருந்துகள் உள்மருந்துகளாகவே அமைந்துள்ளன. சில வெளிமருந்துகளே காணப்படுகின்றன.

### உள்மருந்துகள்

**சாறுவகை**

இஞ்சிச் சாறு (5,245), இண்டுச் சார் (177), எள்ளிலைச்சாறு (110), கதலிக்கிழங்கு ரசம் (2), கருமத்தன் சாறு (164), கள்ளிச் சாறு (140, 254), கும்மட்டிக்காய்ச்சார் (135, 246), குமரிச்சார் (172, 192, 213), கையான்சார் (224), சங்கஞ்சார் (271), வெங்கரும்பின் சார் (71), தண்ணீர்விட்டான் சார் (71), நிம்பழச்சாறு (36, 38, 161, 185, 191, 206, 216, 226), நெல்லிக்காய்ச்சாறு (71), பூவரசங்காய்ச் சார் (8), மஞ்சட்சார் (245), முருங்கிலைச்சாறு (252),

முருங்கைப் பட்டை ரசம் (275), விம்பச்சார் (104), பழச்சாறு (4, 33, 106, 160, 175, 201, 226) போன்ற சாறுவகை பயன்படுத்தப் பட்டுள்ளது.

இவையாவுமே பிறமருந்துச் சரக்குகளை அரைக்கவும், தைலம், இளகம் முதலியன செய்யவுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

'இரத்தப் பிரமியத்துக்கு ஈருள்ளிச் சாறு' என்பது மட்டும் தனி மருந்தாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

சாறு என்னும் சொல் சீர்களின் அசை கருதி 'சார்' என்றும் பயன் படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

மேலும் 'இரசம்' என்னும் சொல் இவ்விடங்களில் சாற்றைக் குறிக் கிறது. (பிறவிடங்களில் பாதரசத்தைக் குறிக்கும்).

## குடிநீர் வகை

1. சுக்குக் குடிநீர்
2. நன்னாரிக் குடிநீர்
3. திப்பிலியாதிக் குடிநீர்

## கற்க வகை

1. அரப்பொடிக்கற்கம்
2. இரசக்கற்கம்
3. ஏலாதிக் கற்கம்
4. சுக்குக் கற்கம்
5. தேற்றான் கற்கம்
6. நிம்பழக் கற்கம்
7. பூரக் கற்கம்

## சூரண வகை (பொடி-எனவும் படும்)

1. கருணைக்கிழங்குப் பொடி
2. திப்பிலிப்பொடி
3. கக்காதிச் சூரணம்
4. விடயாதிச் சூரணம்

## பிட்டு

நொச்சியாதிப் பிட்டவியல்

## நெய்

1. அகத்தி நெய்
2. அறுகன் நெய்
3. கண்டங்கத்தரி நெய்
4. கந்தகச் சுடர் நெய்
5. கற்றாழை நெய்
6. தண்ணீர்விட்டான் நெய்
7. வாளநெய்

## இரசாயனம்

1. கந்தக இரசாயன மருந்து

## இளகம்

1. தூதுவேளை இளகம்
2. நிம்பழ இளகம்
3. நிலப்பனை இளகம்
4. முருங்கைப்பூ இளகம்

## எண்ணெய் (இதுவே தைலமாகும்)

1. உள்ளித்தைலம்
2. ஓரிலையாதித்தைலம்
3. கடுகுரோகணித்தைலம்
4. கந்தகச்சுடர்த்தைலம்
5. கம்மாறுத்தைலம்
6. கருஞ்சீரகத்தைலம்
7. கருடன் கிழங்குத்தைலம்
8. கற்றாழையாதித்தைலம்
9. கற்றாழைத்தைலம்
10. குமட்டித்தைலம்
11. குமரித்தைலம்
12. சானகித்தைலம்
13. தும்பைத்தைலம்
14. நாங்கூழ்த்தைலம்
15. நீர்முள்ளித்தைலம்
16. பங்கம்பாளைத்தைலம்
17. புங்கத்தைலம்
18. பூநாகத்தைலம்
19. பூரஎண்ணெய்
20. பூரத்தைலம்

21. பேய்ச்சுரையெண்ணெய்
22. முட்புளியிலைத்தைலம்
23. மேகயெண்ணெய்
24. வண்டுகொல்லித்தைலம்
25. வீழித்தைலம்
26. வெல்லத்தைலம்
27. வெள்ளுள்ளித்தைலம்
28. வெள்ளறுகாதித்தைலம்
29. வேம்பாதித்தைலம்

## மாத்திரை

1. அரிதாரமாத்திரை
2. ஆனந்தவயிரவன்
3. இரசமாத்திரை
4. இலவங்காதி மாத்திரை
5. இலிங்கமாத்திரை
6. குங்குமப்பூ மாத்திரை
7. கோரோசனை மாத்திரை
8. சாதிக்காய்மாத்திரை
9. சீந்திலாதி மாத்திரை
10. துருசுமாத்திரை
11. வாலசஞ்சீவி
12. வாளமாத்திரை
13. வாளவிரேசனக்குளிகை
14. வீரமாத்திரை
15. வெங்கார மாத்திரை
16. வெள்ளைப்பாடாணமாத்திரை

## கடுகு

'அகத்தி நெய்'யில் வரும் கடுகு உள்ளுக்குத் தருமாறு கூறப்பட்டுள்ளது.

## மெழுகு

1. இந்துப்பாதி மெழுகு
2. வீரமெழுகு (பாடல் இல்லை)

## குழம்பு

1. இந்துப்புககுழம்பு
2. வீரக்குழம்பு

## செந்தூரம்

1. காந்தச் செந்தூரம்
2. பஞ்சசூதச் செந்தூரம்

## பற்பம்

1. சிலாசத்து பற்பம்
2. நுணாவேர்ப் பற்பம்

## கட்டு

1. இலிங்கக்கட்டு
2. பூரக்கட்டு
3. தாளக்கட்டு (பாடல் முழுமையும் இல்லை)

இவ்வுள் மருந்துகள் தவிர சங்கனாதிப்பாயாசம், சஞ்சீவிப்பால், தேங்காய்ச்சாரம், நீர்முள்ளிப்பால், நெற்பொரியாதி அவிழ்தம், மூல வேர்க்கூழ் விளக்கெண்ணெய்த்தேன், வெடியுப்புக்கற்பம் முதலிய மருந்துகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை மருந்து செய்முறைகளுக் கேற்பப் பெயரிடப்பட்டுள்ளன. பாடலில் பயின்றுவரும் சொற்களைக் கொண்டே பெயரிடப்பட்டன. எடுத்துக்காட்டாக 'வெடியுப்புக்கற்பம்' என்பது வெடியுப்பு முதலிய சரக்குகளை நிம்பழப்புளிப்புக்குள் வைத்துப் பின் எடுத்துப் பயன்படுத்துமாறு கூறப்பட்டுள்ளது. நிம்பழம் என்ற சம்பீரம் (எலுமிச்சம்பழம்) கற்பமாவதைக் கீழ்க்காணும் பாட லால் அறியலாம்.

> ''கோணத் துளையுங் குறியுளையுங் கொக்காகிக்
> கோணத் துளையுங் குருளைபோற் — கோணச்
> சடமதியுண் மாறாமற் சம்பீரக் கற்பஞ்
> சடமதியுண் மாறாமல் சன்''

**இதன் பொருள்:** அக்குள், குறிமயிர் கொக்குபோல் வெளுத்து, கழுத் தில் நிற்கும் தலை உருளைபோல் ஆட்டம் கொடுத்தபின் சடமும் (உடலும்) மதியும் (புத்தியும்) மயங்கிப் பிரமையுற்ற நிலையில் எலுமிச்சம் பழத்தைக் கற்பமாக உண்ண (6-மாதம்) உடம்பு பிரம்புபோலாகும்; அதம்பண்ணத் தோன்றும். பாயாசம், கூழ், பால் என்ற பெயரில் வழங்கும் மருந்துகள் சித்தர்கள் 'உணவே மருந்து மருந்தே உணவு' என்ற கொள்கையை விளக்குகிறது.

## வெளிமருந்துகள்

### பற்று

1. பச்சரிசிப்பற்று
2. புளியங்கொட்டைப் பற்று
3. பூநாகப்பற்று

### பூச்சு

1. சந்தனப்பூச்சு
2. வாளப்பூச்சு

### மை

சவுக்காரமை

### கலிக்கம்

1. துருசும் மாத்திரை
2. வெங்காரமாத்திரை

## பொடிதிமிர்தல்

புளியிலைக்கற்கம்-இதனைப் பூசிக் குளித்தலால் கற்றாழை நாற்றம் போகும். எனவே இவ்வகையுள் அடக்கப்பட்டது.

### நசியம்

1. அறுகன் நெய்
2. கந்தகச் சுடர்நெய்

### சீலை

மஞ்சட்சாந்து (சீலையில் தடவிப் போடுதலால் இவ்வகையிலடங் கும்) இவை தவிரவும் கந்தக எண்ணெய் எனும் மருந்து சொறி சிரங் கிற்கு வெளிப்பூச்சாகப் பயன்படுத்தப்படுகிறது.

அறுகன்நெய், கந்தகச் சுடர்நெய் இவை நசியமாக வெளிமருந்து களாகவும் உள்மருந்துகளாகச் சில நோய்களுக்கும் கொடுக்கப்பட் டுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கது.

## பொதுவாக மருந்துகள் செய்யப் பயன்படுத்தப் படும் கருவிகள்

கல்வம், சுரண்டி, அகல், குப்பி (குடுவை), அடைப்பான், சலாகை, சட்டி, மூசை (குகை), சீலை, வாட்டி, மணல் விறகு, சுண்ணாம்பு, கரி, குழி, புடம், அடுப்பு, துருத்தி முதலியன.

## சுவடியில் பயன்படுத்தப்பட்டுள்ளவை

அடுப்பு, அயக்கரண்டி, உரல், உலை, கல்வம், களிமண், கிட்டி எனும் கருவி கும்பி நெருப்பு, கெசபுடம், சட்டி, சிமிழ், சிமிழி, சீகா சீலை, சீலைமண், மட்டக்கரண்டி, மைச்சிமிழ், விளக்கு, வெள்ளைச் சீலை முதலியன.

புடவகையில் குப்பையுள் புதைத்து வைத்தெடுக்கக் கூறும் 'குப்பை புடம்' இதுவரை எந்த நூலிலும் இல்லை. மற்றப் புடவகைகள், ஏற் றனவே, நூலுள், அடிக்குறிப்பில் காட்டப்பட்டுள்ளன.

## மருந்து கொடுக்கும் நாளளவு

நோயின் தன்மைக்குத் தக்கவும், மருந்துகளின் வீரியத்திற்குத் தக்கவும் ஒருவேளை முதல் ஒருமண்டலம் வரை கொடுக்கப்படும். நாட்பட்ட நோய்களின் 2 மாதம் முதல் 6 மாதங்கள், ஒரு வருடம் வரை கூடக் கொடுக்கப்படலாம்.

**சுவடியில்:** ஒரு வேளை முதல் 3 நாட்கள் 7 நாட்கள் ஒரு பட்சம் (15 நாட்கள்) அரை மண்டலம் (20 நாட்கள்) 35 நாட்கள், ஒரு மண்டலம் (40 நாட்கள்) முதலியவை மருந்துகளுக்கேற்ப கொடுக்கப் பட்டுள்ளன.

## மருந்து கொடுக்கும் அளவு

வாலிபருக்கு ஒருவேளை தரும் மருந்தின் அளவு 4.2 கி என்றால்
1-ஆண்டுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 35 மி.கி. அளவாகவும்
2-ஆண்டுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 525 மி.கி. வீதமும்
3-ஆண்டுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 700 மி.கி. வீதமும்
4-ஆண்டுகளுக்குட்பட்ட குழந்தைகளுக்கு 1.4 கி. அளவாகவும்
14 — ஆண்டுகளுக்குட்பட்ட குழந்தைகட்கு 2.1 கி. அளவாகவும்
20-ஆண்டுகளுக்குட்பட்டவர்களுக்கு 2.8 கி. அளவாகவும்
21 முதல் 60 வயது வரையுள்ளவர்களுக்கு 4.2 கி. வீதமும் கொடுக்க வேண்டும். (குணபாடம்-புத்தகத்தில் கிடைக்கும் குறிப்பு, தற்கால அளவையில் மாற்றிக் கொடுக்கப்பட்டுள்ளன).

இது மருந்தின் வீரியம், மருந்துண்பவரின் ஆரோக்யம், இவற்றையும் காலத்தையும் பொறுத்து மாறுபடும்.

## சுவடியில்

இங்குக் கொடுக்கப்பட்டிருந்த அளவைகள் யாவும் தற்கால அளவைக்கு மாற்றப்பட்டுப் பின்னிணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

பெரும்பாலும் பாக்களவு, சுண்டைக்காயளவு, மணிக்கட்லையளவு, தக்காளியளவு முதலியன பிற மருந்துகளுக்கும் கரண்டியளவு தைலங் களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வளவுகள் யாவும் தற்கால அளவையிலே கொடுக்கப்பட்டுள்ளன.

## அனுபானம்

இது 'துனைமருந்து' என்றும் வழங்கப்படும். தயாரிக்கப்பட்ட பல மருந்துகளை, ஏதேனும் ஒரு துணைமருந்துடன் கொடுத்தலே வழக்கம்.

இதற்குக் காரணம் கொடுக்கின்ற மருந்தின் செயல்படும் தன்மையை விரைவுபடுத்தும் தன்மை துணைமருந்துகளாகக் கொடுக்கப்படுபவைக்கு உண்டு. அதிக அளவில் பயன்படுத்தப்படும் அனுபானங்களைக் கீழ்க் காணும் செய்யுளில் அறியலாம்.

> "அனுபானத் தாலே யவிழ்தம் பலிக்கும்
> இனிதான சுக்குன் னவிஞ்சி - பினுமுதகங்
> கோமயம் பாலமுலைப்பால் கோநெய்தேன் வெற்றிலைநீர்
> ஆமிதையா ராய்ந்து செயலாம்"

இதன் பொருளாவது, அனுபானத்திலே அவிழ்தம் நோய்களைத் தீர்க் கும். சுக்கு, இஞ்சி, நீர் கோமூத்திரம், பால்-தாய்ப்பால், பசுநெய், தேன், வெற்றிலைச் சாறு முதலியவை அனுபானமாகக் கொடுக்கப்படும் மருந்துகளுக்கேற்ப ஆராய்ந்து கொடுக்கப்படத்தக்கவை என்பதேயாம். (உதகம்-நீர், அவிழ்தம்-பிணிகளை அவிழ்க்கும் தன்மை உடைய மருந்து) இவ்வாறு அனுபானப் பொருளாகப் பயன்படுத்தப்படும் பொருட்களே அவிழ்த்தமாகவும் பயன்படவல்லன. எடுத்துக்காட்டாகத் 'தேன்' ஓர் அனுபானம்! அதுவே அவிழ்தமாகவும் வழங்கவல்லது என்பதனை

> "அனுபான மாய்ப்பின் அவிழ்தமுமாய்த் தோன்றி
> கனமான தேகநிலைக்காட்டிப் - பினுமே
> அரசன் முதல்வோ ரையுமாட்டு வித்தாலே
> பிரசத்தினாற்போம் பிணி" (பிரசம் — தேன்)

என்ற பாடலினால் அறியலாம். இது மட்டுமின்றி இளகம் முதலிய பல மருந்துகளிலும் மருந்து செய்வதற்கும் தேன் பயன்படும்.

### சுவடியில் பயின்றுவருபவை

ஒரே அனுபானப்பொருளில் ஒரு நோய்க்கு ஒரு மருந்தினைக் கொடுக்கலாம்.

> "மாட்டும் காசெடை மாட்டு வெந்நீரிலே" (269)

என்ற பாடல் வரிகள் தூதுவேளை இளக்கத்திற்குக் காந்தச் செந்தூரம் அனுபானமாகக் கொடுக்கும்போது கபநோய்கள் தீரும் என்பதையும், 'பேதிக்குத் தேங்காய்ச்சாரம் (132-184)' என்ற மருந்து பஞ்சாமிர் தத்தில் 'குழப்பிக் கொடுக்கக் கர்ம வினைகளும் தீரும் என்பதை

''அரிய தேனிலது பழஞ் சர்க்கரை
பிரிய வெல்லம் பலாப்பழம் கொடுத்திட
சூரிய விட்டுக் குழப்பிக் கொடுத்திட
வீதியி லுள்ள வியாதியுந் தீருமே'' (184)

என்ற பாடல் விளக்குவதையும் இங்குக் கூறலாம். ஒரே மருந்து வெவ் வேறு துணை மருந்துடன் கொடுக்கப்படும்போது அத்துணை மருந்திற் கேற்ப வெவ்வேறு நோய்களைக் குணப்படுத்துதலும் உண்டு. எடுத்துக் காட்டாக,

... தீட்டி யேசுக்கு தேனிஞ்சிச் சாற்றினில்
கூட்டி யேயிரு குளிகை யுறைத்திடே (5)
உறைத்தி டசுர மோடி வொளித்திடுங்
கறைத்தி டுஞ்சூலை கட்டுகள் வாங்கிடும்
விறைத்தி டுஞ்சன்னி வெள்ளுள்ளித் தைலத்தில்
துறைத்தி டுமனு பான மறித்திடே (6)

என்ற பாடலின் மூலம் 'சுரம், சன்னி, பக்கசூலை இவற்றிற்கு வாள விரேசனக் குளிகை என்ற மருந்தினை இரு குளிகைவீதம் சுக்குத் தூளில் கொடுக்க சுரமும், தேனில் கொடுக்க சூலையும், இஞ்சிச்சாற்றில் கொடுக்கப் பேதிக்கட்டுகளும், வெள்ளுள்ளித் தைலத்தில் கொடுக்கச் சன்னியும் தீரும் என்பதையும்.

... மாடைச் சூரணம் அறுபது நாழிசென்
றேடைத் தயிர்தனி விட்டுக் கொடுத்திட
வாடை வீசு மதிசார சுரம்விடும்
சேடை யாஞ்சுரந் தேனிட வோடுமே (29)

என்ற பாடலின் மூலம், விடயாதிச் சூரணத்தைத் தயிரில் கொடுக்க அதிசார சுரமும், தேனில் கொடுக்கச் சுரமும் விடும் என்பதையும் குறிப் பிடலாம்.

இது மட்டுமின்றி வெளிப்பூச்சு மருந்துகள், கலிக்கம் முதலியவையும் தங்க அனுபானத்தில் இழைத்துப்பூசப் படுவதையும் காணலாம். எடுத்துக் காட்டாக,

...காவும் முலைப்பாலில் கண்ணி லுறைத்திடே (80) என்ற பாடல் வரியின் மூலம், வெங்கார மாத்திரையைத் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் கலிக்கமிடக் கண்ணோய்கள் தீரும் என்பதைக் குறிப்பிடலாம். இச்சுவடியில் காணும் வேறுசில அனுபானங்கள்

1. இஞ்சிச்சாறு (5, 245)
2. இஞ்சித் தேன் (37, 132, 134)
3. சுக்குக்குடிநீர் (136)

## பத்தியம்: (பொது நிலை)

சித்த மருத்துவ முறைகளில் மருந்துண்ணும் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கமே பத்தியமாகும். இது உணவு முறைகளிலும் செயல் முறைகளிலும் கடைபிடிக்கப்படுவதாகும். பொதுவாகப் பத்தியம் எனும் போது 'மருந்திற்கிசைந்த உணவு' என்ற போதிலும் இதில் தேகபலம் மருந்துபலம், பிணியின் உண்மை, தேகநிலைமை, தேகசுபாவம், கால பலம், சீதோஷ்ணநிலை முதலியவைகளை அனுசரித்து அதற்குத் தக்க படி இலகு பத்தியம், கடும் பத்தியம் இவற்றை நிர்ணயிக்க வேண்டும்.

பதிப்பாய்வேட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சுவடியிலும் இச்சாப் பத்தியம் கடும் பத்தியம், உப்பு நீக்குதல் முதலியன கூறப்பட்டுள்ளன. எனவே, அதுபற்றித் தெரிந்து கொள்ள வேண்டியதாகிறது

## இச்சாப் பத்திய விதி

"உலகி லிச்சாப் பத்தியங்கள் டூர்கூர மாங்கா
பலகி னனாமக் காய்கொத்தவரை - கலமமுனி
மற்றவகை கஷ்மாண்ட மாகடுகொள் ளென்றோது
மிந்தவகை நீத்துன் பதே"

**இதன் பொருள்:** இச்சாப்பத்தியம் என்பது முள்ளுள்ள பாகல், மா, கத்தரி, கொத்தவரை, வெள்ளைப்பூசனி, எனுமிவற்றின் காய்கள், அகத்திக் கீரை மந்தவகைப் பதார்த்தங்கள், கடுகு, எள் இவற்றை நீக்கி உண்பதாம் போகத்தையும் நீக்க வேண்டும் என்ற விதியுமுண்டு.[1]

## கடும்பத்தியம்

"கடுமை யென்றிடு பத்திய
மூவர்வறுத் துண்டல்
அடைவி லாமறு பத்தியத்
துவர்வறுத் தருந்தல்
கொடுமை செய்புளி தனைச்சுட்டுக்
கூட்டிட லன்றிப்
படியில் கத்தரி சிக்குருப்
பிஞ்சினைப் பருகல்"

**இதன் பொருள்:** கடும் பத்தியத்தில் வறுத்த உப்பைச் சேர்த்துக் கொள் ளலும், மறுபத்தியத்தில் வறுத்த உப்பு, சுட்ட புளி, கத்தரி, முருங்கைப் பிஞ்சுகளைச் சேர்த்துக் கொள்ளலுமாம்.

## மிகு கடும் பத்தியம்

''கடுமை மிக்கிடு பத்திய மட்புதுக் கலத்தில்
அழுகை செய்துண லுவரிநீர் புளிநிழ லுவரிகால்
படுகை மெய்யினி லிலாவகை படுத்திட லுவர்மண்
தொடுகை யாதிய நீக்குத லெனப்பலர் சொன்னார்''

**இதன் பொருள்:** மிகக் கடும் பத்தியத்தில் அரிசியைப் புதுமட் கலத்தில் உப்பின்றிச் சமைத்துண்ணல் வேண்டும். உப்பு, நீர், புளியமர நிழல், கடற்காற்று இவைகள் உடலில் படவுங் கூடாது. உவர்மண்ணைக் கையினாலும் தொடக்கூடாது என்பதாகும்.

## உப்பில்லாப் பத்திய விதி

''உப்பினா ளப்பானா ளோட்டுப்பண் பிண்போம்
ஒப்பினா டப்பானா ளாம்பிரமேற் - றுப்பினா
டொப்பிராப் பாரதம் துற்றதை லாதிகளுக்
குப்பிராப் பத்தியமி தோர்''

**இதன் பொருள்:** தனக்கு உவமையில்லாத பாதரசத்திற்கும், இது சேர்ந்த தைலவகை, இன்னபிற மருந்துகளுக்கும் உப்பில்லாப் பத்தியம் வைத்திய நாள் அளவும் மறுபத்தியமிருந்து பின்னாளில் உப்பு வறுத்துக் கூட்டி அதற்குப் பின்னால் முறையே ஓமப்பாலிட்டு மூழ்க்கி, புளி சேர்த்து, பசுவின் நெய் தேய்த்து ஸ்நாநம் செய்தல் வேண்டும்.

## பத்தியம் சொல்லாத நிலையில்

'மருந்து தின்றிடின் பத்தியம்
வகுத்திடா விடினும்
அருந்த வாகிடாப் பொருள்களை
யகற்றவே வேண்டும்
பொருந்திடாது பெண் போகமோர்
மருந்துக்கும் புவியில்
வருந்து வோருட லறிந்துபத்
தியந்தனை வகுப்பாய்'

**இதன் பொருள்:** மருந்துண்ணும்போது பத்தியம் கூறாவிட்டாலும் அருந்தக்கூடாத பொருள்களாகிய மா, பலா, வாழை, புகையிலை போன்றவைகளை நீக்க வேண்டும். பெண்போகம் கூடாது. நோயினால் வருந்துகிறவர் உடலுக்குத் தக்க பத்தியம் வைக்க வேண்டும்.

## பொதுவான பத்தியம்

"பத்தியங் கொண்ட பேர்கள்
பகற்றுயில் கொண்ட காலைச்
சித்தர பானு வெப்பஞ்
செப்பிடு மருந்தின் வெப்பம்
பந்தியச் செயலின் வெப்பம்
பகருநித் திரையின் வெப்பம்
இத்தனை வெப்பங் கூடின்
இயலுநோய்க் களவின் றென்னே"

**இதன் பொருள்:** மருந்துண்டு பத்தியமாய் இருப்பவர்கள் பகலில் தூங்கக்கூடாது. அப்படித் தூங்கின் அத்தூக்கத்தால் ஏற்படும் வெப்பம், சூரிய வெப்பம், மருந்தின் வெப்பம், பத்தியத்தின் வெப்பம் இவ்வளவும் உடலில் சேர்ந்து அளவிறந்த நோய்கள் உடலையணுகும். எனவே பத்தியம் கடைப்பிடித்தல் மிகவும் சிறப்பான இடத்தை வகிக்கிறது. பெரும்பாலும் வழக்கில் பத்திய நடைமுறை பத்திய உணவுமுறை என்ற இரு நிலைகள் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

**பத்திய நடைமுறை:** குளிர்ந்த காற்றிலீடுபடல், பெண்போகம் முதலியவற்றை நீக்குதலே பெரும்பாலான மருந்துகளுக்குச் சொல்லப்படுகிறது.

## பத்திய உணவு முறை

இரு நிலைகளில் கடைபிடிக்கப்படுகிறது.

1. சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவுப் பொருட்கள்
2. சேர்க்கக் கூடாத உணவுப் பொருட்கள்

இப்பத்திய முறை

1. உண்ணும் மருந்தின் குணத்தைக் குறைக்காத நிலையில் அமைகிறது.
2. மருந்தின் வீரியத்தை அதிகப்படுத்துவது.
3. மருந்தால் ஏற்படும் புதியகோளாறுகளைத் தடுக்கிறது.

4. மருந்தோடு ஆகாத பொருட்கள் சேர்ந்து விட்டால் நோயாளிக்கு ஏற்படும் ஆபத்து நிகழாவண்ணம் தடுக்கிறது.

பதிப்பு ஆய்வேட்டுக்காய் எடுத்துக் கொள்ளப்பட்ட சுவடியில், பல விடங்களில் உப்புநீக்கவும், புளிப்பு, கைப்பு, கவிச்சு நீக்கவும், பெண்மயில் பெரும்பூசணி, அகத்தி, புளி, புகை தள்ளவும், இச்சாப் பத்தியம், கடும்பத்தியம் காக்கவும் சொல்லப்பட்டுள்ளன. இவை சேர்க்கக் கூடாத உணவுப் பொருட்களுக்கு எடுத்துக்காட்டுகளாம். அவற்றில் சிலவற்றை இங்குக் காணலாம்.

1. ஆக்கிடு தினமப் போதுப் பில்லையே (45)

2. தாக்கி டுதின முவைந்து நாள்தனி
லாக்கி டும்பெரும் பூசனி யகத்தியும்
நீக்கி டுபிறழா நெறியுடன் பத்தியம்
போக்கி டும்புளி பெண்மயில் தள்ளிடே (59)

3. ஏகும் பத்திய முப்பில்லா தன்னமே (186)

இப்பாடல் வரிகள் உப்பு நீக்குதல், பெண்மயில், பெரும்பூசணி, அகத்தி முதலியவற்றை நீக்குவதைப் பத்தியமாகக் கூறுகின்றன.

சூளு மேபுளிக் கவிச்சு விறைந்திடே (70)

தாகுங் கவீச்சுப் புளிப்புத் தவிருமே (97)

இப்பாடல் வரிகள் புளிப்பு, இறைச்சிவகையை நீக்குவதைப் பத்தியமாக உணர்த்துகின்றன.

'கரைக்கும் பத்தியங் கைப்பு வெடித்திடே' (159)

'கரைக்கும் பத்தியங் கைப்புத் தவீரயே' (208)

என்ற வரிகள் கைப்புச்சுவை நீக்குதலையும்,

'போகும் பத்தியம் புளிபுகை மாற்றிடே' (274)

'போக்கிடும் புளி பெண்மயில் தள்ளிடே' (59)

என்ற பாடல்வரிகள் புளி, புகை, பெண்மயில் நீக்குதலையும்,

'போமே யிச்சாப் பத்திய முண்டிடே' (122)

'கடும் பத்தியங் காருங்கை கண்டதே' (127)

என்ற பாடல்வரிகள் இச்சாப்பத்தியம், கடும்பத்தியத்தையும் வலியுறுத்துகின்றன.

சுவடியில் சில இடங்களில் சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவுப் பொருட்கள் பற்றிய குறிப்பும் கிடைக்கிறது. உப்பு வறுத்துச் சேர்த்தல், சுரைபுளி சேர்த்தல், கோழி மிளகுநீர் சாதம், ஆவின் நெய்மோர் பால், இளநீர் சாதம், மோரும் பழஞ்சோறும், வெண்ணெய், தயிர்க் கதலி முதலியவற்றை உணவில் சேர்த்தலும் கூறப்படுகின்றன. இத்தனைப் பின்வரும் பாடல் வரிகளால் அறியலாம்.

நிலத்து ஆவின் மோர்நெய்பால் வெண்ணெயுங்
கலந்து மேதயிர்க் கதலியும் உண்டிடே (22)

பாங்கு மோரும் பழஞ்சோறு முண்டிடே 63

மெய்ப்பா பத்திய மிளநீர் சாதமே (66)

முறையுங் கோழி மிளகுநீர் சாதமே (161)

ஆகும் பத்திய முப்பு வறுத்திடே (212)

கரையுஞ் சோகை சுறாக்கருவாடு சேருமே (225)

மாக்கும் ஆவின்நெய் மோபா லருந்துமே (227)

இவற்றை அவ்வம்மருந்துண்ணும் காலங்களில் உட்கொள்ள, எடுத்துக் கொண்ட மருந்தின் செயல்படும் தன்மை அதிகப்படும்; வீரிய மருந்து களாயின் பக்க விளைவுகள் தடுக்கப்படும்.

# தேரையர் அந்தாதி

### [1]குலைஎரிவு, காலெரிவு, கை எரிவுக்கு[2] (நிம்பழ இளகம்)

1. அல்ல வே[3]பழ மாறுவ தக்கியே
மல்ல வேரசம் வாங்கிநற் சீரகம்
செல்ல வேபலஞ் சேருமி ளகொடு
வல்ல வேவாய் விளங்கமுஞ் சே(ர்)த்திடே.

2. சே(ர்)த்தி டுசிறு நாகப்பூ ச(ர்)க்கரை
காத்தி டுவகைக் கொருக ழஞ்செடை
யேத்தி டுகத லிக்கிழங் குரசம்
பாத்தி டுபசும் பாலூற விட்டிடே.

3. விட்டி டுயிது வெல்லா மரைத்துடன்
தொட்டி டுமிரு போதுமோ ரெட்டுநாள்
கட்டி டுகுலை கைபாத மெரிவொடு
பட்டி டுமெரி வும்படச் சாடுமே.

எலுமிச்சம்பழம் - 6 எடுத்து, வதக்கிச் சாறு பிழிந்து, அதில்

| | |
|---|---|
| நற்சீரகம் | வகைக்கு 35 கிராம் |
| மிளகு | |
| வாய் விளங்கம் | |

| | | |
|---|---|---|
| சிறுநாகப்பூ | வகைக்கு கதலிக்கிழங்குரசம் | இவை தேவையான |
| சர்க்கரை | 5.1 கிராம் பசும்பால் | அளவு |

அளவு எடுத்து, அனைத்தையும் ஒன்றாய்க் கலந்து, நன்கு உறவாகுமாறு அரைத்து, எடுத்துக் கொண்டு, 8-நாட்கள், 2-வேளை (2-5கி. வீதம்) உண்டு வர, குலை, கை, பாதம் இவற்றில் காணும் எரிச்சல் தீரும்.

### [4]சுரம், சன்னி, பக்கசூலை (இவற்றிற்கு வாள) விரேசன குளிகை

4. ஆடு மேரசங் கெந்திவெங் காரமு(ம்)
நாடு மேசுக்கு நான்குஞ் சமனெடை
வாடு மேசுத்தி வாளமுஞ் சேர்சமன்
ப(ா)டு மேபழச் சாற்றினா லாட்டிடே.

5. ஆட்டி யேயிரு சாமம ரைத்தபின்
மூட்டி யேமணி மிளகது போலவுந்
தீட்டி யேசுக்கு தேனிஞ்சி(ச்) சாற்றினில்
கூட்டி யேயிரு குளிகை யுறைத்திடே.

6. உறைத்தி டசுர மோடிவொ வித்திடுங்
கறைத்தி டுஞ்சூலை கட்டுகள் வாங்கிடும்
விறைத்தி டுஞ்சன்னி வெள்ளுள்ளி(த்) தைலத்தில்
துறைத்தி டுமனு பானம றிந்திடே.

இரசம், சுக்கு, கந்தகம், சுத்தித்த வாளம், வெங்காரம் — இவை 5-ம் சமஎடை, எலுமிச்சம்பழச்சாறு — தேவையான அளவு இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, 6-மணி நேரம் அரைத்து,[5] 100 மி.கி. அளவுள்ள குளிகைகளாக உருட்டி, உலர்த்தி வைத்துக்கொண்டு, 2-குளிகை வீதம் சுக்குத் தூளில் கொடுக்கச் சுரமும், தேனில்[6] இழைத்துக் கொடுக்கச் சூலையும் இஞ்சிச் சாற்றில் கொடுக்கக் கட்டுகளும் வெள்ளுள்ளித் தைலத்தில் கொடுக்கச் சன்னியும் தீரும்.

## [7] (சுரம், சன்னி, வாதநோய்களுக்குப்) பூரக்கட்டு — I

7. அறிந்தி டுவேளை ஆழாக்குச் சார்தனில்
உறைந்தி டும்பூர மோர்பல மேவிடு
முறிந்தி டரவி முன்னான்கு சாமம்வை
கறைந்தி டப்பூரங் கட்டுங்கை கண்டதே.

பூரம் — 35 கி., வேளைச்சாறு — 168 மி.லி. இவற்றைக் கலந்து, சூரியபுடமாய் 12-மணி நேரம் வைத்தெடுக்கப் பூரங்கட்டும் (இதைத் தேனில் இழைத்து [8] 30-60 மி.கி.வீதம் கொடுக்க, சன்னி, சுரம், வாதநோய்கள் தீரும்.

## (சன்னிக்கு)[9] இலிங்கக்கட்டு — I

8. கண்டுமே தேனுங் கால்படி யாமதில்
வண்டுமே பூவர சங்காய்ச் சார்சமன்
கண்டுமே லிங்கஞ் சுருக்கிட சாம(ம்)நால்
அண்டுமே சன்னி யடங்கிடக் கட்டுமே.

இலிங்கம் — (35 கி.), தேன் — 325 மி.மீ. பூவரசங்காய்ச் சாறு — 325 மி.லி. தேன், சாறு இரண்டையும் கலந்து கொண்டு இலிங்கத்திற்கு 12-மணி நேரம் [10]சுருக்குக் கொடுக்கக் கட்டாகும். (இதைத் தேனில் இழைத்து 30-60 மி.கி. வீதம் கொடுக்கச் சன்னி நீங்கும்).

## (இரசவாதத்திற்கும், சன்னிக்கும் இலிங்கக்கட்டு — II)

9. கட்டு மேலிங்கங் காட்டாமணக் கன்பால்
விட்டு மேசுருக் கிட்டிடு மூன்றுநாள்
வெட்டு மேலிங்கம் வேதைக்கு மாயிடும்
பட்டு மேசன்னி [11]பதி(ன்)மூன்றுக் காகுமே.

இலிங்கம் — [12]35கி., காட்டாமணக்கன்பால் — தேவையான அளவு இலிங்கத்திற்கு, மேற்படி பால் சிறுகச்சிறுக விட்டு மூன்று நாட்கள் சுருக்குக் கொடுக்கக் கட்டும். (தேனில் இழைத்து 30-60 கி. வீதம் கொடுக்கச்) சன்னி — 13-ம் தீரும்; இரசவாதத்திற்கும் இது ஆகும்.

## தாளகக்கட்டு, வீரமெழுகு

10. ஆகு மேமஞ்ச ணாத்திக்கா யார்பலம்
மாகு மேயரைத் மதயதை(க்) கவசம்
ஆகு மேல.. ... .... .... ..... ....
.... ..... ...... ..... ..... .... .....

(மூன்றாவது ஏடு இல்லாததனாலும், ஒப்பீட்டுச் சுவடிகள் ஏதும் கிடைக்காமையினாலும் 10-முதல் 15-வரையிலான 6-பாடல்கள் விடுபட்டுள்ளன.)

## சகலவியாதி(களு)க்கு(ம்) கந்தக ரசாயன மருந்து

16. கேளு மேசுத்தி கந்தக மார்பலம்
தேளு மேதிரி கடுகுந் திரிபலை
வாளு மேவாய் விளங்கமு மேலமுந்
தாளு மேசீடி சந்தன லவங்கமே.

17. மேவுஞ் சித்திர மூலங் கடலையுங்
காவும் வெட்பாலை கார்போகி வித்துடன்
சேவும் [13]நீர்வெட்டி [14]சீனியாம் பட்டையும்
ஒவு மேவகைக் கோர்பலம் வாங்கிடே.

18. வாங்கி யேயிடித் தேவடி கொண்டபின்
தேங்கி யேசமன் சர்க்கரை சேர்த்துடன்
மாங்கி யாவின்நெய் வார்த்துப் பிசையுமே
ஓங்கி யேவுரல் இட்டுநி ரப்பிடே.

19. இட்டுப் பாருர சாயனப் பக்குவந்
தொட்டுப் பா(ர்)த்தெடு தோத்திரஞ் செய்திடு
மட்டு மேயிரண்டு வேளைக்கு மாடையாம்
விட்டு மேயோடும் வியாதியைப் பாருமே.

20. பாரு மேகுட்டம் பதினெட்டு*1 மேகிடும்
நாறு மேகிராணி நால்வகை ரோகமும்
மாறு மேமூல மறுபத்து நால்சுரம்* 2
கோறு மேகுன்ம மெட்டும்*3 பறக்குமே.

21. பறக்கு மேவாத மெண்பத்து நான்குடன்*4
துறக்கு மேகாச விடபாகத் தூக்கமும்
தரிக்கு மேவயிற் றுள்நோய் தலைநோயும்
பரிக்கும் மூத்திர பவுத்திரச் சிலந்தியே.

22. சிலந்தி யோனி(க்) கவுசி யிதுமுதல்
தொலைந்து வோடுந் துடியுள்ள பத்தியம்
நிலந்து யாவின் மோர்நெய்பால் வெண்ணெயுங்
கலந்து மேதயிர்க் கதலியும் உண்டிடே.

சுத்தி செய்த கந்தகம் — 210 கி.

| | | | |
|---|---|---|---|
| திரிகடுகு | சித்திர மூலம் | திரிபலை | |
| கடலை | வாய்விளங்கம் | வெட்பாலை | இவை வகைக்கு |
| ஏலம் | கார்போகவித்து | சந்தனம் | 35 கி. |
| நீரடிமுத்து | இலவங்கம் | சீனப்பட்டை | |

அனைத்தையும் ஒன்றாகக் கலந்திடித்துச் சலித்து, எவ்வளவு சூரணமோ அவ்வளவு எடை, சர்க்கரை கலந்து, தேவையான அளவு பசுநெய் வார்த்துப் பிசைந்து, உரலிலிட்டு இடித்து இரசாயனப் பக்குவத்தில் எடுத்து வைத்துக் கொண்டு, இறைவனை வணங்கித் தினமும் இரு வேளை, 65 மி.கி. வீதம் (40-நாட்கள்) உண்டுவர குட்டம்—18, கிராணி—4, சுரம்—64, குன்மம்—8, வாதம்—84, மூலம், காசம், விடபாகத் தூக்கம், வயிற்றுநோய், தலைநோய், மூத்திர நோய்கள்,

பவுந்திரம், சிலந்தி, யோனித் துர்நாற்றம் முதலியவை தீரும். இம் மருந்துண்ணும் காலத்தில் (உடல் சூடு அதிகமாவதால், அதனைத் தணிக்கப் போதுமான அளவு) பசுவின் மோர், நெய், பால், வெண்ணெய், தயிர் கதலி, வாழைப்பழம் இவற்றை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## (அதிசாரம், கிராணி, வாய்வுகளுக்கு விடயாதிச் சூரணம்)

23. உண்டி டவதி விடையமுக் கழஞ்சுதான்
திண்டு சுக்கிரு திப்பிலி யீர்[15] கழி
கண்டு மிளகு கழஞ்செடை யாமதில்
அண்டு லவங்க மாறு கழிஞ்சிடே.

24. இடவு மேலக்கா யிரண்டு கழஞ்சுதான்
எடையு(ம்) நாற்கழி நெல்லிப் பரு(ப்பு)மே
எடையுஞ் சீரக மீரொன்று கழஞ்சுதான்
அடையுங் காசெடை யிரண்டுதா ன்வனியே.

25. அவனி காசெடை யிரண்டுசாத பத்திரி
புவனி செண்பகப் பூவிரு கழஞ்சுதான்
பவனி யிந்தம ருந்தெல்லாம் பாதியும்
அவனி பாதிமுள் ளிலவம் பிசினியே.

26. பிசினி யோடிம் மருந்தெல்லாம் பிசரியே
பசுவின் நெய்தெளித் தேபத மாய்வறு
கசினி யாயிடித் தேவடி சூரணம்
வசனி யோடிரு வேள்ளைக்கு மாடையே

27. மாடைச் சூரணம் அறுபது [16] நாழிசென்
றேடை(த்) தயிர்தனி விட்டுக் கொடுத்திட
வாடை வீசு மதிசார சுரம்விடும்
கேடை யாஞ்சுரந் தேனிட வோடுமே.

28. ஓடுஞ் சுரமதி சாரமுந் தோசமும்
பாடுங் கிராணி சயபாண்டுக் கிராணியும்
மூடும் வாய்வுகள் மூலக் கிராணியு(ம்)
ஓடுமே யிரத்த மூலக் கிராணியே.

29. [17]கிராணி யோடதி சாரமு வெட்டுடன்
திராணி யவிட்டக் கதிரவன் போலவே
திராணி யாமவர் **தேரையர்** தம்மொழி
புராண வேதமும் பொய்யல்ல பா(ர்)த்திடே.

| | | | |
|---|---|---|---|
| அதிவிடையம் | — 15.3 கி. | நெல்லி | — 16.4 கி. |
| சுக்கு | — 10.2 கி. | சீரகம் | — 10.2 கி. |
| [18]இருதிப்பிலி | — 10.2 கி. | சாதிப்பத்திரி | — 10.2 கி. |
| மிளகு | — 5.1 கி. | செண்பகப்பூ | — 10.2 கி |
| இலவங்கம் | — 30.6 கி. | முள்ளிவலம்பிசின் | — 128.6 கி. |
| ஏலக்காய் | — 10.2 கி. | | |

எல்லா மருந்துகளையும் ஒன்றாகக் கலந்து பசுநெய் தெளித்துப் பதமாக வறுத்துப் பின் இடித்துச் சூரணம் செய்து கொண்டு, 24-மணி நேரம் கழித்து எடுத்து, காலை மாலையாகிய இருவேளையும் 65 மி:கி. வீதம் தயிரில் அனுபானித்துக் கொடுக்க அதிசாரசுரம், சுரம், அதிசாரம், தோசம், கிராணி சயபாண்டுக்கிராணி, வாய்வுகள், மூலக்கிராணி, இரத்தமூலக்க்கிராணி, அதிசாரம்-8 யாவும் தீரும். தேரையர் கூறும் இம்முறை புராணவேதம் பொய்க்காது என்பது போலப் பொய்க் காதாம்.

## (கட்டிக்குப் பச்சரிசிப் பற்று)

30. பா(ர்)த்திடு நெல்(லின்) பச்சை யரிசியுங்
காத்தி டெருமைக் காஞ்சொரி யாளிலை
சே(ர்)த்தி டுங்காடி சிறுகவே விட்டரை
ஆத்தி டுங்கட்டி யதன்மே லறைந்திடே.

நெல்லின் உமி நீங்கிய பச்சரியும், எருமைக் காஞ்சொரியிலையும், ஆளியிலையும் சேர்த்துக் காடிவிட்டு அரைத்துக் கட்டியின் மேல் பற்றிட ஆறும்.

## (அரையாப்பு, கட்டிக்குப் புளியங்கொட்டைப் பற்று)

31. அறையுங் காய மனோசிலை சிங்கியும்
அறையும் [19-21]பனிவ கையுமே கால்பலம்
நிறையும் ஆளிவே ரடுநீர் மூவரைப்பலம்
தறையு மேசுட்ட சாம்பல் நாயுருவே.

32. உருவி(ச்) சாம்ப லொன்றுமே யோர்பலம்
குருவி யுளிக்கொட்டை(க்) கூழுமே யோர்பலம்
விருவி யிதுவெல்லாம் விட்டரை நற்சலம்
மருவி யேதட்டி வைத்திடும் வில்லையே.

33. வில்லை யேபழச் சாற்றினில் விட்டிழை
மெல்லி யேபற்று மீட்டிடு கட்டிமேல்
மல்லி யேவரை யாப்பு மறைந்திடுங்
கல்லு மேகட்டி கறையுங்கை கண்டதே.

| | | |
|---|---|---|
| காயம் | மிருதார்சிங்கி | வகைக்கு 8.75லி. |
| மனோசிலை | பனிநீர் | |

ஆளிவேர் ஊறல் குடிநீர் — 52.5 கி.
நாயுருவி சுட்ட சாம்பல் — 35 கி.
புளியங்கொட்டைக்கூழ் — 35 கி.

இவற்றை நற்சலமிட்டு அரைத்து, வில்லை தட்டி உலர்த்தி வைத்துக் கொள்ள வேண்டும். இவ்வில்லையைப் பழச்சாற்றினில் இழைத்துக் கட்டிமேல் பற்றிடக் கட்டியும், அரையாப்பு மேல் போட அரையாப்பும், மறைந்திடும். இது கைகண்ட செய்முறையாகும்.

## (மாந்தம், தோசம், தாகத்திற்குச் சீந்திலாதி மாத்திரை)

34. கண்டு சீந்தி(ல்)உத் தாமணி அவுரிவேர்
அண்டு பெருங்கிழங் காமையோ டுசமன்
விண்டு வெந்நீரில் விட்டரை சாமநால்
பண்டு மாத்திரை பருங்குன்றி யாகுமே.

35. ஆகு மேமுலைப் பாலில் அருந்திட
சோக மேசுர தோசமு(ம்) மாந்தமும்
வாகு மேநா வறட்சியுந் தாகமும்
போகு மேவாலை தோசமுஞ்[22] சூதமே.

| | | |
|---|---|---|
| சீந்தில் | பெருங்கிழங்கு | |
| உத்தாமணி | ஆமையோடு | இவை சமஎடை |
| அவுரிவேர் | | |

எடுத்து வெந்நீர் விட்டு 12-மணி நேரம் அரைத்து 130 மி.கி. அள வுள்ள மாத்திரைகளாக உருட்டி வைத்துக்கொண்டு, ஒரு மாத்திரை வீதம் தாய்ப்பாலில் கொடுக்கச் சுரம் **தோசம், மாந்தம், நாவறட்சி, தாகம்,[22] வாலைதோசம் முதலியன தீரும்.

## (சுரம், சுகசன்னி, தோசத்திற்கு ஆனந்த வயிரவன்)

36. சூத(ம்) நாபிம னோசியை கந்தகம்
சாதி லிங்கவெங் காரஞ் சமனெடை
நீதி நிம்பழச் சாற்றி(னி) லரைத்திட
ஆதி யானந்த வயிரவ னாகுமே.

37. ஆகு மேசுர மறுபத்து நான்குடன்
போகு மேசுக சன்னியுந் தோசமும்
ஏகு மேயிஞ்சித் தேனி வருந்திட
தாகு மேயலு பானமுஞ் சாதியே.

| | | |
|---|---|---|
| பாதரம் | கந்தகம் | |
| நாபி | சாதிலிங்கம் | இவை சமஎடை |
| மனோசிலை | வெங்காயம் | |

எடுத்து எலுமிச்சம் பழச்சாற்றிலிருந்து, (65 மி.கி., அளவுள்ள மாத்திரைகள் செய்து, ஒரு மாத்திரை வீதம் இஞ்சித் தோலில் கொடுக் கச் சுரம் — 64, சுகசன்னி, தோசம் இவை நீங்கும்.

## (கணம், மாந்தம், பொருமலுக்கு வாலசஞ்சீவி)

38. சாதி லிங்கவெங் காரஞ் சமனெடை
தீதி லாதிரி கடுகுமே சேர்சமன்
நீதி யாயரை நிம்பழச் சாற்றினால்
ஆதி யாம்வாலை சஞ்சீவி யாகுமே.

39. ஆகு மேமணி மல்லிப்பிர மாணமாம்
வேகு வெந்தியம் வெட்பூலா(க்) கசாயத்தில்
போகு மேகண மாந்தப் பொருமலும்
பாக மேயனு பானத்தில் மாட்டிடே.

40. மாட்டு நாய்வேளை வசம்புவெள் ளுள்ளியும்
மூட்டு ஓமமுஞ் கடுகு[23]டன் வெந்தயம்
வாட்டுங் கசாயமும் வாலசஞ் சீவியால்
ஓட்டு மாந்தங்க ளுட்புகுந் தோடுமே.

சாதிலிங்கம் திரிகடுகு இவை சமஎடை
வெங்காரம்

எடுத்து எலுமிச்சம்பழச் சாற்றினாலாட்டி, 50 மி.கி. அளவுள்ள மாத்திரைகள் செய்து, ஒரு குளிகை வீதம், வெந்தயத்தையும், வெட்பூலாவையும் சமஎடை எடுத்துக் குடிநீரிலிட்டு அதில் கொடுக்கக் கணம், மாந்தம், பொருமல் முதலியனவும்.

நாய்வேளை, வெள்ளுள்ளி, வசம்பு, ஓமம், திரிகடுகு, வெந்தயம் முதலியவற்றைச் சமஎடை எடுத்துக் குடிநீரிலிட்டு அதில் கொடுக்க மாந்தங்களனைத்தும் தீரும்.

### (இரத்தக் கணங்களுக்குச் சஞ்சீவிப்பால்)

41. ஓடும் வில்வப் பழமுத்தக் காசுடன்
போடு யிரண்டையும் பிட்டவித் தேபிழி
பாடுஞ் சஞ்சீவி(ப்) பாலையு ரைத்திடில்
சாடு மிரத்தக் கணங்களைத் தாக்குமே.

வில்வப் பழம், இவை சமஎடை எடுத்துப் பிட்டவித்துப்
முத்தக்காசு

பிழிந்த, சஞ்சீவிப்பாலை (15-30 மி.லி. வீதம்) கொடுக்க இரத்தக் கணங்கள் தீரும்.

### (சுரங்களுக்கு நொச்சியாதிப் பிட்டவியல்)

42. தாக்கு மேநொச்சு துளசிகஞ் சாங்கோரை
தூக்கு கையானுந் தூதுவே ளாதண்டை
நீக்கு விட்ணுவின் காந்திச் சமூலமும்
போக்குஞ் சுரங்களும் பிட்டவி மாற்றிடே.

நொச்சி தூதுவேளை
துளசி ஆதண்டை இவை சமஎடை
கஞ்சாங்கோரை விட்ணுகிரந்திச்சமூலம்
கையாந்தகரை

சேர்த்துப் பிட்டவியல் செய்து கொடுக்கச் சுரங்கள் யாவும் தீரும்.

## (பாண்டு, சோகை, பெருவயிறுக்குச் சங்கனாதிப்பாயாசம்)

43. மாற்று மேசங்கு மருளுக் கிழங்குடன்
சே(ர்)த்து மேசிறு வழுதலை சேர்சமன்
பா(ர்)த்து யிடிமூ வைந்து பலமதாய்
வா(ர்)த்து மேசலம் வையுங் கசாயமே.

44. மேவுங் கசாய மோர்படி யாமதில்
சேவுந் தினைகுத்தி(த்) தீட்டியே கால்படி
மேவும் உலைகட்டி(யே) விட்டெரி கஞ்சியாம்
பாவும் பனைவெல்லம் பலமிரண்டு தாக்கிடே.

45. தாக்கி டுவெள் ளாட்டுப்பா லுழக்குடன்
பாக்கி டுபதம் தப்பாமல் பாயாசம்
ஆக்கி டுமூன்று நேரமு மைந்துநாள்
ஆக்கி டுதின மப்போதுப் பில்லையே.

46. இல்லையே *5 பாண்டு யிருமூன்றும் போய்விடும்
கொல்லையே பித்தச் சோகையு(ம்) மாறிடும்
வல்லையே கட்டி வயிற்றினில் நீர்விடும்
சொல்லுமித் தேரையர் சொற்படி தப்பாதே.

| | | |
|---|---|---|
| சங்கன் | சிறுவழுதலை | இவை வகைக்கு |
| மருட்கிழங்கு | | 175 கி. |

இவற்றை ஒன்றிரண்டாய்த் தட்டிப்போட்டுக் குடிநீரிட்டு 1.3 லி. குடிநீரில் தினையரிசி மாவு 325 மி.லி. சேர்த்து உலைகட்டி எரிக்கக் கஞ்சியாகும். அதில் பனைவெல்லம் — 70 கி. சேர்த்து வெள்ளாட்டுப் பால் 336 மி.லி. கலந்து, பாயாசமாக்கி, மூன்றுவேளை 5 — நாட்கள் உண்ண வேண்டும். இந் நாட்களில் உப்பில்லாப் பத்தியம் மேற் கொள்ள, பாண்டு — 6 வகை, பித்தசோகை வயிற்றில் கட்டியைத் தொடர்ந்துவரும் நீர்ப்பெருவயிறு யாவும் தீரும். தேரையான் இம்முறை ஒருபோதும் தவறாது; நல்ல பயன்தரவல்லது.

## (பாண்டுவிற்கு 24மூலவேர்க் கூழ்)

47. தப்பா தின்னமும் சாற்றுறேன் மூலவேர்
வைப்பா பலமைந்து மைப்போ லரைத்திடு
அப்பா லேவரு 25மாவது(டன்) கால்படி
ஒப்பா *நற்சல மிட்டுக் கரைத்திடே.

48. கரையு மேவுலை கட்டிக்கூழ் ஆக்கியே
நிறையு மே[26] (யிப்படி)தினமூன்று நேரமும்
உறையு மேகூ ழுப்பில்லா துண்டிட
மறையு மேபாண்டு மைந்துநாள் தன்னிலே.

மூலவேர் — 175 கி

நற்சலம் — 325 மி.லி.

மூலவேரினை முதலில், நன்கு மைபோலரைத்துப்பின் 325 மி.லி. நற்சலத்தில் அதனைக் கரைத்து, உலையிலிட்டுக் கூழாக்கித் தினமும் இதுபோல் மூன்று வேளையும் 5-நாட்கள் கொடுக்க வேண்டும். இந்நாட்களில் உப்பில்லா உணவுண்ணப் பாண்டு மறையும்.

## (அக்கினி மந்தம், மலம் தீய்தல், பொருமலுக்கு 'நிலப்பனை இளகம்')

49. நில்லு நால்பலம் நிலப்பனை யாவாரை[27] யிலை
மெல்லு நால்பல(ம்) முடக்கத்தா விலையுமே
தில்லு யெள்ளு மிருபலஞ் சே(ர்)த்திடு
நெல்லு(ப்) பொரியுட(ன்) நேர்பல மிரண்டுமே.

50. மேவும் பனைவெல்ல மிருநான்கு மிரண்டுமே
ஊவு முன்னிலை யுரலில் இடித்திடு
ஏவு மெள்ளை யிதன்பின் னிடித்திடு
மாவு நெற்பொரி யதன்பின் னிடித்திடே.

51. இட்டு நான்கும் இழைய விடித்தபின்
வெட்டு வெல்ல மிட்டு யிடித்திடு
ஒட்டும் பிசினியும் போலது வானபின்
கட்டுங் கம்பி கதிர்முனை யாகுமே.

52. ஆகும் பதமும் அறிந்தெடு சட்டியில்
வேகு மிரண்டு வேளைக்கு(ப்) பாக்கெடை
வாகு மல(ம்)வற்ற லக்கினி மந்தமும்
ஏகும் பக்க விரைவாத யிசிவுமே.

53. [28]வாத முங்குடல் வயிற்றி ரைச்சலும்
சாத முஞ்சேரி யுாதவ ரோசகம்
போத முங்கெடு பொருமு லுப்புசமும்
தாது விட்டுத் தலைகிழிஞ் சாடுமே.

| | | |
|---|---|---|
| நிலப்பனைக் கிழங்கு | வகைக்கு எள் | வகைக்கு |
| ஆவாரையிலை | 140 கி. நெற் | 70 கி. |
| முடக்கத்தானிலை | பொரி | |

பனைவெல்லம் — 310 கி. முதல் மூன்று மருந்துப் பொருட்களையும் உரலிலிட்டு இடித்துத் தூளானபின் எள், அதன்பின் நெற்பொரி இவற்றைச் சேர்த்திடித்து, இறுதியாகப் பனைவெல்லம் கலந்திடித்துப் பிசின் போலானபின் எடுத்து மண்பாத்திரத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இதனை இருவேளை, 2-5 கி. வீதம் உண்டு வர மலம் தீய்ந்து வற்றிப் போதல், அக்கினிமந்தம், விரைவாதம் இசிவு, குடல், வயிற்றிரைச்சல், சாதமுஞ் செரிக்காமையினால் ஏற்படும் அரோசகம், பொருமல், வயிற்றுப்பிசின் யாவும் தீரும்.

## (வீரியவிருத்தி, இரத்தபலத்துக்கு முருங்கைப்பூ இளகம்)

54. சாடுங் கஞ்சா(ச்) சடைபல மைந்துடன்
மூடும் முருங்கைப் பூவெட்டு நால்பலம்
ஆடும் முருங்கை யதன்பிஞ்சு பூபலம்
வாடுஞ் சட்டியில் மூன்று வகையுமே.

55. மேவு மாவின்பால் விடுபடி மூவரை
காவு மூவரை கா(ய்)ச்சுமா பூாக்குடன்
மூவுங் கூட்டி முறுக்கிப் பிழிந்திடு
ஆவுநெய் ச(ர்)க்கரை ஐ(யி)ரண்டு பலமதே.

56. பலம தாய்க்கா(ய்)ச்சு பாகு பதமுடன்
சலம தாயெடு சாதிக்காய் பத்திரி
நிலம தாயேல நீர்முள்ளி விரையுமே
வலம தாய்வகைக் கேபல மிரண்டுமே.

57. இரண்டு மேயிடித் தேவடி சூரணம்
பண்டு மேகாயும் பாகதிற் றூளியே
கண்டி யேகிரு பைகள் தப்பாமல்
கண்டு மேபிசின் கம்பிபோ லாகுமே.

58. ஆகு மேயிரண்டு வேளைக்கு மாடையாம்
பாக் மேபசும் பாலன்ன முண்டிட
வேகும் வீரிய விருத்தியு முண்டாகுந்
தாகு மேயிரத்த பலமுண்டாந் தாக்கிடே.

59. தாக்கி டுதின மூவைந்து நாள்தனில்
ஆக்கி டும்பெரும் பூசணி யகத்தியும்
நீக்கி டுபிறழா நெறியுடன் பத்தியம்
போக்கி டும்புளி பெண்மயில் தள்ளிடே.

| | |
|---|---|
| கஞ்சாச்சடை | — 175 கி. |
| முருங்கைப்பூ | — 1120 கி. |
| முருங்கைப்பிஞ்சு | — 1120 கி. |
| பசும்பால் | — 1.95 லி. |

இவற்றை ஒன்றாகக் கலந்து காய்ச்சி, 168 மி.லி. ஆகச் சுருக்கிப் பிழிந்து வடித்தெடுத்து அதில் பசுநெய் — 350 கி., சர்க்கரை 350 கி. இரண்டும் சேர்த்துக் காய்ச்சிப் பாகுபதத்தில் எடுத்து அதில்

| | | |
|---|---|---|
| சாதிக்காய் | ஏலம் | வகைக்கு 70 கி. |
| சாதிப்பத்திரி | நீர்முள்ளிவிதை | |

எடுத்திடித்துச் சூரணம் செய்து, தூவிக் கிண்டக் கம்பி பதமாகும். இப்போது எடுத்து வைத்துக் கொண்டு 65 மி.கி. வீதம், இரு வேளை உட்கொண்டு பாலன்னம் அருந்தி வர 15-நாட்களில் இரத்த விருத்தியும், வீரிய விருத்தியும் உண்டாகும். பெரும்பூசணி, அகத்தி, புளி, பெண்போகம் இவற்றைத் தவிர்க்க வேண்டும்.

## (பேதிக்கட்டி, குன்மம், வாதத்துக்கு அகத்திநெய்)

60. தள்ள கத்திலைச் சாறு படியுரி
வெள்ளா வின்நெய் விடுஞ்சட்டியா ழாக்குடன்
கொள்ளா விரண்டுங் கூட்டி யெரித்திடு
தெள்ளக் கடுகு திரள வடித்திடே.

61. இடுங்க டுகையெ டுத்திடு மாடையாங்
கொடுக ரண்டிநெய் கூட்டி விழுங்கிட
விடுமரை[31] நாழியில் வெந்நீர் கொடுத்திடு
கடுவுடன் பேதி(க்) கட்டுகள் வாங்குமே.

62. வாங்கு வயிற்றில் வலிகுன்ம(ம்) மாறிடும்
பாங்கு மோரும் பழஞ்சோறு முண்டிட
தாங்கு மெட்டுநாள் தடையிலா துண்டிட
தேங்கு வாதந் திசைகெட்டு வோடுமே.

அகத்தியிலைச் சாறு — 2. லி.

ஆவின்நெய் — 168 மி.லி.

இரண்டையுங் கலந்து காய்ச்சிக் கடுகு திரள வடித்தெடுத்து, கிடைக்கும் கடுகில் 65 மி.கி. எடுத்து 16 மி.லி. அகத்தி நெய்யில் கலந்து கொடுத்தபின், 12 நிமிடம் கழித்துச் சிறிது வெந்நீர் கொடுக்கக் கடும்பேதிக் கட்டுகள் கூடத்தீரும். 8-நாட்கள் தொடர்ந்து கொடுத்து வர வயிற்றில் வலி, குன்மம், வாதம் யாவும் தீரும்.

## (சூதகக்கட்டு, மகோதரத்திற்கு வாளநெய்)

63. ஆடு மாவின்நெய் யாமுழக் காமதில்
தேடுந் தேங்காய்நால் திருவிநற் பால்பிழி
பாடுங் 32காமப் பாலுழக் காய்விடுங்
காடுஞ் சட்டி கலந்தடுப் பேற்றிடே.

64. ஏற்று மிந்து சவுக்கார மெண்கழி[33]
மாற்றுஞ் சுத்தி யாம்வாள மரைப்பலம்
பா(ர்)த்து வெள்ளுள்ளி பலமூன்று தாக்கிடு
சே(ர்)த்து நான்குஞ் சிறுகப் பொடித்திடே.

65. இட்டுக் கா(ய்)ச்சி யிறக்கிடு பதமதாய்
தொட்டுக் க்ாசெடை உள்ளுக்கு(க்) கொடுத்திடு
விட்டரை நாழியில் வெந்நீரு முண்டிடு
கட்டப் பேதியாங் கைமுறை தப்பாதே.

66. தப்பா சூதகம் தானே சரிந்திடும்
அப்பா குன்ம மகோதர மோடிடும்
அப்பா வாமைப் பெருவயிறு வாங்கிடும்
மெய்ப்பா பத்திய(ம்) மிளகுநீர் சாதமே.

ஆவின் நெய் — 336 மி.லி

தேங்காய்ப்பால் — 4 தேங்காயினைத் திருவிய பூவினின்றும் பிழிந்த அளவு

தாய்ப்பால் — 336 மி.லி.

இவற்றை ஒன்றாய் கலந்தடுப்பேற்ற, அதில்

| | | | |
|---|---|---|---|
| இந்துப்பு | — 40.8 கி. | சுத்தித்தவாளம் | — 17.5 கி. |
| சவுக்காரம் | — 40.8 கி. | வெள்ளுள்ளி | — 105 கி. |

இந்நான்கையும் பொடிசெய்து, தூவிப் பதத்தில் வடித்து 5.1 கி. வீதம் உள்ளுக்குக் கொடுத்து, 12 — நிமிடம் சென்ற பின் வெந்நீர் தரப் பேதியாகும். இதனால் வாராதொழிந்த சூதகம் முறையாய் வரும்; குன்மம், மகோதரம், அமையப்பெருவயிறு யாவும் நீங்கிடும். மருந் துண்ணும், காலத்தில் மிளகுநீர் சாதம் உண்டுவரவேண்டும்.

## (இரத்த பித்தம், காசம், சயத்துக்குக் கற்றாழை நெய்)

67. சாதங் கற்றாழைச் சோறது நாழியாம்
நாதம் பசுவின்நெய் நாழியாஞ் சட்டியில்
பேத மிலாமலே விட்டுப் பிசைந்திடுஞ்
சேத மிலாமலே தீயெரி பாங்கதே.

68. தேடுஞ் சீரகச் சூரணம் பலமரை
சூடு மேலக்காய்ச் சூரணம் பலமரை
போடு சட்டியிற் பொங்கிநற் பதமதாஞ்
சாடுஞ் சர்க்கரை தான்பலங் கூட்டிடே.

69. கூட்டி யேயிருந் தேவடி கொண்டபின்
காட்டி யேவேளைக் கொருக றண்டியாம்
மூட்டி யேவரை மண்டல முண்டிட
வாட்டி யே(யி)ரத்த பித்தமு மாளுமே.

70. மாளு மே(யி)ரத்த காசசு வாசமு[34](ம்)
மீளு மேசய மிருமலு மீளையு(ம்)
நாளு(ம்) மேனி [35]நவந்த மாயிருஞ்
சூளு் மேபுளிக் கவிச்சு[36] விறைந்திடே.

| | |
|---|---|
| கற்றாழைச்சோறு — 1.3 லி. | சீரகச்சூரணம் — 17.5 கி. |
| பசுவின் நெய் — 1.3 லி. | ஏலக்காய்ச் சூரணம் — 17.5 கி. |

கற்றாழைச்சோறு, நெய்யிரண்டையும் கலந்து நன்கு பிசைந்து அடுப் பேற்றி, அதில் சூரணச் சரக்குகளைப் போட்டுக் காய்ச்சி, நற்பத மானதும், சர்க்கரை — 35 கி. சேர்த்து, வடித்து வைத்துக் கொண்டு வேளைக்கு 16 மி.லி. வீதம் 20 — நாட்கள் உண்டுவர இரத்த பித்தம், இரத்தகாசம், சுவாசகாசம், சயம், இருமல், ஈளையாவும் குணமாகித் தேகம் வன்மை பெறும். மருந்துண்ணும் நாட்களில் புளி, கவிச்சு இவற்றை நீக்க வேண்டும்.

## (காசம், சுரதாகம், தாதுபுட்டிக்குத் தண்ணீர்விட்டான் நெய்)

71. விறைந்திடா தண்ணீர் விட்டான்சார் [37]நாழியாங்
கறைந்திடா நெல்லிக் காய்ச்சாறு நாழியாந்
திறைந்திடா செங்க ரும்பின்சார் நாழியாம்
உறைந்திடா வின்பா லொருநாழி யாகுமே.

72. ஆகு மாவின்நெய் யரைப்படி யாமதில்
வேகுஞ் சட்டியில் விட்டடுப் பேற்றியே
பாகு போல்பத மாகவி றக்கிடு
ஆகு மேயிரண்டு வேளை கரண்டியே.

73. ஏகு மேவரை மண்டலங் கொண்டிட
போகு மேயிரத்த காசசு வாசமும்
ஏகு மேசுர தாகமு மேகிடுந்
தாகு மேதாது புட்டியுண் டாகுமே.

| | | | |
|---|---|---|---|
| தண்ணீர்விட்டான் சாறு | — 1.3 லி. | பசும்பால் | — 1.3 லி. |
| நெல்லிக்காய்ச்சாறு | — 1.3 லி. | பசுநெய் | — 650 மி.லி. |
| செங்கரும்பின் சாறு | — 1.3 லி. | | |

அனைத்தையும் ஒன்றாய்க் கலந்து, அடுப்பேற்றிப் பாகுபதத்தில் காய்ச்சியெடுத்துக் கொண்டு, இருவேளை, 16 மி.லி., வீதம் 20 — நாட்கள் கொள்ள இரத்த காசம், சுவாசகாசம், சுரதாகம் நீங்கும்; தாதுத லிருத்தி உண்டாகும்.

## (பீனிசம், கபாலச்சூலைக்கு அருகன் நெய்)

74. ஆவின் பால்நெய் யாழாக் கிரண்டுமே
தாவும் அருகன்வேர் தான்பல மிரண்டுடன்
மேவும் ஆவின்பால் விட்டரைத் தேகரை
கோவி(ன்) நெய்யுடன் கூட்டி யெரித்திடே.

75. எரியு மிலவங்கப் பூவு மிருபது
முரியுங் கம்மாறு முப்பது காம்புடன்
பொரியுங் குங்குமப் பூவொரு மாடையாம்
பரியு(ங்) கத்தூரி பணவெடை சே(ர்)த்திடே.

76. சே(ர்)த்துச் ச(ர்)க்கரை சீனிவ ராகனாம்
வா(ர்)த்து மாவின்பால் மைபோ லரைத்திடு
யேத்து நெய்யுடன் எரிமெழு கா(ம்)பதம்
பா(ர்)த்து நசியம் பஞ்சினி லூட்டிடே.

77. ஊட்டும் நசியித்தி லோடிடும் பீனிசம்
சூட்டுங் கபாலச் சூலை குடைச்சலும்
வாட்டுந் தலையிடி மண்டை ரணங்களும்
ஓட்டு மிச்சாப் பத்திய முண்டிடே.

| | | |
|---|---|---|
| பசும்பால் | — | 672 மி.லி. |
| பசு நெய் | | |
| அருகன் வேர் | — | 70 கி. |
| இலவங்கப்பூ | — | 20 கி. |
| கம்மாறு வெற்றிலைக் காம்பு | — | 30 கி. |
| குங்குமப்பூ | — | 65 மி.கி. |
| கத்தூரி | — | 488 மி.கி. |
| சர்க்கரை | — | 4.2 கி. |
| சீனி | — | 4.2 கி. |

முதலில் அருகம்புல்லின் வேரினைச் சிறிது பசும்பால் விட்டரைத்து, அக்கற்கத்தினை மீதிப்பாலில் கரைத்து, அதில் நெய்யும் கலந்து அடுப்பேற்றி, மற்ற மருந்துப் பொருட்களையும் சிறிது பசும்பால்விட்டு மைபோலரைத்த கற்கத்தினையும் கலந்து காய்ச்சி மெழுகுபதத்தில் இறக்கிப் பின் சிறிது நெய்யைப் பஞ்சில் நனைத்து நசியமாக மூக்கி லிடப் பீனிசம், கபாலச்சூலை, கபாலக்குடைச்சல், தலையிடி, மண்டை ரணங்கள் யாவும் தீரும். இவ்வமயம் இச்சாபத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

## (பீனிசம், சூலை, மண்டை ரணங்களுக்குக் குங்குமப்பூ மாத்திரை)

78. உண்டு குங்குமங் கத்தூரி லவங்கமும்
கண்டு மூன்றுங் கல்வத்தில் சேர்சமன்
விண்டு அருகன் வேர்ரசம் விட்டரை
குண்டு மாத்திரை குளிகை திரட்டிடே.

79. இடுமு லைப்பா லி(லி)ழை நசியமாய்
வாடு(ம்) பீனிச(ம்) மண்டை ரணங்களு(ஞ்)
காடுஞ் சூலை தலையிடி மாறிடும்
ஓடும் பீனிச மொன்பது வகையுமே.

குங்குமப்பூ

கத்தூரி இவை சமஎடை

இலவங்கம்

அருகன் வேர் ரசம் — தேவையான அளவு

மருந்துச் சரக்குகளை நன்றாக அரைத்துச் சிறு குளிகைகளாகத் திரட்டி உலர்த்தி, தாய்ப்பாலில் ஒரு குளிகையை இழைத்து நசியமிடப் பீனிசம், கபாலச் சூலை மண்டை ரணங்கள், தலையிடி யாவும் மாறும்.

## (நேத்திர நோய்களுக்கு வெங்கார மாத்திரை)

80. மேவும் வெங்காரம் வெந்த 40தலையோடும்
தாவு மிரண்டும் சமனெடை சுத்தியாம்
மேவுங் காமப்பால் விட்டரை குளிகையா(ம்)
காவும் முலைப்பாலில்- கண்ணி லுறைத்திட்டே.

81. உறையு(ம்) நேத்திர வாயுபு கைச்சலுங்
கறையுங் குத்தலுங் கண்ணீரும் பா(ய்)ச்சலும்
புறையுஞ் சதையும் பூவுடன் காசமும்
முறையுஞ் சுக்கிர(ம்) மூன்றுங் கரையுமே.

வெங்காரம்

வெந்த தலையோடு இவற்றைச் சுத்தி செய்து சமஎடை

எடுத்துக்கொண்டு, தாய்ப்பால் விட்டரைத்துக் குளிகைகளாக்கி, உலர்த்தித் தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணுக்குக் கலிக்கமிட நேத்திர வாயு, கண் புகைச்சல், கண்குத்தல், கண்ணீர்ப் பாய்ச்சல், கண்ணில் வளரும் சதை, பூ, கண்காசம், சுக்கிரம் — 3 முதலியன நீங்கும்.

## (நேத்திர வாயுவிற்குக் கம்மாறுத் தைலம்)

82. கறையு(ம்) நல்லெண்ணெய் கம்மாறு(ச்) சாறுடன்
உறையு(ம்) முலைப்பா லுழக்குழக் காமதில்
விறையுஞ் சட்டியில் விட்டடுப் பேற்றிடு
முறையு(ம்) மிளகு மதுரமுங் கூட்டிடே.

83. கூட்டு தோன்றிக் கடுக்காயுந் தோலுடன்
காட்டு வொன்றுக் கரைப்பல மாட்டிடு
வாட்டு மஞ்சள் வராக னபினியும்
போட்டு யெண்ணெய் பெடிதூவிக் கா(ய்)ச்சிடே.

84. கா(ய்)ச்சி டுமெழு காகும் பதமுடன்
பா(ய்)ச்சி டுநெல்லிற் பட்சம்[39]வைத் தேயெடு
தே(ய்)த்தி டுதலை சீராய் முழுகிட
வா(ய்)த்தி டுநேத்திர வாயுப றக்குமே.

| | |
|---|---|
| நல்லெண்ணெய் | |
| கம்மாறு வெற்றிலைச்சாறு | இவை வகைக்கு 336 மி.லி. |
| தாய்ப்பால் | |
| மிளகு | |
| அதிமதுரம் | இவை வகைக்கு 17.5 கி. |
| தான்றிக்காய் | |
| கடுக்காய்த் தோல் | |
| மஞ்சள் | வகைக்கு 4.2 கி. |
| அபினி | |

இவை அனைத்தையும் ஒன்று கலந்து நன்றாய்க் காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்து, [41]நெற்புடமாய் 15-நாட்கள் வைத்தெடுக்கச் சிறப்பாக முடியும். இதனைத் தலைதேய்த்து முழுக நேத்திரவாயு நீங்கும்.

## (மூக்குரணம், மண்டைக் கரப்பானுக்குப் பங்கம்பாளைத்தைலம்)

85. பரியும் பங்கம் பாளையு மத்தையு(ம்)
மரையு(ம்) மாங்கா யளவு[42](க்கு) நல்லெண்ணெய்
உரியு மாட்டி உள்ளி மிளகுடன்
புரியு மரைப்பலம் போட்டு (யெ)ரித்திடே.

86. இ(ட்டி)டு நசியமு(ம்) மூக்கில் ரணமாற
வி(ட்டி)டு [43]காசெடை யிரண்டுதா னுள்ளுக்கு
வி(ட்டி)டு தலைக்கு முழுக்கொரு யெட்டுநாள்
க(ட்டி)டு ரணமுங் கரப்பாலு மோடுமே.

பங்கம்பாளை

ஊமத்தை

உள்ளி

மிளகு வகைக்கு 17.5 கி.

நல்லெண்ணெய் — 672 மி.லி.

இவை அனைத்தையும் கலந்தடுப்பேற்றிப், பதத்தில் வடித்தெடுத்துக் கொண்டு நசியமிட மூக்கில் ரணமாறும்; 10.2 கிராம் வீதம் உள்ளுக்கும் தந்து, 8-நாட்களுக்கொருமுறை தலைமுழுக்குத் தைலமாகவும் பயன் படுத்திவரக் கூடும் ரணங்களும், மண்டைக்கரப்பாலும் நீங்கும்.

## (நேத்திர நோய்களுக்குக் கற்றாழைத்தைலம்)

87. ஓடுங் கற்றாழை மூலையுடத் தாழையும்
தேடுஞ் சிறுகீரை சிறுபீளைச் சாறுமே
வாடுங் கர்ப்பூர வள்ளிபொன் னாங்கணி
ஓடும் புளிச்சங் கொடியுட னாகுமே.

88. மேவு மிதுகள் வகைச்சாறு நாழியாம்
நாவு மாவின்பால் நா(ல்)நாழி காடியா(ம்)
ஊவு(ம்) இளநீர்முந் நாழிநல் லெண்ணெய்
யாவுங் கூட்டி அடுப்பினி யேற்றிடே.

89. ஏற்று சீரக மல்லிக்கல் நாருடன்
சே(ர்)த்து செண்பக(ம்) செங்க(ழு)நீர் கோட்டமும்
வா(ர்)த்து (மாறும்)[44] வகைக்கோர் கழஞ்செடை
பா(ர்)த்து பசுவின் பால்விட் டாட்டிடே.

90. ஆட்டி யேமெழு காகும் பதமதாய்
வாட்டி யேவைந்து நாளுக் கொருமுறை
மூட்டி யேதலை தே(ய்)த்து முழுகிட
காட்டி யேகண்ணில் காசம் பறக்குமே.

91. பறக்குஞ் சுரோனிதப் படலமுங் காசமும்
சுரக்கு நீலமுஞ் சுக்கில ரணமும்
நிரக்கும் பற்பல சேத்துமநீர் குந்தமுந்
திறக்கு(ம்) *6நேத்திர நோய்களுந் தீருமே.

| | | |
|---|---|---|
| கற்றாழைச் சாறு | கர்ப்பூர வள்ளிச்சாறு | |
| தாழைச் சாறு | பொன்னாங்கணிச்சாறு | இவை வகைக்கு |
| சிறுகீரைச் சாறு | புளிச்சங்கொடிச் சாறு | 1.3 லி. |
| சிறுபீளைச் சாறு | | |

பசும்பால்
காடி — இவை வகைக்கு 5.2 லி

இளநீர்
நல்லெண்ணெய் — இவை வகைக்கு 3.9 லி.

இவை அனைத்தையும் ஒன்றாகக் கலந்து அடுப்பேற்றி அதில்,

| | | |
|---|---|---|
| சீரகம் | செண்பகம் | |
| கொத்தமல்லி | செங்கழுநீர் | இவை வகைக்கு 5.1 கி. |
| கல்நார் | கோட்டம் | |

முதலியவற்றைப் பசும்பால் விட்டு ஆட்டிய கற்கத்தினைக் கலந்து, காய்ச்சி மெழுகுபதத்தில் வடித்து 5-நாட்களுக்கு ஒருமுறை தலை தேய்த்து முழுகிவரக் கண்காசம், சுரோனிதப் படலம், நீலம், சுக்கில ரணம், சேத்துமநீர் குந்தம் முதலான நேத்திர நோய்கள் தீரும்.

## (ருத்ரவாய்வுக்கு வெல்லத்தைலம்)

92. தீரும் நல்லெண்ணெய் சேர்படி யாமரை
பாருந் தேங்காயின் பால்படி யாமதில்
நாரும் நல்லவெல்ல மு(ம்)நான் குபலம்
காரு மூன்றுங் கலந்தெண்ணெய் கா(ய்)ச்சிடே.

93. கா(ய்)ச்சி டும்பதங் கடுகு திரண்டிட
வீச்சிடு மிரண்டு வேளை கரண்டியாம்
வா(ய்)த்தி டுமரை மண்டலங் கொண்டிட
மா(ய்)த்தி டுருத்ர வாய்வும்[45] அகலுமே.

நல்லெண்ணெய் — 650 மி.லி.
தேங்காய்ப்பால் — 1 3 லி.
நல்லவெல்லம் — 140 கி.

இம்மூன்றையும் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சிக் கடுகுதிரள் பதத்தில் வடித்து, இருவேளை 16 மி.லி. வீதம் 20-நாட்கள் கொடுத்துவர ருத்ரவாய்வு நீங்கும்.

1. ருத்ரவாயு — தமரக நோய் (இதய நோய்)

## (பொருமல், கட்டி, வாதத்துக்கு உள்ளித்தைலம்)

94. மேவுந் தேங்காய் திருவிப்பூ வுள்ளியு(ம்)
ஆவு மேவகைக் கோர்படி யிரண்டுதான்
காவுஞ் சதுரக் கள்ளிப்பால் கால்பலம்
மூவுங் கூட்டி மெழுகுபோ லாட்டிடே.

95. இடுவுஞ் சீலையி லிட்டுவி ளக்கினில்
முடுவக் கா(ய்)ச்சி முறுகிடத் தைலமாம்
குடுவு முள்ளுக் கேயொரு வராகனாம்
விடுவு(ஞ்)[45] சத்தியும் பேதியு மாகுமே.

96. ஆகும் ஒன்றைவிட் டொருநாளருந்திட
போகும் வல்லைப் பொருமலுங் கட்டியும்
ஏகும் வாதமு மெண்பத்து நான்குடன்
தாகுங் கவிச்சுப் புளிப்புத் தவிருமே.

| | |
|---|---|
| தேங்காய்ப்பூ | — 2.6 லி. |
| உள்ளி | — 2.6 லி. |
| சதுரக்கள்ளிப்பால் | — 8.75 கி. |

இம்மூன்றையும் மெழுகுபோல் ஆட்டிச் சீலையில் தடவிச் சுடர்விளக்கில் காட்டிப் பிழிய வரும். தைலத்தினை, 4.2 கி. வீதம் கொடுக்க, வாந்தி, பேதி உண்டாகும். ஒருநாள் விட்டு ஒருநாள் கொடுக்க வேண்டும். அதனால் வல்லைப் பொருமல், கட்டி, வாதம் — 84 யாவும் தீரும். இந்நாட்களில் புளிப்பு, கவிச்சுவகை நீக்க வேண்டும்.

## (வண்டு, ஈக்களின் கடிகள் நீங்க வண்டுகொல்லித்தைலம்)

97. தவரு மெள்ளெண்ணெய் தானுழக் காயிடும்
பவரு மேவண்டு கொல்லிலைப் பட்டையும்
புவரு மேபுழுக் கொல்லி வேர்தான்
கவரு மேகண்டங் கத்தரி விதையுமே.

98. மேவு மெண்ணெயில் மூன்றும் பொடித்திடு
நாலு மாக நலமுடன் கா(ய்)ச்செடு
போகு(ம்) மண்டைப் புகும்வண்டு ஈ(க்)களும்
காலு(ம்) மேலுங் கடிகளுங் கீசுமே.

99. ஈசுங் காதில் அ[46](வையும்) மடிந்திடும்
பூசுங் கண்ணில் புழுவெட்டு மாறிடும்
வீசு(ம்) மண்டைக் கரப்பானு மேகிடும்
பீசும் பிளவைப் புழுக்களு(ம்) மடியுமே.

எள்ளெண்ணெய் — 336 மி.லி.

வண்டு கொல்லியிலைபட்டை
புழுக்கொல்லிவேர் இவை வகைக்கு 5.1 கி.
கண்டங்கத்தரிவிதை

எடுத்துப் பொடித்து, எண்ணெயில் கலந்தடுப்பேற்றி பதத்தில் காய்ச்சி வடித்துக் கொண்டு, சிறிதளவு காதில்விட மண்டையுட்புகும் வண்டு, ஈக்கள் மடியும்; அவற்றின் கடிகள் மாறும். கண்ணில் பூசப் புழுவெட்டு மறையும்; தலையில் தேய்க்க மண்டைக் கரப்பானும் நீங்கிப், பிளவைப் புழுக்களும் மடியும்.

## (பிளவை, புற்று, மேகத்துக்குக் கந்தகச் சுடர்த்தைலம்)

100. மடியுங் கெந்தி யிரண்டு பலமதாய்
வெடியுங் கௌரி வராக னிரண்டுதான்
வடியு(ம்) நொச்சிலை வராக னிரண்டுதான்
கடிய மூன்றுங் கல்வத்தி லாட்டிடே.

101. ஆட்டு மாவின்நெய் யரைத்து வழித்தெடு
ஊட்டு சீலையில் திரியாய்த் திரித்திடு
வாட்டு மாவின்நெய் வா(ர்)த்து யெரித்திடு
சூட்டுஞ் சுடரில் துளித்துளித் தைலமே.

102. தைலஞ் சீலையில் தடவிடு ரணங்கள்மேல்
பயில உள்ளுக்குப் பணவெடை கம்மாறில்
மயிலி கண்ட மாலை ரணங்களும்
கயிலச் சூலை கபால ரணங்களே.

103. (இ)ரணங்கள் மேக ரணங்களு மாறிடும்
பணங்கள் நேர்பக்கப் பிளவை பறந்திடும்
கணங்க(ள்) மாங்கன்னப் புற்று கரைந்திடும்
உணங்க(ள்) பத்திய முப்பில்லா தன்னமே.

கத்திரித்த கந்தகம் — 70 கி
கௌரிப்பாடாணம் — 8.4 கி.
நொச்சியிலை — 8.4 கி.

இம்மூன்றையுங் கல்வத்திலிட்டு ஆட்டி, ஆவின்நெய், தேவையான அளவு சேர்த்தரைத்துச் சீலையில் தடவித் திரியாக்கி, அதனைப் பசுநெய் விட்டுத் தீபச்சுடரில் காட்டச் சுடர்த்தைலமாக இறங்கும். இதனைச் சீலையில் தடவி இரணங்கள் மேல் போட்டும், 488 மி.கி. வீதம் கம்மாறு வெற்றிலையில் தடவி உள்ளுக்குக் கொடுத்தும் வரக் கண்ட மாலை ரணங்களும், சூலை, கபாலரணங்கள், மேகரணங்கள், பக்கப் பிளவை, கன்னப்புற்று முதலியனவும் தீரும். மருந்துண்ணும் காலங் களில் உப்பில்லாப்பத்தியம் மேற்கொள்ள வேண்டும்.

## (பல்லசைவுக்கு விம்ப எண்ணெய்)

104. மெல்லும் [47]விம்பச்சார் வெம்புழுங் கரிசியுங்
கல்லு மாய்ந்து கலந்து பிசரிடு
வெல்லு மெள்ளெண்ணெய் விடடெரி பதமதாய்ப்
பல்லு மசைவுக்குப் பாங்காய்ப் புகளியே.

விம்பச் சாறு,
கல் நீக்கிய புழுங்கலரிசி — இவையிரண்டும் சமஎடை

எடுத்துக் கலந்து பிசைந்து, எள்ளெண்ணெயில் கலந்தெரித்துப் பதத்தில் வடித்து, வாய் கொப்பளித்து வரப் பல்லசைவு நீங்கிப் பல்லுறுதியாகும்.

## (தலைச் சுண்டுவிற்குக் கருஞ்சீரகத் தைலம்)

105. புகளி யாமணக் கெண்ணெய் படியரை
சுகளி யாங்கருஞ் சீரகஞ் சோவியும்
வகளி யாயிரு வகைபலம் மூன்றுதான்
பகளி யாதேவ தாரம் பலமதே.

106. பலம துரம்ப பூச்சார் உரியுமா[48]
நலம தாயரைத் தேவழிச் சாற்றினால்
பலம தாயெடுத் தேயெரி யெண்ணெயில்
புலம தாகச் சோலம் பொடித்திடே.

107. பொடித்தி டுவகைக் கொருபல மதாகவும்
வடித்திடுபத மாகமெ ழுகுதான்
விடுத்தி டுதலை தேய்த்து முழுகிடத்
தடுத்தி டுஞ்சு[49]ண்டு தலைவிட் டோடுமே.

| | |
|---|---|
| ஆமணக்கெண்ணெய் | — 650 மி.லி. |
| கருஞ்சீரகம் | |
| பலகறை | — வகைக்கு 105 கி. |
| தேவதாரம் | — 35 கி. |
| அதிமதுரம் | — 35 கி. |
| பழச்சாறு | — 722 மி.லி. |
| கச்சோலம் | — 35 கி. |

பழச்சாற்றினால் மருந்துச் சரக்குகளை அரைத்துப்பின் ஆமணக்கெண்ணெயில் கலந்து காய்ச்சிப்பின் கச்சோலத்தையும் பொடித்துச் சேர்த்து, மெழுகு பதத்தில் வடித்துத் தலைதேய்த்து முழுகத் தலைச்சுண்டு போகும்.

## (சயம், சுரம், சன்னிக்கு அரிதார மாத்திரை)

108. ஓடுந் [50]தார மொருபல மாகவும்
காடும் விட்ணு கரந்தை சமனெடை
கூட விட்டுக் குமற வரைத்திடு
சாடு மமுக்கிரா(ச்) சார்விட் டரைத்திடே

109. அரையு மைபோ லாட்டித் திரட்டிரு
முறையு மாத்திரை உளுந்துப்பிர மாணமாய்
உறையு முலைப்பா லுட்சய தோசமும்
பறையுஞ் சுரஞ்சன்னி பதி(ன்)மூன்று சாதியே.

அரிதாரம் — 35 கி.
விட்ணுகரத்தை — 35 கி.
இவற்றைத் தேவையான அளவு அமுக்கிராக் கிழங்கின் சாறு விட்டரைத்து, மைபோலாட்டி, 65 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு, தாய்ப்பாலில் ஒரு குளிகை வீதம் தரச் சயதோசம், சுரம், சன்னி — 13 யாவுந் தீரும்.

## (விந்துக் கட்டச் சாதிக்காய் மாத்திரை)

110. சாதிக் காயிற் றனிப்பள்ள மிட்டிடு
வாதிக் கபினி மருந்துள் ளமுக்கிடு
மீதிக் கனித்தூளை மேலே யமைத்திடு
சாதிக் கெள்ளிலைச் சாறும் பிழிந்திடே.

111. பிழிந்தி டுவெள்ளைச் சீலையி லேழுதரங்
கழிந்தி டுவேடுங் காயின்மேல் சுற்றிடு
மழிந்தி டுங்களி மண்ணால் பொதிந்திடு
பொதிந்தி டுங்கும்பி நெருப்பில் புடமிடே.

112. புடமிடு மூன்று முறைபிச காமலே
திடமுடன் காயைத் தேன்விட் டரைத்திடு
அடவுடன் குன்றி யளவுப்பிர மாணமாம்
அடவுட னந்தி யோர்மாத்திரை உண்டிடே.

113. உண்டிட ஆவின் பாலன்ன முறைந்திடுஞ்
(சென்றிடச்) சாமஞ் செய்யுஞ்சை யோகமும்
விண்டிடா போகம் விந்துவி டாதுபார்
கண்டிடா மாற்று கரைபுளி யாகுமே.

ஒரு சாதிக்காயின் நடுவில் துளையிட்டு, அதில் அபினித் தூளை யிட்டு மேவிப் பின் சாதிக்காய்த் தூளால் மூடி, எள்ளிலைச் சாற்றை அதன் மேல் பிழிந்து, ஒரு வெள்ளைச் சீலையிலும் பிழிந்து அதைக் கொண்டு 7-முறை சாதிக்காயிற்கு வேடு கட்டிப் பின் களிமண்ணால் பொதிந்து தணல் நெருப்பிலிட்டு மும்முறை புடமிட்டு எடுத்துக் கொண்டு, தேன்விட்டரைத்து 130 மி.கி. மாத்திரைகளாகச் செய்து, ஒரு மாத்திரை வீதம் மாலைப் பொழுதில் உண்டு வரவேண்டும். பின்னர் பசும் பாலன்னமும் சாப்பிடப் புணர்ச்சியில் விரைவில் விந்து விழாமல் நீடித்த போகம் உண்டாகும். இவ்வமயம் மாற்றாகச் சுரை, புளி உண்ணலாம்.

## (உளைமாந்தத்துக்கு நாங்கூழ்த்தைலம்)

114. ஆகும் வேம்புவேர் [51]மண்ணுக்குப் பூச்சியும்
ஏகும் வசம்பு வெள்ளுள்ளி காயமும்
வேகு மேரண்டத் தெண்ணெயில் விட்டெரி
போகு மேயுளை மாந்தமுப் பில்லையே.

| | | |
|---|---|---|
| வேம்புவேர் | வெள்ளுள்ளி | இவை ஐந்தும் சமஎடை |
| நாங்கூழ்ப்புழு | காயம் | |
| வசம்பு | | |

அனைத்தையும் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சிப், (16 மி.லி. வீதம்) உள்ளுக்குத் தரக் குடற்சயம் தீரும். பத்தியமாக உப்பு நீக்க வேண்டும்.

### [52](மாந்தம், [53]கணங்களுக்கு ஓரிலையாதித் தைலம்)

115. இல்லை யோரிலைத் தாமரை கொன்றையும்
தில்லை யம்மான் சிறுபச் சிலைக்கொடி
நில்லை யாம்நிலக் குமிழஞ் சமூலமும்
புல்லை யாவரட் பூலாச் சமூலமே.

116. ஏலஞ் சீரகம் வெந்தயஞ் சிங்கியும்
சீல மேரண்டத் தெண்ணெ(யில்) விட்டெரி
கால(ம்) மூன்றுநாள் காசெடை கொண்டிட
கீல மாந்தக் கணங்களுந் தீருமே.

| | | |
|---|---|---|
| ஓரிலைத்தாமரை | வரட்பூலாச்சமூலம் | |
| கொன்றை | ஏலம் | இவை சம |
| தில்லை | சீரகம் | அளவு |
| சிறுஅம்மான்பச்சரிசி | வெந்தயம் | |
| நிலக்குமிழஞ்சமூலம் | மிருதார்சிங்கி | |

எடுத்துப் போதிய அளவு ஆமணக்கெண்ணெய் கலந்தடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்தெடுத்துக் கொண்டு மூன்று நாட்கள் 5.1 கி. வீதம் உட்கொள்ள மாந்தம், கணங்கள் தீரும்.

### ([1]மாந்தம், சுழி[2]கணத்துக்குத் தும்பைத்தைலம்)

117. தீருந் தும்பைக் கொடாகிலை வேருடன்
நாறுந் தோடையும் நன்னிலத் துளசியும்
கூறும் நெய்ச்சட்டி கோட்டக் கிரந்தியும்
காருந் திப்பிலி ரோகணி காயமே.

118. காயு முள்ளியுஞ் சாதிக்காய் பத்திரி
வீயு மேரண்டத் தெண்ணெயில் விட்டெரி
ஈயு(ம்) மூன்று(நா) வின்னாளுப். பில்லாமல்தான்
தூயி மாந்தச் சுழிகண மோடுமே.

| | | |
|---|---|---|
| தும்பை, | திப்பிலி | |
| கொடாசிலைவேர் | ரோகணி | |
| ஆடாதொடை | காயம் | |
| நற்றுளசி | உள்ளி | இவை சம அளவு |
| நெய்ச்சட்டி | சாதிக்காய் | |
| கோட்டம் | சாதிப்பத்திரி | |
| கிரந்தி | | |

எடுத்துப் போதுமான அளவு ஆமணக்கெண்ணெய் கலந்து அடுப் பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொண்டு மூன்று நாட்கள் (16 மி.லி. வீதம்) கொடுக்க மாந்தம், சுழிகணம் தீரும். உப்பு நீக்க வேண்டும்.

## (அக்கரம், சுரத்துக்குக் கற்றாழையாதித்தைலம்)

119. ஓடுங் கற்றாழை முட்காரை துத்திவேர்
வாடு மகத்தி வரட்பூலா ஈருள்ளி
மாடு வெந்தய மணித்தக் காளியுடன்
காடு மேரண்டத் தெண்ணெயில் கா(ய்)ச்சிடே.

120. இடு(வு) முள்ளுக்கு யெண்ணெயோர் மண்டலம்
விடு(வு) [55]மக்கரம் வீசுஞ் சுரங்களும்
கடு(வு)ம் பத்தியங் கவிச்சதை நீக்கிடு
கொடு(வு)ந் துட்டெடை சொற்படி தப்பாதே.

| | | |
|---|---|---|
| கற்றாழை | வரட்பூலா | |
| முட்காரை | ஈருள்ளி | இவை சமஎடை |
| துத்திவேர் | வெந்தயம் | |
| அகத்தி | மணித்தக்காளி | |

எடுத்துக் கொண்டு, ஆமணக்கெண்ணெய் தேவையான அளவு கலந் தடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொண்டு 25 மி.கி. வீதம், 40-நாட்கள் கொடுத்துக் கடும்பத்தியத்துடன் கவிச்சுவகையும் நீக்கிப் பத்தியமாக உணவுண்ண அக்கரம், சுரம் இவை தீரும்.

## (பிற கணம், இரத்த கனத்துக்குச் சானகித்தைலம்)

121. தப்பா தினமும் [56]சானகி வல்லாரை
கொப்பா யீருள்ளி கோழியா வாரையு(ம்)
மெ(ய்)ப்போ[57] மிரட்டி வெதுப்படி சிறுபீளை
ஒப்பா வசம்பு கருஞ்சீரக வோமமே.

122. ஓம மேரண்டத் தெண்ணெயில் விட்டெரி
காம நோய்பிற கணத்துக்குத் துட்டெடை
[58]வாம ரத்தக் கணங்களு(ம்) மாறிடும்
போமே யிச்சாப் பத்திய முண்டிடே.

| | | |
|---|---|---|
| சானகி | சிறுபீளை | |
| வல்லாரை | வசம்பு | |
| ஈருள்ளி | கருஞ்சீரகம் | இவை சம எடை |
| கோழியாவாரை | ஓமம் | |
| பேய்மிரட்டி என்ற வெதுப்படி | | |

எடுத்து, ஆமணக்கெண்ணெய் தேவையான அளவு எடுத்துக் கலந் தடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக்கொண்டு 25 மி.கி. வீதம் கொடுத்து, இச்சாப் பத்தியம் காத்துவரப் பிற கணம், ஆமகணம், இரத்தகணம் மாறும்.

## (சன்னி, கோராமை வலிக்கு வேம்பாதித்தைலம்)

123. முண்டு வேம்பு முதி(ர்)ந்தநாள் பட்டையுங்
கண்டு முன்னைவேர் சாரணைக் கிழங்குடன்
அண்டு கருடனு மாற்றினில் முள்ளிவேர்
குண்டு குக்கிடத் தைல(மும் முட்டையே[59])

124. முட்டை யுள்ளி [60]முசறுத் தைலமும்
வெட்டு மீச்வர மூலிவேர் கொடியுங்கும்
மட்டிக் காய்முடக் கொத்தான் சமூலமும்
கட்டும் ரோகணி காயமீ ருள்ளியே.

125. ஏலஞ் சீரகம் ஏரண்டத் தெண்ணெயில்
கால(ம்) மூன்றுநாள் கா(ய்)ச்சிக் கொடுத்திட
கோல சன்னிகோ ராமை வலியுடன்
பால நோயும் ப;றக்குமுப் பில்லையே.

| | | |
|---|---|---|
| முதிர்ந்த வேம்பின் பட்டை | ஈச்வரமூலி வேர் | |
| முன்னைவேர் | குமட்டிக்காய் | |
| சாரணைக்கிழங்கு | முடக்கொத்தான் சமூலம் | இவை |
| கருடன் கிழங்கு | ரோகணி | சம |
| முள்ளி வேர் | காயம் | எடை |
| கோழிமுட்டைத் தைலம் | ஈருள்ளி | |
| முசுறுமுட்டைத் தைலம் | ஏலம் | |
| | சீரகம் | |

எடுத்து, ஆமணக்கெண்ணெய் தேவையான அளவு எடுத்துக் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சிக் கொடுக்கச் சன்னி, கோராமைவலி, பால நோய்கள் யாவும் தீரும். மருந்துண்ணும் காலங்களில் உப்பு நீக்கிய உணவுண்ண வேண்டும்.

## (சுழிகணம், சுழிமாந்தத்துக்குப் பூநாகத்தைலம்)

126. இல்லை யுள்ளி வசம்பு முருங்கைவேர்
எல்லை(ப்) [61]பூநாகம் வகைக்குப் பலமரை
எல்லை யேரண்டத் தெண்ணை யுழக்கினில்
வில்லை போலதில் விட்டு யெரித்திடே.

127. இடுமுள் ளுக்கு எடையுமோர் துட்டெடை
கடுஞ்சு[62] ழிகண மாந்தமு மகன்றிடும்
விடுமுன் கொன்ன முறைபிச காமலே
கடுவும் பத்தியங் காருங்கை கண்டதே.

| | | |
|---|---|---|
| உள்ளி | முருங்கைவேர் | |
| வசம்பு | பூநாகம் | வகைக்கு 17.5 கி. |
| ஆமணக்கெண்ணெய் — | | 336 மி.லி. |

இவற்றைக் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்து, 25 மி.கி. வீதம் கொடுக்கச் சுழிகணம், சுழிமாந்தம் நீங்கும்; கடும்பத்தியம் காக்க வேண்டும். இது கைகண்ட முறையாகும்.

## ([63]மாந்தம், சன்னி, தமரக நோய்களுக்கு இலவங்காதி மாத்திரை)

128. கண்டு லவங்கங்கோ ரோசனை கத்தூரி
குண்டு செண்பகங் குங்குமப் பூவுடன்
செண்டு சேர்சமன் செம்பருத் திலையின்சார்
உண்டு அரையு (மு)ளுந்துப் பிரமாணமே.

| | | |
|---|---|---|
| இலவங்கம் | செண்பகம் | |
| கோரோசனை | குங்குமப்பூ | இவை சமஎடை |
| கத்தூரி | | |
| செம்பருத்தியிலைச் சாறு — | | தேவையான அளவு |

மருந்துச் சரக்குகளை மேற்படிச் சாறு, சிறுகச் சிறுக விட்டு நன்கரைத்து 65 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு, [64](ஒரு குளிகை வீதம் தேனில் இழைத்துக் கொடுக்க மாந்தம், சன்னி, தமரக நோய்கள் யாவுந் தீரும்).

## (வலிப்பு சன்னிக்கு நுணாவேர்ப்பற்பம்)

129. மேவு(ம்) நுணாவேர் வெட்டி யொருமுழம்[65]
காவுங் கல்லுப் பரைத்துமேற் பூசிடு
வேவும் புடஞ்செய்து மேலுப்பைத் தள்ளிடு
ஆவு மேல்பட்டை யரையுநீ குறையுமே.

130. உறையு(ம்) மீரந்தக் கணங்கள் வலிப்புகள்
அறையுஞ் சன்னி யடங்காக் குளுமையும்
கரையுங் கத்தூரி காமப்பா லிட்டிட
உரையுங் தேரைய ருண்மைய தாகுமே.

நுணா வேர் — 45 செ.மீ. நீளம்
கல்லுப்பு — தேவையான அளவு

கல்லுப்பை நன்கரைத்து நுணாவேரின் மேல் பூசிப்புடமிட்டு உப்பினை நீக்கி, நுணாவேரை மட்டும் எடுத்தரைக்கப் பற்பமாகும். இதனைச் சிறிது கத்தூரி கலந்த தாய்ப்பாலில் (100 மி.கி. — 200 மி.கி. வீதம்) கொடுக்க மாந்தங்கள், கணங்கள், வலிப்புகள், சன்னி, அடங்காக் குளிர் முதலியன தீரும். தேரையர் கூறும் இம்முறை உண்மையான தாகும்.

## (சன்னி, வாதத்துக்கு[66] பஞ்சசூதச் செந்தூரம்)

131. தாக்கு லிங்கஞ் சூதஞ்சவ் வீரமும்
வாக்கும் பூரவளர் ரசசெந் தூ ரமும்
தூக்கு[67] (ஐந்)தையுந் தொகைபல மைந்தாய்
ஆக்கும் முலைப்பாலி லரையுமுச் சாமமே.

132. மேவு(ம்) மாத்திரை மல்லிப்பிரமாணமாங்
கோவுஞ் சன்னி குறைத்திடு மிஞ்சி(த்) தேன்
ஏவுங் கருப்பட்டிக் கெண்பது வாதமும்
போகுஞ் சகலநோய் புளிபுகை நீக்கிடே.

| | | |
|---|---|---|
| இலிங்கம் | பூரம் | |
| பாதரசம் | இரசசெந்தூரம் | வகைக்கு 35 கி. |
| சவ்வீரம் | | |

இவற்றைத் தாய்ப்பாலில் அரைத்து 50 மி.கி. அளவுள்ள மாத்திரைகள் செய்து இஞ்சித்தேனில் கொடுக்கச் சன்னியும், கருப்பட்டியில் கொடுக்க வாதம்-80 வகையும், சகலநோய்களும் தீரும். புளி, புகைப்பிடித்தல் இரண்டையும் நீக்குதல் வேண்டும்.

## (முறைசுரம், வாதத்துக்கு இரசக் கற்கம்)

133. நீக்கி டாரச கெந்தவெங் காரமு(ம்)
நீக்கி டாதிரு கடுகு திரிபலையும்
தூக்க டாசுத்தி வாளஞ் சமனெடை
தாக்கி டாமுருங்கைச் சார்விட் டரையுமே.

134. அரையு(ம்) மூன்றுநா ளளவுதக்[68] காளியாம்
உறையுஞ் சன்னிக்கு உள்ளிநீ ரிஞ்சி(த)தேன்
முறையுஞ் சுரத்துக்கு மூட்டுங் கசாயத்தில்
இறையும் வாதநோய் எண்பதுந் தீருமே.

| | | |
|---|---|---|
| இரசம் | இருகடுகு | |
| கந்தகம் | திரிபலை | இவை சமஎடை |
| வெங்காரம் | சுத்தித்தவாளம் | |

எடுத்து, முருங்கைச் சாறு விட்டு மூன்றுநாட்கள் அரைத்துக் கற்கமாக்கி, 500 மி.கி. வீதம் உள்ளிநீரில் கொடுக்கச் சன்னியும், இஞ்சித்தேனில் கொடுக்க முறைசுரமும், உள்ளி, இஞ்சி, தேன் — இவற்றைக் குடிநீரிட்டு அதில் தர வாதநோய் எண்பதுந் தீரும்.

## பேதி([69]க்கு வாவ) மாத்திரை

135. தீருஞ் சுக்குடன் திப்பிலி ரோகணி
தேருங் கடுக்காய் சேருஞ் சமனெடை
மாருஞ் சுத்தி வாளமுஞ் சேர்சமன்
காருங் குமட்டிக்காய்ச் சார்விட் டாட்டுமே

136. ஆட்டும் மாத்திரை யளவது குன்றிதான்
மூட்டும் பேதிதான் மோர்மிள நீருடன்
வாட்டும் வாய்வுகள் வாளைகக்கு வாடாம்
காட்டுஞ் சுக்குக் [72]கழாயமுந் தாக்கிடே

| | | |
|---|---|---|
| சுக்கு | கடுக்காய் | |
| திப்பிலி | சுத்தித்தவாளம் | இவை சமஎடை |
| ரோகணி | | |

எடுத்துக் குமட்டிக்காய்ச்சாறு தேவையான அளவு விட்டு ஆட்டி, 130 மி.கி. மாத்திரைகளாக உருட்டி உலர்த்தி வைத்துக் கொண்டு மோர் அல்லது மிளகுநீர் அல்லது சுக்குக்குடிநீரில் கொடுக்கப் பேதியாகும்; வாய்வுகள் யாவுந் தீரும்.

## இரத்த(ப்) பிரமியத்துக்கு[70] (ஈருள்ளிச் சாறு)

137. தாக்கு மீருள்ளிச் சாறது கால்படி
தொக்கு மாதுளைக் கொழுந்துபாக்[71] களவுதான்
தாக்கு மெருமைத் தயிரினில் மூன்றுநாள்
போக்கு மிரத்தப் பிரமிய மில்லையே

ஈருள்ளிச்சாறு — 325 மி.லி.
மாதுளைக்கொழுந்து — 2.2 கி.

இரண்டையும் கலந்து எருமைத்தயிரில் அனுபானித்து மூன்று நாட்கள் கொடுக்க இரத்தப்பிரமியந் தீரும்.

## சொறிசிரங்குக்கு[73](க் கந்தக வெண்ணெய்)

138. இல்லை கெந்தி கருஞ்சீர மேலமுங்
கல்லை கச்சோலங் கத்தூரி மஞ்சளாம்
வல்லை நீரடி கார்போ கரிசியும்
முல்லை வெள்ளை மிளகு பொடித்திடே

139. பொடியெ ருமையின் வெண்ணெயில் பிசரியே
கடிப னியிவை காலமே பூசிடு[74] (வாய்)
வெடிவெந் நீரினில் மேலுங் குளித்திட
அடிமு டியினி லரிசிரங் காறுமே

| | | |
|---|---|---|
| கந்தகம் | கத்தூரி மஞ்சள் | |
| கருஞ்சீரகம் | நீரடிமுத்து | |
| ஏலம் | கார்போகரிசி | இவை சமஎடை |
| கச்சோலம் | வெள்ளைமிளகு | |

எடுத்துப் பொடித்து எருமைவெண்ணெயில் பிசைந்து, பனிநீரில் கலந்து காலையிலே பூசி, வெந்நீரில் குளிக்கப் பாதம் முதல் தலைவரை உண்டாகும் சொறிசிரங்கு ஆறும்.

## [73]அரையாப்பு, கொருக்கு, வெள்ளை, வாதக்குடைச்சலுக்கு(ப் பூரங்கற்கம்—I)

140. மேரும் பூரம் வராக னெடையுமாங்
காருங் கண்டங் கத்திரி விரையெடை
ஆறு வராகன் அரைகள்ளிச் சாற்றினால்
தேரு(ம்) மருந்து [75]சுண்டைக்கா யளவிடே.

141. இடுமுள் ளுக்கு [76]யேழுநா ளைந்துநாள்
கொடுவெள் ளையரை யாப்புக் கொருக்குடன்
விடு(வு)ம் வாதப் பிடிப்பும் குடைச்சலும்
கடு(வு)ம் பத்தியங் காருங்கை கண்டதே.

பூரம் — 4.2 கி.
கண்டங்கத்திரி விதை — 25.2 கி.

இரண்டையும் கள்ளிச்சாறு தேவையான அளவு விட்டரைத்து 2 கி. வீதம் உள்ளுக்கு 35 நாட்கள் கொடுக்க வெள்ளை, அரையாப்பு கொருக்கு, வாதப்பிடிப்பு, குடைச்சல் யாவுந் தீரும். கடும்பத்தியம் காக்க வேண்டும். இது கைகண்ட முறையாகும்.

## (சன்னி, வாய்வுகள், சுரங்களுக்குப் பூரக்கட்டு)

142. கண்டி டுபூரக் கட்டி பலமொன்று
உண்டி டாலம்பா லூட்டுங் கட்டிமேல்
சுண்டி ட[77]மயிர் சுற்றிமே லூட்டிடு
[78]நண்டு நாட்டுநற் சாற்றில் சுருக்கிடே.

143. சுருக்கிடுஞ் சாமஞ் சொற்பூரம் கட்டிடும்
முருக்குஞ் சன்னி குறையு(ம்) முலைப்பாலில்
பருக்கும் வாய்வுகள் பத்தெட்டு மேகிடும்
அருக்குஞ் சுரங்க ளறுபது மேகுமே.

பூரக்கட்டி — 35 கி.
ஆலம்பால் — தேவையான அளவு

பூரக்கட்டிக்கு ஆலம்பாலூட்டி அதன்மேல் மயிர்சுற்றிச்சாறும் ஊட்டிப் பின் நாட்டி நண்டின் நற்சாற்றினைத் தேவையான அளவு எடுத்துக் கொண்டு சிறுகச்சிறுக விட்டு 3 மணி நேரஞ் சுருக் கொடுக்கப் பூரங்கட்டும். தாய்ப்பாலில் இதனை இழைத்துக் கொடுக்கச் சன்னி, வாய்வுகள் — 80, சுரங்கள் — 60 முதலியன தீரும்.

## (வெள்ளைக்கு வெடியுப்புக் கற்பம்)

144. மேவுங் [79]கண்டு வெடியுப்புச் சீரகம்
மூவும் பொடிசெய் மூவரைப் பலம்தூய்
பூவு(ம்) நிம்பழப் புளிப்புக்குள் வைபலம்
(இ)[80]ரவும் பகலு(ம்) நலங்காய் வெடுத்திடே.

145. எடு(வு)ங் காலமே யேழுநா ளுண்டிட
விடு(வு)ஞ் சுருக்கு வெள்ளையு(ம்) மாறிடும்
நொடுநா ளமைந்த வெள்ளையு(ம்) நீங்கிடுங்
கடு(வு)ம் பத்தியங் காருங்கை கண்டதே

கற்கண்டு
வெடியுப்பு இவை வகைக்கு 17.5 கி.
சீரகம்
எலுமிச்சம் பழரசம் — 35 கி.

சாற்றில் மேற்படி சரக்குகளைப் பொடித்துப் போட்டு 24 மணிநேரம் சூரிய புடமாகவும்0, சந்திரபுடமாகவும் காயவைத்து எடுத்திட்டு, 7 நாட்கள் காலை மட்டும் உண்டுவரச் சுரக்கி வெள்ளை, நெடுநாள்பட்ட வெள்ளையாவும் நீங்கிடம். கடும் பத்தியம் காத்திடல் வேண்டும்.

## (மேகரணம், இலிங்கப்புற்றுக்கும் பூரத்தைலம்)

146. தேடு மெள்ளெண்ணெய் [81]சேரது ஒன்றினில்
போடு பூர(ம்) வராகலு மொன்றரை
பாடு மூலவேர் பலமது யிரண்டுதான்
வாடு நண்டுமரைத்தெண்ணெய் கா(ய்)ச்சிடே.

147. கா(ய்)ச்சிடு மந்தி சந்தி கரண்டியாம்
பா(ய்)ச்சிடு மைந்து நாள்கடும் பத்தியம்
வீச்சிடும் புண்ணு(ம்) மேக ரணங்களும்
பூச்சிடும் லிங்கப் புற்றுகள் போகுமே

எள்ளெண்ணெய் — 280 கி.
பூரம் — 4.2 கி.
சித்திர மூலவேர் — 70 கி.
நண்டு — 1

இவற்றை நன்றாக அரைத்து, எள்ளெண்ணெயில் காய்ச்சி மாலைப் பொழுது மட்டும் 16 மி.லி. வீதம் கொடுத்துக் கடும்பத்தியம் காத்து வரப் புண்கள், மேகரணங்கள், இலிங்கப்புற்றுகள் தீரும்.

## (கர்ப்பக் கிரந்தி, கொருக்கு, எரிச்சலுக்குப் புங்கத்தைலம்)

148. போகு மாவின்பால் புங்கம்பால் வேருடன்
வாகு மிளநீர் வகைக்குப் படியரை
வேகு மேரண்டத் தெண்ணெய்சே ரொன்றுடன்
பாகு மேபத மாகவ டித்திடே.

149. எடு(வு)ம் உள்ளுக் கேழுநாள் காசெடை
கொடு(வு)ங் கர்ப்பக் கிரந்தி கொருக்குடன்
கடு(வு)ம் புண்களுங் காந்தி யெரிச்சலும்
விடு(வு)ம் இச்சாப் பத்திய முண்ணவே.

| | | | |
|---|---|---|---|
| ஆவின் பால் | புங்கம்வேர்க் குடிநீர் | வகைக்கு | |
| புங்கம்பால் | இளநீர் | | 650 மி.லி. |
| ஆமணக்கெண்ணெய் | | | — 280 கி. |

அனைத்தையும் கலந்தடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்தெடுத்து 7-நாட்கள் 5.1 கி. வீதம் உள்ளுக்குக் கொடுத்துவரக் கர்ப்பக் கிரந்தி, கொருக்கு, புண்கள், தேகத்தில் காந்தல், எரிச்சல் முதலிய தீரும். இச்சாப் பத்தியமாக இருந்து வரவேண்டும்.

## (சுரம், மூலத்துக்கு இரசமாத்திரை)

150. வேருஞ் சூத மிளகுவெங் காரமும்
சேரு மூன்றை யுஞ்சேர் சமனெடை
தேருஞ் சுக்கு கெந்தியுஞ் சேர்சமன்
கோரு மாவின்பால் கொதிச்சுத்தி வாளமே.

151. வாள முன்னுக்கு வையுஞ் சமனெடை
வேளை யாஞ்சாமம் விட்டரை நற்சலம்
காளை யாமணிக் கடலை யளவுதான்
தூள வேகருந் துளசியில் நீட்டுமே.

152. நீட்ட வாத சுரங்களும் நீங்கிடும்
காட்ட(ப்) பித்தக் [82]கடுஞ்சுரம் வாங்கிடும்
மூட்ட வாய்வுகள் மூலக் கடுப்புகள்
கூட்ட மிட்டுக் குடிப்புகுந் தோடுமே.

| | | |
|---|---|---|
| பாதரசம் | சுக்கு | |
| மிளகு | சுத்தித்த கந்தகம் | இவை சமஎடை |
| வெங்காரம் | பசும்பாலில் | |
| | சுத்தித்த வாளம் | |

எடுத்து நற்சலம் விட்டு 3 மணி நேரம் அரைத்து, 500 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து உலர்த்தி, 1-மாத்திரை வீதம் கருந்துளசிச் சாற்றில் கொடுக்க வாதசுரங்கள், பித்தக்கடுஞ்சுரம், வாய்வுகள், மூலக் கடுப்புகள் யாவும் நீங்கும்.

## (வாதம், இருமல், சன்னி, மேகத்துக்கு வீரமாத்திரை)

153. ஓடும் வீர மிரண்டு வராகனாம்
நாடும் பூரம் நான்கு வராகனாம்
சாடுஞ் சம்பாப் பச்சரிசி சமனெடை
ஆடு மிளநீர் விட்டரைமுச் சாமமே.

154. அரையு(ம்) மாத்திரை யளவு மிளகுடன்
உரையு முள்ளுக்கு வொருமணி யிந்திட
கரையும் வாதத் தடிப்பு குடைச்சலும்
இரையு மீளை யிருமலைத் தாக்குமே

155. தாக்குஞ் [83]சீனியில் சன்னி பறந்திடும்
போக்கு(ம்) மேகப் புண்களு மாறிடும்
மே(க்)கு மேயிரண்டு வேளைக்கு மைந்துநாள்
வாக்குத் தே(ரை)யர் வாய்மொழி செப்புவீர்.

| | |
|---|---|
| வீரம் — 8.4 கி. | சம்பாப் பச்சரிசி — 16.8 கி. |
| பூரம் — 16.8 கி | இளநீர் — தேவையான அளவு |

இவற்றை நன்கு அரைத்து, 100 மி.கி. அளவுள்ள மாத்திரைகள் செய்து, ஒரு மாத்திரை வீதம் சீனியில் இரண்டுவேளை கொடுக்க, வாதத்தடிப்பு, வாதக் குடைச்சல், ஈளை, இருமல், சன்னி, மேகப் புண்கள் முதலியன மாறும் என்பது தேரையரின் கூற்றாகும்.

## (சன்னி, மேகம், சூதகவாய்வுக்கு வீரக்குழம்பு)

156. வீரம் பூரம் வராக னிரண்டுடன்
தீர லிங்கமுஞ் சேர(து) வராகனாம்
தூர முக்கடு சூரணம் வராகனாம்
சூர தாளிசஞ் சூரணம் வராகனே.

157. சூரணச் சரக்கை(த்) துரிதாய் வறுத்தெடு
வாரண மாஞ்சுத்தி வாளம் வராகனாம்
பூரண மாயிவை பூட்டுங் கல்வத்தில்
சீரண மாகவே தேன்விட் டரையுமே.

158. அரையுங் குழம்பை மைச்சிமிழி லடைத்திடு
பருகுங் குன்றி பனைவெல்லத்தி லீந்திட
முறையு மைந்துநாள் மேகப் பிடிப்புகள்
குறையும் வாதமுங் குன்மம் பறக்குமே.

159. பறக்குஞ் சன்னி பதி(ன்)மூன்று மேகிடும்
கொருக்கு மேகஞ் சூதக வாய்வுகள்
நெருக்குஞ் சூலையும் நீராமைக் கட்டியும்
கரைக்கும் பத்திய் கைப்பு வெடித்திடே.

| | | | |
|---|---|---|---|
| வீரம் | — 8.4 கி. | முக்கடுகுச் சூரணம் | — 4.2 கி. |
| பூரம் | — 8.4 கி. | தாளிசஞ்சூரணம் | — 4.2 கி. |
| இலிங்கம் | — 4.2 கி. | சுத்தி செய்தவாளம் | — 4.2 கி. |

முதலில் இரண்டு சூரணங்களையும் நன்கு வறுத்து எடுத்து அதில் சுத்தித்த வாளத்தையும், பிற மருந்துச் சரக்குகளையும் சேர்த்துக் கல்வத்திலிட்டரைத்துக் குழம்பு பதத்தில் எடுத்து மைச்சிமிழில் அடைத்துக் கொண்டு, 130 மி.கி. வீதம் 5-நாட்கள் பனைவெல்லத்தில் கொடுக்க வாதம், குன்மம், சன்னி-13, கொருக்கு, மேகம், சூதகவாய்வு, மேகப் பிடிப்பு, சூலை, நீராமைக்கட்டி முதலியன தீரும். கைப்புச்சுவை நீக்கி உணவுண்ண வேண்டும்.

### (வாதங்களுக்குச் சுக்குக் கற்கம்)

160. வெடியுஞ் சுக்கு வராகமும் பத்துடன்
மடியுங் கடுக்காய்த் தொலைந்து வராகனாம்
நெடிய வாளமும் நேரைந்து வராகனாம்
படியு மூன்றும் பழச்சா றரையுமே.

161. அரையும் பேதி யளவு[84]தக் கர்ளியாம்
நிறையும் உள்ளுக்கு நிம்பழச் சாற்றினில்
கறையும் வாதங்கள் வாங்கிடும் (கண்டதே)
முறையுங் கோழி மிளகுநீர் சாதமே.

| | |
|---|---|
| சுக்கு | — 42 கி. |
| கடுக்காய்த்தோல் | — 21 கி. |
| வாளம் | — 21 கி. |

இம்மூன்றையும் பழச்சாறு விட்டு நன்கரைத்துக் கற்கமாக்கி, 500 மி.கி. வீதம் எலுமிச்சம் பழச்சாற்றில் அனுபானித்துக் கொடுக்க நன்கு பேதியாகும். வாதங்கள் யாவும் பறந்திடும். இது கைகண்ட முறையாகும். மருந்துண்ணும் காலத்தில் கோழி, மிளகுநீர் சாதம் முதலியன உண்டு வரவேண்டும்.

## (வாய்வு, மேகம், வெள்ளைக்குத் தும்மட்டிக் காய்ச்சூரணம்)

162. சாதந் தும்மட்டிக் காயைப் பிளந்துமே
ஓத வுப்பிட் டவித்தா வியினில்
ஏக மாக விடித்துநற் சூரணம்
ஆக [85]வெருகடி வெந்நீரி லுண்ணுமே.

163. உண்ண பேதி முருங்கிலைக் கஞ்சியாய்
கன்ன பேதி கடுகெனக் கட்டுமாம்
வண்ண வாய்வுகள் வாங்குநற் சூரணந்
தின்ன மேகமுந் தீருநல் வெள்ளையே.

தும்மட்டிக் காயினைப் பிளந்து அதில் சாதத்தை வைத்து, உப்பிட்டு, ஆவியினில் அவித்துப் பின் நன்றாக இடித்துச் சூரணம் செய்து 1 - 2 கிராம் வீதம் கொடுக்க நன்கு பேதியாகும். இதனால் வாய்வுகள், மேகம், வெள்ளை முதலியன தீரும். பேதி மீறினால் முருங்கிலைக் கஞ்சி கொடுக்கக் கடுகெனக் கட்டும்.

## (குளிர் நடுக்கலுக்கு வெள்ளைப்பாடாண மாத்திரை)

164. வெள்ளைப் பாடாணம் வராகனு(ம்) மூன்றுடன்
தெள்ளுந் தாரஞ் சிலையிரண்டு வராகனாங்
கள்ள மூன்றுங் கருமத்தன் சாற்றினால்
மெள்ள வாட்டி யெடுவெந்தி யாகுமே.

165. மேவு நெற்பொரி வெல்ல முலைப்பாலை
கோவு மூன்றுநாள் குளிகை யருந்திட
சோவுங் குளிருஞ் சுரமு(ம்) நடுக்கலும்
போவும் பத்தியம் புளிதள்ளச் சாதியே.

| | | |
|---|---|---|
| வெள்ளைப் பாடாணம் | — | 12.6 கி. |
| அரிதாரம் | — | 8.4 கி. |
| மனோசிலை | — | 8.4 கி. |

இம்மூன்றையும் கருஊமத்தன் சாற்றினால் நன்கு ஆட்டியெடுத்துக் குளிகை செய்து நெற்பொரி, வெல்லம் இரண்டும் இட்டுக் காய்ச்சிய தாய்ப்பாலில்அனுபானித்து 3-நாட்கள், 1-குளிகை வீதம் கொடுக்கக் குளிர், சுரம், நடுக்கல் யாவும் தீரும். புளி நீக்கி உண்ண வேண்டும்.

## (நேத்திர நோய்களுக்கு சவுக்கார மை)

166. சாதி யுஞ்சவுக் கார மொருபலம்
வாதி வேப்பெண்ணெய் ஐந்து பலமிடு
நீதி முச்சாமம் நேக வரைத்தெடு
தீதி லாஒருமைச் சிமிழில் அடைத்திடே.

167. இடு(வுன்) கண்ணில் இளமுலைப் பாலினை
கடு(கத ன)ளவு கலிக்கங்கள் மாறிட
படுங்கா சம்பூ படலஞ் சதையறும்
விடு(வு)ஞ் சன்னிப்பேய் வேப்பெண்ணெய் மாத்திடே.

சவுக்காரம் — 35 கி.
வேப்பெண்ணெய் — 175 கி.

இரண்டையும் 9-மணி நேரம் நன்றாக அரைத்து, ஒரு மைச்சிமிழியில் அடைத்து, அதில் கடுகளவு தாய்ப்பாலில் கலந்து கலிக்கமிடக் கண்ணில் காசம், பூ, படலம், சதையறும்; இதனை உள்ளுக்குத் தர சன்னிநோய் தீரும்.

## (குளிர்சுரம்; வாதம், அழலைக்குக் கோரோசனை மாத்திரை)

168. மாத்துங் கோரோசனை லவங்க மதுரமும்
கோத்துந் திப்பிலி கோட்டம்நன் னாரிவேர்
மேத்தும் அக்கரா சம்பங்கி மொக்குடன்
சாத்தும் வகைக்குச் சமனெடை யாகுமே.

169. மேகும் முலைப்பால் விட்டரை முச்சாமம்
ஆகு(ம்) மாத்திரை மல்லிப்பிர மாணமாம்
ஏகுங் குளிர்சுர மெண்பது வாதமும்
போகும் பித்தம் பொரும லழலையே.

| | | |
|---|---|---|
| கோரோசனை | கோட்டம் | |
| இலவங்கம் | நன்னாரிவேர் | இவை சமஎடை |
| அதிமதுரம் | அக்கிராகாரம் | |
| திப்பிலி | சம்பங்கிமொக்கு | |

எடுத்துத் தாய்ப்பால் விட்டு 9-மணிநேரம் அரைத்து, 50 மி.கி. அளவுள்ள மாத்திரைகள் செய்து உலர்த்தி, (ஒரு மாத்திரை வீதம் தேனில் கொடுக்கக்) குளிர்சுரம், வாதம்-80, பித்தம், பொருமல், அழலை ஆகியவை தீரும்.

## (கடுப்பு, குடைச்சல், மகரணங்களுக்குப் பூரச்சூரணம்)

170. அழகு பூர மிரண்டு வராகனாம்
மிளகு [86] சங்கு மூலவேர் மல்லியும்
நழகு பரங்கி நான்கு வராகனாம்
சுழக யிடித்துநற் சூரணம் செய்திடே.

171. செய்யும் [87] (நல்ல) வெல்லத்தில் சேர்த்திடு மாடையாங்
கையும் மெய்யிற் கடுப்புக் குடைச்சலும்
மெய்யத னிலுள்ள மேக ரணங்களும்
பைய்ய விட்டு(ப்) பறக்குமுப் பில்லையே.

பூரம் — 8.2 கி.

| | | |
|---|---|---|
| மிளகு | கொத்தமல்லி | |
| சங்கன்வேர் | பரங்கிப்பட்டை | இவை ஐந்தும் வகைக்கு |
| மூலவேர் | | 16.4 கி. |

அனைத்தையும் நன்றாக இடித்துச் சூரணம் செய்து நல்ல வெல்லத்தில் 65 மி.கி. வீதம் கொடுக்க உடலில் கடுப்பு, குடைச்சல், மேகரணங்கள் யாவும் நீங்கும். உப்பில்லா உணவுண்ண வேண்டும்.

## (குடற்கிருமி, வாதத்திற்குக் குமரித்தைலம்)

172. இல்லை யேரண்டத் தெண்ணெ யொருபடி
நல்ல தேங்காய்ப்பா லாவின்பா லரைப்படி
கல்ல சதுரக் கள்ளிப்பா லுழக்குடன்
கொல்லை யீருள்ளிக் [88-89] குமரியுஞ் சார்விடே.

173. சாறுங் கடுக்காய் தான்றிக்கா யிந்துடன்
காரு(ம்) வெட்பாலை கார்போக வரிசியும்
ஏறு மேல மிவைகலந் தெண்ணெயில்
ஊறக் காய்ச்ச மெழுகுபத மாகுமே.

174. ஆகு முள்ளுக்கு மாடை கொடுத்திட
போகு(ம்) பேதியில் பூச்சி விழுந்திடும்
ஏகும் வாத மெண்பத்து நான்குடன்
சோக மாகுமுன் சோறமு துண்ணுமே.

ஆமணக்கெண்ணெய் — 1.3 லி.
தேங்காய்ப்பால் — 650 மி.லி.
ஆவின்பால் — 650 மி.லி.
சதுரக்கள்ளிப்பால் — 336 மி.லி.
ஈருள்ளிச்சாறு — 1.3 லி.
குமரிச்சாறு — 1.3 லி.

கடுக்காய்
தான்றிக்காய்
இந்துப்பு இவை வகைக்கு[2] 350 கி.
வெட்பாலை
கார்போகரிசி
ஏலம்

அனைத்தையும் கலந்தடுப்பேற்றி, மெழுகுபதத்தில் வடித்து உள்ளுக்கு 65 மி.கி. வீதம் கொடுக்க நன்கு பேதியாகும். அதில் குடற்கிருமி வெளியாகும்; 84 வகை வாதமும் தீரும். பேதி மீறி உடற்சோர்வு உண்டாகு முன், சோறமுது உண்ணல் வேண்டும்.

## (பல்ரணம், அரணைவீக்கத்திற்கு இந்துப்புக் குழம்பு)

175. உண்ணு மிந்து வெடியுப்பு கல்லுப்பு
திண்ணுந் துருசு [90]சீனஞ் சமனெடை
கண்ணுந் தூளயக் கரண்டி யிட்டுமே
பண்ணுந் தீயிற்பழச் சாறிட்டுக் காய்ச்சிடே.

176. இடும்பல் லுக்கு ரணசீழ்க் குத்தலும்
விடுமி ரண்டு வேளை யுறைந்திட
கடும்பல் லிற்கு அரணையின் வீக்கமுந்
தொடுமுன் னீட்டில் ஒடுங்கை கண்டதே.

இந்துப்பு துருசு
வெடியுப்பு சீனக்காரம் இவை சமஎடை
கல்லுப்பு

எடுத்துத் தூளாக்கி, அயக்கரண்டியிலிட்டுப் பழச்சாற்றில் காய்ச்சி எடுத்துப் பல்லில் இருவேளை தடவப் பல்லின் ரணம், சீழ், குத்தல் முதலியனவும். அரணை வீக்கமும் குணமாகும்.

## (பித்தப்பெருவயிறு, காசவீளைக்கு இந்துப்பாதி மெழுகு)

177. கண்டு யிந்து கல்லுப்பு வெங்காரம்
இண்டுச் சார்வெச் சாரம் வெடியுப்பு
வண்டு சீனஞ் சவுக்காரம் வளையுப்பு
விண்டு ரோகணி வெட்ப லாசியே.

178. கரிய சீரகங் கார்போக வித்துடன்
வரியமுந் நான்கொன்று வகைக்கொ ருபலம்
நெரிய வாளமும் நேர்பலம் மூன்று
முரிய வெள்ளுள்ளி மூன்று பலமிடே.

179. பலமான தேங்காய் பா(ர்)த்துமே வைந்துடை
நலமாய்த் திருவிமுன் நவச்சார மிந்துப்பு
புலமாய் எவச்சாரம் பூண்டுரித் தேபிசை
உலைவா யினிற்கட்டி யொருபிட் டவியுமே.

180. அவியு முள்ளி யழிபத மாயெடு
பவிய கிட்டியா லப்பாலைப் பிழிந்திடு
குவியமுன் மருந்தையுங் கூட்டிப் பொடித்திடு
கவியக் கா(ய்)ச்சிடக் கடுமெழு காகுமே.

181. ஆகும் பேதி யரைத்துட்டுக் கீந்திட
போகும் பித்தப் பெருவயிறுகா சவீளையு(ம்)
ஏகும் நீரா காரத்தி லீந்திட
வாகும் வியாதி வகையறிந் தேத்திடே.

| | | |
|---|---|---|
| இந்துப்பு | இண்டுச்சாறு | |
| கல்லுப்பு | கடுகுரோகிணி | |
| வெங்காரம் | வெட்பாலையரிசி | |
| வெச்சாரம் | கருஞ்சீரகம் | |
| வெடியுப்பு | கார்போகரிசி | |
| | என்னும் 10-ம் வகைக்கு 35 கி. | |
| சீனாக்காரம் | நேர்வாளம் | — 52.5 கி. |
| சவுக்காரம் | வெள்ளுள்ளி | — 105 கி. |
| வளையலுப்பு | முற்றிய தேங்காய் | — 5 |

5 - தேங்காயினையும் உடைத்துத் திருவிய பூவுடன் நவச்சாரம், இந்துப்பு, எவச்சாரம், உரித்த பூண்டு என்னும் நான்கு மருந்துச் சரக்குகளையும் கலந்து நன்கு பிசைந்து, உலைவாயில் வேடுகட்டப் பிட்டவித்து உள்ளி அழியும் பத்தில் எடுத்துக் 'கிட்டி' எனும் கருவியால் அவற்றின் பாலைப் பிழிந்து அதில் பிற மருந்துச் சரக்குகளைப் பொடித்துச் சேர்த்துக் காய்ச்சி எடுக்க மெழுகு போலாகும். இதனை 12.5 மி.கி. வீதம் நீராகாரத்தில் உள்ளுக்குக் கொடுக்கப் பேதியாகும். இதனால் பித்தப் பெருவயிறு, காசவீளை முதலியன தீரும்.

## (பேதிக்கு தேங்காய்ச் சாரம்)

182. தேத்துந் தேங்காய் திறந்துநீ ரூற்றிடு
பார்(ர்)த்துத் [91]திருடியின் பால்பல(ம்) மூவரை
வார்(ர்)த்துத் தேங்காயின் வாயடைத் தேரவி
காத்து மூன்றுநாள் காயை உடைத்திடே.

183. எடுவெந் நீரால் நேசக் குழப்பியே
கடுகு பதமாய் கா(ய்)ச்சி ([92]சீசாவீல்)
விடு(வும்) பேதிக்கு வராக னரையதாய்
கொடுவனு பானத்தில் கூட்டி யருந்திடே.

184. அரிய தேனி லதுபழஞ் ச(ர்)க்கரை
பிரிய வெல்லம் பலாப்பழம் பேரீ(ச்)சம்
குரிய விட்டுக் குழப்பிக் கொடுத்திட
[93]விதியி லுள்ள வியாதியுந் தீருமே.

தேங்காயினைத் திறந்து அதிலிருக்கும் நீரை வெளியே ஊற்றிவிட்டு, அதில் திருகுகள்ளிப்பால் — 52.5 கி. விட்டுத் தேங்காயின் வாயை அடைத்துச் சூரியபுடமாக 3 — நாட்கள் வைத்துப் பின் காயை உடைத்து வெந்நீரில் குழப்பிக் காய்ச்சி கடுகுபதத்தில் வடித்துச் சீசாவில் பத்திரப் படுத்தி, 2.1 கி. வீதம் தேனில் பழஞ் சர்க்கரை, வெல்லம், பலாப்பழம், பேரீச்சம்பழம் முதலியன கலந்த பஞ்சாமிர்தத்தில் அனுபானித்துக் கொடுக்க நன்கு பேதியாகும். இதனால் கருமவியாதி என்று சொல்லப் படுகின்ற நோய்களுந் தீரும்.

## (கிரந்திப் புண்களுக்குப் பூரக்கற்கள்)

185. தீரும் பூரம் வராக னெடையுடன்
பாருங் குறுவை யரிசி பலமதாய்
நேரும் நிம்பழச் சாற்றினா லாட்டிடு
காருஞ் [94]சுண்டைக் காயள வாகுமே.

186. ஆகு மைந்துநாள் மாறிக் கொடுத்திட
வேகுங் கிரந்திகள் புண்களு மேகிடும்
கூவும் வாதப் பிடிப்புக் குடைச்சலும்
ஏகும் பத்திய முப்பில்லா தன்னமே.

| | | |
|---|---|---|
| பூரம் | — | 4.2கி |
| குறுவையரிசி | — | 35 கி. |
| பழச்சாறு | — | தேவையான அளவு |

இருமருந்துச் சரக்குகளையும் பழச்சாற்றில் ஆட்டி, 2 கி. வீதம் 5 நாட்கள் கொடுக்கக் கிரந்திகள், புண்கள், வாதப்பிடிப்பு, வாதக் குடைச்சல் ஆகியவை தீரும். உப்பு நீக்கி உண்ண வேண்டும்.

## மாந்தத்துக்கு வாலசஞ்சீவி—II

187. தன்னச் சிந்திற் களிப்பாக்குஞ் சிவதைவேர்
துன்னக் கடுக்காயும் ரோகணி சுக்குடன்
கன்னக் குமரி(யி)ன் காய்ந்த சருகுமாம்
மின்னுஞ் சமானமாய் மீட்டுங் கசாயமே.

188. மீட்ட மாந்தங்கள் வெதுப்புப் பொருமலும்
வாட்ட மாத்திரை வாலசஞ் சீவியாங்
காட்டச் சுழிகணங் கா(ய்)ச்சலு மேகிடுங்
கூட்டு மாந்தங் குடிப்புகுஞ் சுக்குமே.

| | | |
|---|---|---|
| சீந்தில் | கடுகுரோகணி | |
| களிப்பாக்கு | சுக்கு | |
| சிவதைவேர் | சோற்றுக்கற்றாழையின் | இவை சமஎடை |
| கடுக்காய் | காய்ந்த சருகு | |

எடுத்துக் குடிநீரிலிட்டுக் கொடுக்க மாந்தங்கள், உடல்வெதுப்பு, வயிற்றுப் பொருமல் ஆகியன தீரும். ஆட்டி மாத்திரைகளாக்க அது 'வால சஞ்சீவி' எனப் பெயர் பெறும்; (ஒரு குளிகை வீதம் தேனில்) கொடுக்கச் சுழிகணம், காய்ச்சல், மாந்தம் ஆகியன தீரும்.

## (அக்கினிமந்தம், அசீரணத்துக்குச் சுக்குக் குடிநீர்)

189. சுக்கு திப்பிலி சொல்லதன் மூலமும்
சிக்கு [95]வேலி செவிய(ம்) நறுக்கியே
மிக்க குடிநீர் மேவி யருந்திட
அக்கினி மந்த மசீரண மேகுமே.

சுக்கு வேலி
திப்பிலி செவியம் இவை சமஎடை
திப்பிலிமூலம்

எடுத்து ஒன்றிரண்டாகத் தட்டிப்போட்டுக் குடிநீரிட்டுக் கொடுக்க அக்கினிமந்தம், அசீரணம் ஆகியவை தீரும்.

### (பித்தங்களுக்கு நன்னாரிக் குடிநீர்)

190. ஏகும் நன்னாரி வெட்டிவே ரேலக்காய்
மாகு(ஞ்) சோம்பு பரங்கி மதுரமும்
மீகும் பேய்ப்புடல் மீட்டுங் கழாயமாம்
ஏகும் [96]பித்தங்கள் எண்ணைந்து மாறுமே.

நன்னாரி பரங்கிப்பட்டை
வெட்டிவோர் அதிமதுரம்
ஏலக்காய் பேய்ப்புடல் இவை சமஎடை
பெருஞ்சீரகம்

எடுத்துக் குடிநீரிட்டுக் கொடுக்கப் [97]பித்தங்கள் — 40-ம் மாறும்.

### (சுரம், சன்னி, வாதத்துக்கு இலிங்க மாத்திரை)

191. மாறும் லிங்க மரிதாரம் பூரமும்
வீறும் வாளம்வெண் காரஞ் சமனெடை
பாறும் நிம்பழச் சாற்றினா லாட்டிடு
கூறு(ம்) மாத்திரை குன்றி யளவுமே.

இலிங்கம் வாளம்
அரிதாரம் வெங்காரம் இவை சமஎடை
பூரம்

எடுத்துப் பழச்சாற்றினாலாட்டி 130 மி.கி. அளவுள்ள மாத்திரைகளாகச் செய்து (ஒரு குளிகை வீதம் தேனில் கொடுக்கச் சுரம், சன்னி, வாதநோய்கள் ஆகியன தீரும்).

### (நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சலுக்குச் சிலாசத்து பற்பம்)

192. மேவு மிந்துவெங் காரம் வெடியுப்பு
மூவுஞ் சமனாய் மூட்டுஞ் சிலாசத்து
மேவுங் குமரிச்சா றிட்டரை பில்லையாய்
தீவுஞ் சீலைமண் செய்புடம் வையுமே.

193. வையும் பற்பம் வராகன்தே(ன்) நெய்யினில்
வெய்யுஞ் சுருக்கு எரிச்சலு(ம்) மாறிடும்
பைய நீரும் பளிச்சென் றிறங்கிடும்
உய்ய விச்சா(ப்) பத்தியம் விள்ளவே.

இந்துப்பு
வெங்காரம் இம்முன்றும் சமஎடை
வெடியுப்பு

சிலாசத்து — இம்மூன்றும் சேர்ந்த எடைக்குச் சமஎடை எடுத்துக் குமரிச்சாறு விட்டு நன்கு அரைத்து, வில்லைதட்டி, வில்லைகளைக் கீழ்ச்சட்டியிலிட்டு, மேல்சட்டி கொண்டு மூடிச் சீலைமண் செய்து புடமிடப் பற்பமாகும். இப்பற்பத்தை 4.2 கி. வீதம் தேன் அல்லது நெய்யினில் கொடுக்க, நீர்ச்சுருக்கு, நீர் எரிச்சல் முதலியவை நீங்கித் தடைப்பட்ட சிறுநீர் பளிச்சென்றிறங்கும். இச்சாப்பத்தியம்.

## (மேகம், புண்புரைக்கு வெள்ளருகாதித் தைலம்)

194. வெள்ள ருகுவல் லாரை விழுதியும்
குள்ள சங்கங் குப்பி பிரமியாம்
கொள்ள துத்தியுங் கோட்டங் கிரந்தியும்
வள்ளப் பொடுதலை [98]வட்டத் திருப்பியே.

195. வட்டக் கோழி முசுக்கை நுணாவிலை
கட்டைத் தாமரை கரிசலாங் கண்ணியும்
திட்ட வாமரை யுஞ்சீமை யகத்தியும்
நெட்டக் குமரி நிலக்கடம் பிளநீரே.

196. ஏக யிவையு மிடித்துச்சார் வாங்கிடு
ஆக வகைவகைக் காழாக்குச் சார்விடு
சாகங் கழுதையின் சாணிப்பா லுழக்குடன்
வேகும் விளக்கெண்ணெய் விடுபடி யிரண்டுமே.

197. மேலும்வெள் ளுள்ளியு மெண்ணைந்து வராகனாம்
வாலு(ம்) வெட்பாலை யரிசிகார் போகமும்
சீல ரோகணி [99]யிருசீர [100]மெந்தியம்
நீலகச் சோலம் நீரடி முத்துமே.

198. முத்துங் காட்டு முருக்குடன் வித்துமாம்
மொத்து மிவையு மொருபல மாயிடும்
நத்து மீருள்ளி நான்கரைப் பலமதாய்
கொத்தி யெண்ணெயில் கூட்டி யெரித்திடே.

199. எரியு வுள்ளியு(ம்) மேல்பதம் பா(ர்)த்தெடு
சூரிய குங்குமங் கோரோசனை யேலமும்
பரியுஞ் சாதிக்காய் பத்திரி லவங்கமும்
பிரிய மாகப் பொடிபண்ணித் தூவிடே.

200. தூவி யேழுநாள் துட்டெடை உண்டிட
பூவில் மேகமும் புண்புரை மாறிடும்
மேவி [101]மேக மிருபதும் போய்விடும்
மூவிப் பத்திய முப்பில்லா தன்னமே.

| | | |
|---|---|---|
| வெள்ளருகு | வட்டத்திருப்பி | |
| வல்லாரை | கோழிமுசுக்கை | இவற்றைத் |
| விழுதி | நுணாவிலை | தனித்தனியே |
| சங்கங்குப்பி | தாமரை | இடித்துப் |
| பிரமி | கரிசலாங்கண்ணி | பிழிந்தசாறு |
| துத்தி | வெட்பாலை | வகைக்கு |
| கோட்டம் | சீமையகத்தி | 168 மி.லி |
| கிரந்தி | குமரி | |
| பொடுதலை | நிலக்கடம்பு | |

| | |
|---|---|
| இளநீர் | — 168 மி.லி. |
| கழுதைச்சாணிப்பால் | — 336 மி.லி. |
| விளக்கெண்ணெய் | — 2.6 கி. |
| வெள்ளுள்ளி | — 168 கி. |
| ஈருள்ளி | — 157.5 கி. |

| | |
|---|---|
| வெட்பாலையரிசி | |
| கார்போகரிசி | |
| கடுகுரோகினி | |
| இருசீரம் | |
| வெந்தயம் | வகைக்கு |
| கச்சோலம் | 35 கி. |
| நீரடிமுத்து | |
| காட்டுமுருங்கையின் வித்து | |

அனைத்தையும் கலந்து அடுப்பேற்றி, உள்ளி நசிக்கும் பதத்தில், அதில்

| | | |
|---|---|---|
| குங்குமப்பூ | சாதிக்காய் | இவை |
| கோரோசனை | சாதிப்பத்திரி | வகைக்கு |
| ஏலம் | இலவங்கம் | (4.2 கி.) |

எடுத்துப் பொடிபண்ணித் தூவி, இறக்கி வைத்துக் கொண்டு, 25 மி.கி. வீதம் ஏழு நாட்கள் உள்ளுக்குக் கொடுக்க *மேகம் — 20 வகையும், புண்புரைகளும் மாறும். உப்பில்லாப்பத்தியம்.

## (கருத்தரிக்க வீழித்தைலம்)

201. அன்னந் தேங்காய்ப்பால் மஞ்சட்பால் வீழியும்
தின்னும் வேளை நிலவாகைச் சாறுடன்
வன்ன வைந்து வகைபடிச் சார்எடு
பண்ணும் விளக்கெண்ணெய் படியினிற் சார்விடே.

202. விட்டுக் காயம் வராகனும் பத்துடன்
கட்டு யிந்துப்பு கால்பல மாயெடு
திட்ட மாந்திரி கடுகுந் திரிபலை
முட்ட வேயாறு மூன்று பலமிதே.

203. இதையெ லாமறைத் தேவிடு யெண்ணெயில்
பதம தாயெரி பாகம் மெழுகதாம்
விதம தாயொரு வேளை பலமிட
சதம தாய்(ப்)பேதி தாக்கும் பலக்கவே.

204. பலக்க வேகட்டு பேதியில் வாங்கிடும்
விலக்க நாள்முதல் விடுபல(ம்) மூன்றுநாள்
துலக்க மாயிடுஞ் சூதக வாய்வுகள்
கலக்கந் தீர்ந்துடன் கருவுந் தரிக்குமே.

| | | |
|---|---|---|
| தேங்காய்ப்பால் | வேளைச்சாறு | |
| மஞ்சட்பால் | நிலவாகைச்சாறு | இவை வகைக்கு |
| விழிச்சாறு | விளக்கெண்ணெய் | 1.3லி |

காயம் — 42 கி.
இந்துப்பு — 8.75 கி.

திரிகடுகு, திரிபலை — என்ற தொகைச் சரக்குகள் ஆறும் வகைக்கு 105 கி.

எல்லாவற்றையும் அரைத்து கலந்து, அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகு பதத்தில் ஒருவேளை 35 கி. கொடுக்கக் கடுமையாகப் பேதியாகும். அதில் பேதிக் கட்டு வாங்கும்; விலக்க நாள் முதல் மூன்று நாட்கள் கொடுக்கச் சூதக வாய்வுகள் நீங்கிக் கருவுந் தரிக்கும்.

## (குளிர்சுரம், கொருக்கு, பெருவயிறுக்கு நவச்சாரக் கற்கம்)

205. தரிக்கு மேநவச் சாரம் பலமரை
எரிக்குந் திருடிப்பால் விட்டரை சிமிழியில்
பரிக்குங் [102]குன்றி [103]பணவெடை யீந்திட
கொருக்கு மாந்தை குளிர்சுர மேகுமே.

206. ஏகுங் [104]குன்ம(ப்) பெருவயி றாமையும்
ஆகும் பேதியு மடங்காமல் மீறினால்
தாகு(ம்) நிம்பழச் சாறும் அருந்திட
காகும் பேதியுங் [105]கட்டுங்கை கண்டதே.

நவச்சாரம் — 35 கி.
திருகுகள்ளிப்பால் — தேவையான அளவு

இரண்டையும் சேர்த்து, நன்கு அரைத்துச் சிமிழியில் வைத்துக்கொண்டு 130 மி.கி. — 488 மி.கி. வரை கொடுக்கப் பேதியாகும். அதனால் கொருக்கு, மாந்தை குளிர்சுரம், குன்மப் பெருவயிறு, ஆமைப் பெரு வயிறு முதலியன தீரும். பேதி அடங்காமல் மீறினால் பழச்சாறு அருந் திட வேண்டும். பேதி உடனே கட்டும் இம்முறை கைகண்டதாகும்.

## (கிரந்திப்பிடிப்பு, மேகத்திற்குப் பூரக்கற்கம்)

207. கண்டு பூரமுங் கால்பல மாயெடு
விண்டு வெள்ளை மிளகு பலமதாய்
அண்டு கெந்தி யரைக்கால் பலமிடு
கொண்டு வெந்நீரால் கூட்டி யரையுமே.

208. அரையுஞ் சாம மளவுதக்[106] காளியாம்
அரையு முள்ளுக்கு [107]மைந்துநா ளேழுநாள்
புரையுங் கிரந்திப் பிடிப்புகள் மேகமுங்
கரையும் பத்தியங் கைப்புத் தவிரவே.

பூரம் — 8.75 கி. கந்தகம் — 4.375
வெள்ளைமிளகு — 35 கி வெந்நீர் — தேவையான அளவு

மருந்துச் சரக்குகளை, வெந்நீர் சிறுகச் சிறுக விட்டு நன்கரைத்து 500 மி.கி. அளவு, 35 நாட்கள், உள்ளுக்குக் கொடுக்கக் கிரந்திப் பிடிப்பு கள், மேகம் நீங்கும். கைப்புச் சுவை தவிர்க்க வேண்டும்.

### (மேகம், மூலம், படைகளுக்கு மேகயெண்ணெய்)

209\. ஊரும் விளக்கெண்ணெ யொருபடி யாமதில்
கூரு மிருள்ளி குமரிபலம் பத்து
மேரு நிலப்பனை மெருக னமுக்குரா
காருஞ் சாரணைக் கருடன் கிழங்குளே.

210\. கிழங்கு வகைக்கு யிரண்டு பலமுடன்
முழங்கு வைந்துபலம் முடக்கொத் தானும்
வழங்கு யெண்ணெ யடுப்பினி லேற்றிடு
பழங்கு மீருள்ளி குமரியும் பா(ய்)ச்சிடே.

211\. பா(ய்)ச்செ ரியரைப் பக்குவ மானபின்
வீச்சுக் கிழங்குகள் பில்லையாய்ச் சீவியே
பீ(ய்)ச்சு மரைதர முடக்கொத்தானை மேவிடுங்
கா(ய்)ச்சு பதமுங் கிழங்கு மிதக்குமே.

212\. மேக யெண்ணெய் விடுபல மரையதாம்
போகும் மூலம் படைகளு(ம்) மேகமும்
ஏகும் பத்துநா ளினி(ல்)விடா துண்டிட
ஆகும் பத்திய முப்பு வறுத்திடே.

| | | |
|---|---|---|
| விளக்கெண்ணெய் | — | 1.3 லி. |
| ஈருள்ளி | — | 350 கி. |
| சோற்றுக்கற்றாழை | — | 350 கி. |
| முடக்கொத்தான் | — | 175 கி. |

| | |
|---|---|
| நிலப்பனைக்கிழங்கு<br>மெருகன்கிழங்கு<br>அமுக்கிராக்கிழங்கு<br>சாரணைக்கிழங்கு<br>கருடன் கிழங்கு | வகைக்கு 70 கி |

ஆமணக்கெண்ணெய், ஈருள்ளி, குமரி இவற்றை அடுப்பேற்றிக் காய்ச்சி அரைப் பக்குவத்தில், ஐவகைக் கிழங்குகளையும் பில்லையாகச் சீவி, முடக்கொத்தானையும் சேர்த்துக் கலந்து நன்கு காய்ச்சும் போது, கிழங்கு மிதக்கும்; அப்பருவத்தில் இறக்கி, 17.5 கி. வீதம் 10—நாட்கள் தொடர்ந்து கொடுக்க மூலம், படைகள், மேகம் முதலியவை நீங்கும்; உப்பு வறுத்துச் சேர்க்க வேண்டும்.

(புற்று, மேகப்படைகளுக்குக் கருடன் கிழங்குத் தைலம்)

213. இடுமே ரண்ட யெண்ணெ யொருபடி
விடு(மே) கருடன் மெருக னமுக்கிரா
படுசா ரணைநிலப் பனைபல மிரண்டுடன்
கொடுமீ ருள்ளிக் குமரியின் சாறுமே.

214. மேவு(ம்) நுணாவு மகத்திப் பிரமியும்
தாவு(ம்) வகைக்குச் சார்படி கால்விடு
காவு(ம்) ரோகணி வெட்பாலை கார்போகம்
நீவு கருஞ்சீரகம் நீரடி முத்துமே.

215. முத்துங் கூட்டி முழுபத மாயெரி
[108]பத்து நாளும் பலமைந்து வுண்டிட
புற்று மேகப் படைகளு(ம்) மாறிடும்
சற்று மிச்சாப் பத்தியந் துருசதே.

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய் | — | 1.3 லி. |
| ஈருள்ளிச்சாறு | — | 325 மி.லி. |
| குமரிச்சாறு | — | 325 மி.லி. |

நுணாவிலைச்சாறு
அகத்திச்சாறு — வகைக்கு 325 மி.லி.
பிரமிச்சாறு

கருடன் கிழங்கு
மெருகன்
அமுக்கிரா — வகைக்கு 70 கி
சாரணை
நிலப்பனை

கடுகுரோகணி
வெட்பாலையரிசி
கார்போகரிசி — இவை வகைக்கு
கருஞ்சீரகம் — [109](4.2 கி.)
நீரடிமுத்து

அனைத்தையும் கலந்து காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொண்டு 10— நாட்கள், 17.5 கி. வீதம் ஒருவேளை கொடுத்து வரப் (மொத்தம் 175 கி. ஆகும்) புற்று, மேகப்படைகள் ஆகியவை தீரும். இச்சாப் பத்தியம்.

## (கண்ணோய்களுக்குத் துருசு மாத்திரை)

216. துருசு [110]சங்கு தலையோடு துத்தமும்
முரியக் கௌரியு மோரிதழ்த் தாமரை
நெறியா(ய்) விட்டரை நிம்பழச் சாற்றினால்
கரிய மாத்திரை கண்முலைப் பாலிடே.

| | | |
|---|---|---|
| துருசு | துத்தம் | |
| சங்கு | கௌரி | இவை சமஎடை |
| தலையோடு | ஓரிதழ்த்தாமரை | |

எடுத்து, எலுமிச்சம் பழச்சாறு சிறுகச் சிறுக விட்டு நன்கரைத்துச், சிறு வில்லைகளாக்கி, உலர்த்தி வைத்துக் கொண்டு, தாய்ப்பாலில் இழைத்துக் கண்ணில் கலிக்கமிடக் கண்காசம் முதலிய நேத்திரநோய்கள் தீரும்.

## (வாய்வுகள், மேகப்பிடிப்புகளுக்குச் சுக்குக் குடிநீர்)

217. பாலு(ஞ்) சுக்கு பரங்கி மதுரமும்
நீலு(ம்) மல்லி நிலவாகை யைந்துடன்
காலமே பாலுங் கசாய மருந்திட
சாலவந் திப்பிற் ச(ர்)க்கரை கூட்டுமே.

218. கூட்டு மைந்துநாள் குருமுறை தப்பாமல்
வாட்டும் வாய்வுகள் மலங்கள் கழிந்திடும்
பூட்டு மேகப் பிடிப்புகள் வாங்கிடும்
சூட்டு மந்தி சந்தியு(ம்) சுக்குமே.

| | |
|---|---|
| சுக்கு | |
| பரங்கிப்பட்டை | |
| அதுமதுரம் | இவை சமஎடை |
| கொத்தமல்லி | |
| நிலவாகை | |

எடுத்துக் குடிநீரிட்டுக் காலையில் பாலிலும், மாலையில் சர்க்கரையுடனும் (15-30 மி.லி. வீதம்) 5-நாள் கொடுக்க வாய்வுகள், மேகப் பிடிப்புகள் வாங்கிடும்; மலங்கள் கழிந்திடும்.

## (விக்கலுக்குச் சுக்காதிச்சூரணம்)

219. சுக்கு திப்பிலி சுட்ட வசம்புடன்
மிக்க யேல(ம்) மிளகு பிரமியும்
சிக்க வமுக்கிரா தேனி லருந்திட
விக்க லானது வெளிவிட் டோடுமே.

| | | |
|---|---|---|
| சுக்கு | மிளகு | |
| திப்பிலி | பிரமி | இவை சமஎடை |
| வசம்புசுட்டசாம்பல் | அமுக்கிரா | |

எடுத்துச் சூரணித்து, (½ ÷ 1 கி. வீதம் மூன்று வேளை) தேனில் கொடுக்க விக்கல் விடும்.

## (இரத்தக் கழிச்சலுக்குத் தேற்றான் கற்கம்)

220. ஒடுந் [111]தேற்றா னொருபலங் கொட்டையை
ஆட்டு(ந்) தயிரி லரைத்துக் குழப்பியே
நாட்டு மூன்றுநாள் தயிரு மருந்திட
வாட்டு (மி)ரத்தக் கழிச்சலு(ம்) மாறுமே.

தேற்றான் கொட்டை — 35 கி.
ஆட்டுத்தயிர் — தேவையான அளவு

இவற்றை நன்கரைத்து, மூன்று நாட்கள் கொடுத்துத் தயிரும் கொடுக்க உடலை வாட்டுகின்ற இரத்தக் கழிச்சல் தீரும்.

## (இரத்தக்கழிச்சலுக்குத் திப்பிலியாதிக் குடிநீர்)

221. மாறு(ந்) திப்பிலி சுக்குமா வாரையும்
வேரு(ம்) மிளகு யிலந்தங் கொழுந்துடன்
காரும் பிரண்டைக் கொழுந்து கலந்துமே
கூறுங் கசாயங் கொடுமூன்று நாளுமே.

| | | |
|---|---|---|
| திப்பிலி | மிளகு | |
| சுக்கு | இலந்தக்கொழுந்து | இவை சமஎடை |
| ஆவாரை | பிரண்டைக்கொழுந்து | |

எடுத்துக் குடிநீரிட்டு (30 மி.லி. — 60 மி.லி. வீதம்) கொடுக்க இரத்தக் கழிச்சல் தீரும்.

## (இரத்தக் கழிச்சலுக்கு நிம்பழக் கற்கம்)

222. நாளு(ம்) நிம்பழ நடுவில் துளைத்திடு
தாளும் அபிலியுஞ் சாதிக்காய் பத்திரி
வாளுஞ் சீரகம் ஓமம் வராகனாந்
தூளும் பழத்திற் திணித்துமேல்[112]சாணமே.

223. சாண மப்பிச் சரசமாய்ச் சுட்டெடு
[113]காணித் தயிரில் கழுவி யரைத்திடு
கூணிகா சுக்கட்டி கூட்டிக் கொடுத்திட
ஆணியி ரத்தக் கழிச்ச லடங்குமே.

எலுமிச்சம்பழம் — 1
அபினி சீரகம்
சாதிக்காய் ஓமம் வகைக்கு 4.2 கி.
சாதிப்பத்திரி

எலுமிச்சம் பழத்தைத் துளைத்து அதில் மற்ற மருந்துச் சரக்குகளைப் பொடித்துத் திணித்து மேலே சாணத்தால் பூசித் தணலிலிட்டு சுட்டெடுத்து, நன்கு கழுவி, 12.5 மி.லி. தயிரில் கலந்து, அரைத்துக் காசுக் கட்டியும் கலந்து கொடுக்க இரத்தக் கழிச்சல் அடங்கும்.

## (சோகைக்கு அரப்பொடிக் கற்கம்)

224. அடங்க [114]சோம்புவால் மிளகு [115]அரப்பொடி
மடங்குங் [116]கரிசீரகம் வகையொன்றுக் கோர்பலம்
முடங்க வெள்ளுள்ளி மிளகுட(ன்) நால்பலம்
தடங்கில் லா(க்)கையான் சார்விட் டரையுமே.

225. அரையு மு(ரு)ண்டை யளவு கழற்[117] (காய்)
உரையு மெள்ளெண்ணெய் விட்டுர வியில்லை
மரையு முள்ளுக்கு மண்டலங் கொண்டிட
கரையுஞ் சோகைசுறாக் கருவாடு சேருமே.

பெருஞ்சீரகம்
வால்மிளகு
அரப்பொடி வகைக்கு 35 கி.
கரி
சீரகம்

வெள்ளுள்ளி
மிளகு வகைக்கு 140 கி.

கையாந்தகரைச் சாறு
எள்ளெண்ணெய் தேவையான அளவு

அனைத்தையும் நன்றாக அரைத்து, 5 கி. அளவுள்ள உருண்டைகள் செய்து, தேவையான அளவு விட்டு சூரியபுடமாய் வைத்துப், பின் உள் ளுக்கு (ஒரு உருண்டை வீதம்) 40-நாட்கள் கொடுக்கச் சோகை மாறும்; சுறாக் கருவாடு உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### (சோகை, இருமல், அழலைக்குக் காந்தச் செந்தூரம்)

226. சேருங் காந்த மொருசேர் பொடிசெய்து
ஊரு(ம்) நிம்பழச் சாற்றினில் மூன்றுநாள்
பாரு(ம்) சாமம்(ம்)நால் பழச்சாற்றி லரைத்தெடு
சேரும் பில்லை [118-119]கெசபுடந் தாக்கிடே.

227. தாக்குஞ் செந்தூரந் தான்திரி கடுகுடன்
நோக்குஞ் சோகை சுவாச யிருமலும்
போக்கும் பித்தப் பொரும லழலையும்
மாக்கும் ஆவின்நெய் மோர்பா லருந்துமே.

காந்தம் — 280 கி.
பழச்சாறு — தேவையான அளவு

இவற்றை மூன்றுநாட்கள் நன்கு ஊறச்செய்து பின் 12-மணிநேரம் பழச்சாறு சிறுகச் சிறுக விட்டு நன்கு அரைத்து, வில்லை செய்து (கீழ்ச்சட்டியில் வில்லைகளை வைத்து, மேல்சட்டி கொண்டு மூடிச் சீலைமண் செய்து) 1000-வரட்டிகள் கொண்டு கெச புடமிடச் செந் தூரமாகும். இதனைத் (65 மி.கி. 130 மி.லி. வீதம் 40-நாட்கள் கொடுக்க) திரிகடுகுச் சூரணத்தில் கலந்து (தேனில்) கொடுக்கச் சோகை, சுவாசமிருமல், பித்தம், பொருமல், அழலை முதலியன தீரும்; பசும் பால், மோர், நெய் உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### (ஈளை, இருமல், காசத்துக்குத் தூதுவேளை இளகம்)

228. மேகுந் தூதுவேளை யிலையு மொருபடி
வேக மாவின்நெய் விட்டு வறுத்தெடு
மாகும் பால்விட்டு மைபோ லரைத்தெடு
பாகந் திப்பிலி சுக்கு(யி) லவங்கமே.

229. மேவுந் தேக்கும் [120]ஈரரத்தைச் செவியமுந்
தாவு மிளகுடன் சூரணஞ் செய்திடு
ஆவின் நெய்தேன் அரைத்த விழுதுடன்
மூவு(மி) லேகிய(ம்) முறுகாம லாக்கிடே.

230. இடுவு(ம்) உள்ளுக்கு [121]எண்ணெந்து நாளினில்
கடுவுங் காந்தியால் காணும் இருமலும்
படு(வு)ம் ஈளை இ(ரை)ரப்புடன் காசமும்
விடு(வு)ங் காந்தச்செந் தூரமிட் டுண்ணவே.

| | | |
|---|---|---|
| தூதுவேளையிலை | — | 1.3 லி. |
| பசுநெய் | | தேவையான |
| பசும்பால் | | அளவு |

தூதுவேளையிலையைப் பசுநெய்விட்டு வறுத்துப் பின் பசும்பால் விட்டு மைபோல் அரைத்துக் கொள்ள வேண்டும்.

| | | |
|---|---|---|
| திப்பிலி | சிற்றரத்தை | |
| சுக்கு | பேரரத்தை | இவை |
| இலவங்கம் | செவியம் | சமஎடை |
| தேக்கு | மிளகு | |

எடுத்துச் சூரணித்து, அதனைத் தேன், நெய் ஆகியவற்றோடு அரைத்த தூதுவேளை விழுதுடன் கலந்து அடுப்பேற்றி, இலேகியபதம் முறுகாமல் பார்த்தெடுத்துக் கொள்ளவேண்டும். இதை 2 - 5 கி. வீதம் காந்தச் செந்தூரம் (65 - 130 மி.கி.) கலந்து கொடுக்க, இருமல், ஈளை, இரைப்பு, காசம் முதலியவை தீரும்.

### (குன்மம், அக்கினிமந்தத்துக்கு சீரகச் சூரணம்)

231. உண்ண சீரம் வெடியுப்பு வோமமும்
திண்ண காயந் திரிடு கிந்துவும்
ஒண்ண வகைக்கொ ருபல மாயெடு
கண்ண விடிக்கருஞ் சீரமுங் கூட்டுமே.

232. கூட்டுஞ் சூரணங் குன்ம மகன்றிடும்
வாட்டு மக்கினி மந்தம் பறந்திடும்
பூட்டு முட்ணப் பொருமல் புளிப்புடன்
காட்டுந் (தீபனங் கைமுறை தப்பாதே).

| | | |
|---|---|---|
| சீரகம் | திரிகடுகு | |
| வெடியுப்பு | இந்துப்பு | வகைக்கு 35 கி. |
| ஓமம் | கருஞ்சீரகம் | |
| காயம் | | |

அனைத்தையும் ஒன்றாகக் கலந்து இடித்து, நன்கு சூரணம் செய்து (1 - 2 கி. வீதம்) கொடுக்கக் குன்மம், அக்கினிமந்தம், உட்ணமிகுதியால் உண் டாகும் பொருமல், புளிப்புத்தன்மை யாவும் மாறும்; பசி நன்றாக உண் டாகும்.

### (வெள்ளோளக்காளம், விக்கலுக்கு நெற்பொரியாதி அவிழ்தம்)

233. தப்பா [122]நெற்பொரி [123]முப்பழஞ் சர்க்கரை
மப்பா வேலம் மதுர[124]முச் சீரகம்
கொப்பா சுக்குடன் குமட்டி மாதுளை
ஒப்பாகக் கூட்டிநன் றாயுண்ணு மவிழ்தமே.

234. மேலும் பித்த வறட்சிவெள் ளோக்காளம்
தூல வத்தியிற் சுரதாப விக்கலும்
வால தோடமு மன்ன வரோசகம்
பாலும் மோர்நெய் பத்திய மாகுமே.

| | | |
|---|---|---|
| நெற்பொரி | முச்சீரகம் | |
| முப்பழம் | சுக்கு | |
| சர்க்கரை | குமட்டி | இவை சமஎடை |
| ஏலம் | மாதுளை | |
| மதுரம் | | |

எடுத்து, நன்றாக அரைத்து அவிழ்தமாக்கி உண்ண பித்தவறட்சி, வெள் ளோக்காளம், சுரதாப விக்கல், தோடம், அன்னத்தில் வெறுப்பு முதலி யன நீங்கும். பால், மோர், நெய் முதலியன பத்தியத்திற்காகும் பொருட்க ளாகும்.

### (கல்லடைப்புக்கு நீர்முள்ளிப்பால்)

235. மேவு நீர்முள்ளி விதையாவின் பாலினால்
நேவ (வ)ரைத்துட னின்று குடித்திட
காவுங் கல்லுங் கழன்று விழுந்திடும்
போவு மிச்சாப் பத்தியம் வெல்லுமே.

| | |
|---|---|
| நீர்முள்ளி விதை | இவை இரண்டையும் தக்க |
| பசும்பால் | அளவு எடுத்து, |

நன்றாக அரைத்துப் பாலுடன் குடிக்க உடலின் உள்ளுறுப்புகளில் குறிப் பாகச் சிறுநீரகப் பாதையில் உண்டாகும் கற்கள் கழன்று விழுந்திடும். இச்சாப்பத்தியம்.

### (கற்றாழை நாற்றம் அகலப் புளியிலைக்கற்கம்)

236. வெல்லும் புளியின் விளாயெலு மிச்சிலை
வல்ல மிளகரணை யரைத்துக் குளித்திட
நல்ல கற்றாழை நாற்றம் பறந்திடும்
சொல்லுந் தேரையர் சொற்படி யாமிதே.

| | | |
|---|---|---|
| புளியிலை | எலுமிச்சையிலை | இவை |
| விளாவிலை | மிளகரணை | சமஎடை |

எடுத்து, நன்கு அரைத்து உடலில் பூசிக் குளிக்கக் கற்றாழை நாற்றமக லும்; தேரையரின் சொற்படி இது பலிதமாகும்.

### (மூலத்துக்குக் கருணைக் கிழங்குப்பொடி)

237. ஆகுங் கருணை மெருக னமுக்கிரா
தாகு மீருள்ளி, ச(ர்)க்கரை சேர்சமன்
மாகு நெ(ய்)யில் வறுத்தரைத் தேயெடு
கூகுஞ் ச(ர்)க்கரை கூட்டி யருந்திடே.

238. அருந்த மூல வாய்வு மகன்றிடும்
சொரிந்த யிரத்த மூலஞ் சுருக்கிடும்
முரிந்த மூல முளையுங் கரைந்திடும்
வரிந்த விச்சாப் பத்திய மறியவே.

| | | |
|---|---|---|
| கருணைக்கிழங்கு | ஈருள்ளி | |
| மெருகன் | சர்க்கரை | இவை சமஎடை |
| அமுக்கிரா | | |

இவற்றை நெய்யில் வறுத்து, அரைத்துச் சர்க்கரை கலந்து உண்ண மூலவாய்வு, இரத்தமூலம், மூலமுளையாவும் தீரும்; இச்சாப் பத்தியம்.

### (காதடைப்புக்குப் பேய்ச்சுரையெண்ணெய்)

239. அரிய பே(ய்)ச்சுரை யதன்விதை யிந்துப்பு
குரிய நல்லெண்ணெய் கூட்டி யெரித்திடு
சொரிய காதிற் [125]சுட(ர்த்)துளி விட்டிடு
அரிய காது அடைப்புந் திறக்குமே.

| | |
|---|---|
| பேய்ச்சுரை | |
| இந்துப்பு | இவை சமஎடை |
| நல்லெண்ணெய் | — தேவையான அளவு |

அனைத்தையும் கலந்து நன்கு காய்ச்சியே எண்ணெயினைக் காதில் சுடர்த் துளியாக விடக் காதடைப்புத் திறக்கும்.

## (மேகப்புரைகளுக்கு அமுக்கிராச் சூரணம்)

240. மேரும் அமுக்கிரா வேர்பல மைந்துடன்
தீருஞ் சீரகந் திரிகடு கேலமுந்
தாரு(மி) லவங்கம் சாதிக்கா(ய்) பத்தரி
வாரு(ம்) நாகப்பூ வால்மிள காகுமே.

241. ஆகும் வகைக்கரைப் பலமரை யேயெடு
காகும் ரவியிற்காட் டியிடிக் க(த்)திரி
தாகும் ச(ர்)க்கரை சமன்கலந் தேகொடு
போகும் மேகப் புகைகளு மறுமே.

அமுக்கிரா — 175 கி.

| | | |
|---|---|---|
| சீரகம் | சாதிக்காய் | |
| திரிகடுகு | சாதிப்பத்திரி | வகைக்கு 17.5 கி |
| ஏலம் | சிறுநாகப்பூ | |
| இலவங்கம் | வால்மிளகு | |

அனைத்தையும் சூரியஒளியில் உலர்த்தி, நன்றாக இடித்துச் சூரணம் செய்து, சம அளவு சர்க்கரை கலந்து கொடுக்க புரையோடிய மேகப் புண்கள் தீரும்.

## (கொருக்கு, அரையாப்புக்குப் பூரத்தைலம்)

242. மாறு மேரண்டத் தெண்ணெ யரை(ப்)படி
பாறும் பூரம் பலமரைத் தேவிடு
மீறும் ரோகணி மிளகு பரங்கியும்
வாறு யேல(-மி) லவங்கப்பூ பட்டையே.

243. பட்டை மூலப் பிரப்பங் கிழங்குடன்
வட்டைச் சூரணம் வகைக்கு வராகன்நால்
கொட்டை யெண்ணெ யிற்கூட்டி ரவியில்வை
மட்டக் கரண்டியால் வார்தின மைந்துமே.

244. அஞ்சு மேகன்மன் னுங்குட னேகிடும்
பிஞ்சு வாதப் பிடிப்புக் குடைச்சலும்[126]
குஞ்சு வெள்ளை கொருக்கரை யாப்புமே
பஞ்சு வதுபோல் பறக்குமுப் பில்லையே.

| | | |
|---|---|---|
| ஏரண்டத்தெண்ணெய் | — 650 மி.லி. | |
| பூரம் | — 35 கி. | |

| | | |
|---|---|---|
| கடுகுரோகணி | இலவங்கப்பட்டை | |
| மிளகு | சித்திரமூலம் | இவற்றின் சூரணம் |
| பரங்கிப்பட்டை | பிரப்பங்கிழங்கு | வகைக்கு 16.8 கி. |
| ஏலம் | | |

அனைத்தையும் ஆமணக்கெண்ணையில் கலந்து, சூரியபுடமாய் வைத்துக், கரண்டியால் துழாவி, எடுத்துக்கொண்டு (15 மி.லி. — 30 மி.லி. வீதம் அதிகாலை கொடுத்து வர) மேகம், வாதப்பிடிப்பு, குடைச்சல், வெள்ளை, கொருக்கு, அரையாப்பு முதலியன பஞ்சாகப் பறந்துவிடும்; உப்பிலாப் பத்தியம்.

## (சோகை, சூதகவாய்வுக்குக் குமட்டித் தைலம்)

245. இல்லை யேரண்டத் தெண்ணெ யிருபடி
நல்ல ஈருள்ளி நிம்பழ மிஞ்சிக்கார்
சொல்லை நொச்சிக் குமரியு(ம்) மஞ்சட்கார்
வல்லை யாவின்பால் வகைபடி காலுமே.

246. காலுங் குமட்டிக் கா(ய்)ச்சா றொருபடி
[127]நீலிப் பாளை நிலவாகை மூலவேர்
சால யிரண்டு சாரணை வேருடன்
வால வமுக்கிரா வகைபல மரையுமே.

247. அரையு [128]முப்புக ளைந்து வகையுடன்
திரையுஞ் சீரகந் திரிகடு கேலமுங்
கரையும் வெட்பாலை கார்போக லவங்கமு(ம்)
உரைகருஞ் சீரக(ம்) முந்திரி மதுரமே.

248. மதுரங் கடுக்காய் [129]மணிப்புங்கு ரோகணி
சதுரப் பரங்கியுஞ் சாதிக்காய் பத்திரி
குதிரையீ ரரத்தை குரோசாணி ரோசனை
கதிர வகையொன்று கால்பல மாகுமே.

249. மாகு மெண்ணெயில் வாள மரைப்பலம்
ஏக(க்) கூட்டி யெரிமெழு காம்பதம்
போகுங் குன்மம் புகட்டு மொருபலம்
சோகை பீலிகை சூதக வாய்வுமே.

250. வாய்வு நழுவைகள் வல்லைவிப் புருதியும்
மாயு மாமை *130மகோதரம் பெருவயிர்
காயும் பேதியில் கட்டி கரைந்திடும்
சாயு மிச்சாப் பத்தியந் தாக்கிடே.

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய் | — | 2.6 லி |
| குமட்டிக்காய்ச்சாறு | — | 1.3 லி. |

| | |
|---|---|
| ஈருள்ளிச்சாறு<br>நிம்பழச்சாறு<br>இஞ்சிச்சாறு<br>நொச்சிச்சாறு<br>குமரிச்சாறு<br>மஞ்சட்சாறு<br>பசும்பால் | வகைக்கு 375 மி.லி. |
| அவுரி<br>பங்கம்பாளை<br>நிலவாகை<br>சித்திரமூலவேர்<br>சத்திச்சாரணைவேர்<br>வெள்ளைச்சாரணைவேர்<br>அமுக்கிரா<br>நேர்வாளம் | வகைக்கு 17.5 கி. |

| | | |
|---|---|---|
| 5-வகை உப்பு | கடுக்காய் | வகைக்கு 8.75 கி. |
| சீரகம் | மணிப்புங்கு | |
| திரிகடுகு | கடுகுரோகணி | |
| ஏலம் | பரங்கிப்பட்டை | |
| வெட்பாலை | சாதிக்காய் | |
| கார்போகம் | சாதிப்பத்திரி | |
| இலவங்கம் | சிற்றரத்தை | |
| கருஞ்சீரகம் | பேரரத்தை | |
| முந்திரி | குரோசாணி | |
| அதிமதுரம் | கோரோசனை | |

அனைத்தையும் ஆமணக்கெண்ணெயில் கலந்து காய்ச்சி, மெழுகுபதத்தில் வடித்து 3.5 கி. வீதம் காலையில் கொடுத்துவரக், குன்மம், சோகை, பீலிகை, சூதகவாய்வு, நழுவைகள், வல்லை, விப்புருதி, ஆமை மகோதரம், பெருவயிறு யாவும் தீரும். நன்கு பேதியாகும். பேதியில் கட்டி கரையும். இச்சாப்பத்தியம்.

### (பிள்ளை நொடியில் பிறக்கப் பூநாகப்பற்று)

251. தாக்கு முப்பு மிளகுபூ நாகமும்
மேக்கு மாவின்பால் விட்டரைத் தேயெடு
பூக்கு(ம்)[131] நாபியில் பூசு மருந்தையும்
நோக்கும் பிள்ளை நொடியில் பிறக்குமே.

| | |
|---|---|
| உப்பு | |
| மிளகு | இவை சம எடை |
| பூநாகம் | |
| பசும்பால் | தேவையான அளவு |

இவற்றை நன்கு அரைத்து நாபியில் பூசப், பிள்ளை சிரமமின்றி நொடியில் பிறக்கும்.

### (நஞ்சு பளிச்சென்றிறங்க ஏலாதிக் கற்கம்)

252. ஏலஞ் சுக்கு மிளகுவெள் ளுள்ளியும்
மூல மெள்ளும் முருங்கிலைச் சாற்றினால்
கோல வரைத்துக் கூட்டி விழுங்கிட
பால நஞ்சும் பளிச்சென் றிறங்குமே.

| | | |
|---|---|---|
| ஏலம் | வெள்ளுள்ளி | |
| சுக்கு | சித்திரமூலம் | இவை சமஎடை |
| மிளகு | எள் | |
| முருங்கிலைச்சாறு | | தேவையான அளவு |

இவற்றை நன்றாக அரைத்துக் கற்கமாக்கி, உட்கொள்ள நஞ்சு பளிச்சென்றிறங்கும்.

### (சன்னி, மாந்தத்துக்குக் கடுகுரோகணித் தைலம்)

253. மேவு மேரண்டத் தெண்ணெ யொருபடி
பூவு(ம்) ரோகணி[132] பூவந்தி சீயக்காய்
சீவுங் கச்சோலந் திரிகடு கேலமும்
மாவுங் கடுஞ்சீரம் வசம்புவெள் ளுள்ளியே.

254. உள்ளி நாமக் குமட்டிவேர் நால்பலம்
துள்ளுங் கற்கந் தூக்கும் பலமதாய்
கள்ளிச் சார்விட் டரைத்தெண்ணெய் கா(ய்)ச்சிடு
சன்னி மாந்தங்கள் சாடுங்கை கண்டதே.

| | | |
|---|---|---|
| ஆமணக்கெண்ணெய் | | — 1.3.லி. |
| கடுகுரோகணி | ஏலம் | |
| பூவந்தி | கருஞ்சீரகம் | வகைக்கு |
| சீயக்காய் | வசம்பு | 140 கி. |
| கச்சோலம் | வெள்ளுள்ளி | |
| திரிகடுகு | குமட்டிவேர் | |
| கள்ளிச்சாறு | | தேவையான அளவு |

இவற்றை நன்றாக அரைத்துக் கற்கமாக்க, ஆமணக்கெண்ணெயில் கலந்து காய்ச்சி 35 கி. வீதம் கொடுக்கச் சன்னி, மாந்தங்கள் தீரும்.

## (வண்டுக்கடி, மேகரணங்களுக்கு நீர்முள்ளித்தைலம்)

255. கண்டு நீர்முள்ளி கழற்காய் நிலவாகை
விண்டு விள(ா) நிலக் குமிழம்வேர் புங்குதன்
தண்டு[133] செங்கத் தாரிகார் போகமும்
பண்டு நல்லெண்ணெய் படியிரண்டில் விட்டிடே.

256. விட்டுவெட் பாலை சிவன்வேம் புதிப்பிலி
கட்டுஉள் ளிகளுஞ் சீரகம் காயமும்
வட்டு யேக வகைபல மாயெடு
முட்டுக் கூட்டி யெரிமெழு காகுமே.

257. ஆகுங் காசெடை ஐநான்கு நாளுண்ணப்
போகும் நீர்வண்டு பொசிவண்டுக் கடிமுதல்
ஏகு மேக ரணங்களு மாறிடும்
காகும் பத்தியங் கைப்புத் தவிரவே.

| | | |
|---|---|---|
| நீர்முள்ளி | நிலக்குமிழம்வேர் | |
| கழற்சிக்காய் | புங்கந்தண்டு | இவை வகைக்கு |
| நிலவாகை | செங்கத்தாரி | 3.5 கி. |
| விளா | கார்போகரிசி | |
| நல்லெண்ணெய் | | 2.6 லி. |
| வெட்பாலை | உள்ளி | வகைக்கு |
| சிவனார் வேம்பு | கருஞ்சீரகம் | 35 கி. |
| திப்பிலி | காயம | |

அனைத்தையும் ஒன்றாகக் கலந்து காய்ச்ச, மெழுகுபதத்தில் வடித்து 5.1 கி. வீதம், 20 நாட்கள் கொடுக்க, நீர்வண்டு, பொசிவண்டு இவற்றின் கடிகளும், மேகரணங்களும் போகும். கைப்புச்சுவை நீக்க வேண்டும்.

## (பிளவைப்புண்ணுக்கு மஞ்சட்சாந்து)

258. வேற்று மஞ்சளும் வெள்ளைக்குங் கிலியம்
சாற்று வேம்பின் கொழுந்துஞ் சமனெடை
ஏற்று மேரண்டத் தெண்ணெ யரை(ப்) படி
சே(ர்)த்து அரைத்துத் தெளிரவி தாக்கிடே.

259. தா[134](க்கு) யெண்ணெய் தனிவெள்ளைச் சீலையில்
பூக்கு(ம்)[135] நற்சாந்தில் புகட்டுநற் சீலையை
நூக்கும் பருத்தியின் கொட்டை நுணுக்கியே
காக்கும் பிளவைமேல் கட்டப்புண் ணாறுமே.

மஞ்சள்

| | | |
|---|---|---|
| வெள்ளைக்குங்கிலியம் | இவை வகைக்கு | |
| வேப்பங்கொழுந்து | 35 கி. | |
| ஆமணக்கெண்ணெய் | | 650 மி.லி. |

மருந்துச் சரக்குகளை நன்றாக அரைத்துக் கலந்து ஆமணக்கெண்ணெயினைச் சூரியபுடமாக வைத்தெடுத்த நற்சாந்தினை, நல்ல வெள்ளைச் சீலையில் தடவி அதில் பருத்திக்கொட்டையை நுணுக்கிக் கலந்து பிளவைப் புண்களின் மேல் கட்டிவரப் புண்கள் ஆறும்.

## (புழுவெட்டுக்கு வெள்ளுள்ளித்தைலம்)

260. ஆறு மெள்ளெண்ணெ யாழாக்கு தன்னிலே
வேறு வெள்ளி னுள்ளி வசம்புடன்
காரு மரைத்துக் கலந்து ரவியில்வை
பூறும்[136] புழுவெட்டுப் பூசிட மாளுமே.

| | |
|---|---|
| எள்ளெண்ணெய் | 168 மி.லி. |
| வெள்ளுள்ளி | வகைக்கு 35 கி. |
| வசம்பு | |

இரண்டையும் அரைத்துக் கலந்து எண்ணெயினைச் சூரியபுடமாக வைத்தெடுத்துப் புழுவெட்டிய இடங்களில் (தலைமயிர், புருவமயிர், இமை மயிர், மேகனமயிர்) தடவமயிர் முளைக்கும்.

## (இரணங்கள், பக்கப்பிளவைக்குக் கந்தகச் சுடர்த்தைலம்)

261. மாளுங் கெந்தி கௌரி மனோசிலை
மூளுங் கல்வத்தில்[137] மூன்றுஞ் சமனெடை
வேளு மாவின்நெய் விட்டரைத் தேவழித்
தாளும் வெள்ளைச் சீலையில் தடவிடே.

262. தடவி(ச்) சீலை தனித்திரி யாக்கிடு
விடவெரி நெய்யால் வெந்து வுருகிடும்
சுடவெரி தீயால் சுடர்த்தைல மா(கிடு)ம்
படவெள்ளைச் சீலையில் பா(ய்)ச்சு ரணத்திலே.

263. பா(ய்)ச்சு முள்ளுக்கு(ப்) பணவெடை கம்மாறில்
போச்சு மேகப் பிளவை ரணங்களும்
காச்சு மாலைக் கபால ரணங்களும்
பூசும் பக்கப் பிளவை கரையுமே.

கந்தகம்

கௌரிப்பாடாணம் இவை சமஎடை

மனோசலை

ஆவின் நெய் தேவையான அளவு

இவற்றை நன்கு அரைத்து, வெள்ளைச்சீலையில் தடவித் திரியாக்கித், தீயில் காட்ட நெய் உருகிச் சுடர்த்தைலம் இறங்கும். அதனை வெள்ளைச் சீலையில் தடவி ரணங்களின் மேல் போட்டு, உள்ளுக்கும் 488 மி.கி. கம்மாறு வெற்றிலையில் தடவிக் கொடுக்க, மேகப்பிளவை ரணங்களும், கண்டமாலை ரணங்களும் கபால ரணங்களும், பக்கப்பிளவையும் ஆறும்.

## (பீனிசத்துக்குக்[139] கந்தகச் சுடர்நெய்)

264. கரையு மேகெந்தி கால்பல மாய்(ப்) பொடி
எருமை வெண்ணெயி லிட்டுநற் சீலையில்
திரிய தாகத் திரிந்து எரித்திட
உருகுஞ் சுடர்நெய் நாசியி லூட்[138](டவே).

265. ஊட்டவே யிரத்த(ப்) பீனிச மேகிடும்
காட்டநீர்ப் பீனிச(ம்) கபால ரணங்களும்
மாட்டவே பக்க(ப்) பினிச(ம்) மாறிடும்
நாட்டவே நாறும் பீனிச(ம்) மாயுமே.

கந்தகம் — 8.75 கி.

எருமைவெண்ணெய் — தேவையான அளவு

இரண்டையும் கலந்து தூய சீலையில், தடவித் திரித்து, அத்திரியினைத் தீயில் காட்ட வரும் சுடர்நெய்யினை நாசியிலூட்ட இரத்தப் பீனிசம், நீர்ப்பீனிசம், கபாலரணங்கள், பக்கப்பீனிசம், நாறும்பீனிசம் யாவும் தீரும்.

### (நாய்க்கடிக்கு நாய்வேளைத் தைலம்)

266. மாயு மெள்ளெண்ணெ யாழாக்கு தன்னிலே
வேயு நாய்வேளை வெள்ளுள்ளி யோரிலை
மூய வரைத்தெண்ணெய் மெழுகுபோல் கா(ய்)ச்சிடு
நாய்(க்) கடி வாயினி லூட்டப் பறக்குமே.

எண்ணெய் 168 மி.லி.

நாய்வேளை
வெள்ளுள்ளி } வகைக்கு (4.2 கி.)
ஓரிலைத்தாமரை

எடுத்து, நன்கு அரைத்து, எண்ணெயில் காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்து நாய்க்கடிவாயில் தடவ விடமேறாது, புண்ணும் விரைவில் ஆறும்.

### (பெருவயிறு, வாதம், குன்மத்துக்கு வாளநெய் II)

267. பறக்குங்[140] காமப்பால் பசுநெய் யரை(ப்)படி
தெரிக்குந் தேங்காய்நால் திருவிய பூவுடன்
நெரிக்குஞ் சுத்தி நேர்வாள மரைப்பலம்
புரிக்கும்பூ வாளமும் பிட்டவி மாத்திடே.

268. மாத்து வாளமு(ம்) மசிய வெடுத்தபின்
பா(ர்)த்து மேபூவின் பாலைப் பிழிந்திடு
சே(ர்)த்து மேமுலைப் பாலுடன் நெய்யினில்
வா(ர்)த்து மேசட்டி யடுப்பினி யேற்றிடே.

269. இடுமிந் துப்பி உள்ளி சவுக்காரம்
போடுமுன் வாளமுஞ் சமன்பொடித் (தே)தூவிடு
நாடு நெய்யை நல்மாய் வடித்தெடு
மாடுங் காசெடை மாட்டுவெந் நீரிலே.

270. மாட்டும் பேதி மகோதரம் பெருவயிர்
வாட்டும் நழுவையும் ஆமை கரைந்திடுங்
கூட்டு வாதங்கள் குன்மம் பறந்திடும்
மூட்டும் பத்திய மிளநீருஞ் சாதமே.

| | | |
|---|---|---|
| தாய்ப்பால் | — | 650 மி.லி. |
| பசுநெய் | — | 650 மி.லி. |
| தேங்காய்ப்பூ | — | 4 தேங்காயினை உடைத்துத் திருவிய அளவு |
| சுத்தித்த வாளம் | — | 17.5 கி. |

தேங்காய்ப்பூ, வாளம் இரண்டையும், பிட்டவித்துப் பின் அதனைப் பிழிந்து பால்எடுத்துத் தாய்ப்பாலுடனும், நெய்யுடனும் கல ந்து அடுப் பேற்றி, அதில்

| | | |
|---|---|---|
| இந்துப்பு | சவுக்காரம் | இவை வகைக்கு (4.2 கி) |
| உள்ளி | வாளம் | |

எடுத்துப் பொடித்துத் தூவிக் கலந்து, பதத்தில் வடித்த நெய்யினை 5.1 கி. வீதம் வெந்நீரில் கொடுக்க நன்கு பேதியாகும். அதனால் நழுவைப் பெருவயிறு, ஆமைமகோதரம், வாதங்கள், குன்மம் ஆகியவை நீங்கும். இளநீரும் சாதமும் சாப்பிட வேண்டும்.

## (இருமல், சுரம், சயத்துக்குக் கண்டங்கத்தரி நெய்)

271. சாதி யாவின்நெய் தான்படி யாமதில்
காதி யாங்கண்டங் கத்தரி செம்முள்ளி
வேதி யந்தூது வேளையுத் தாமணி
வாதி சங்கஞ்சார் வகைபடி காலிதே.

272. காலு மிந்துப்பு கற்கட(க) சிங்கியாம்
சீல கோட்டந் திரிகடு இம்பலை
பாலைச் செவியமும் பாளைச் சி(வ)தைவேர்
மூலங் குறுஞ்சாரணை திப்பிலி மூலமே.

273. மூல வகையு மிருகழஞ் சாமெடை
நேக வரைத்துச் சே(ர்)த்து யெரித்திடு
கால மேயிரண்டு வேளை கரண்டியாம்
சோல யிருமல் சுர(ம்)சய மேகுமே.

274. ஏகு மீளை யிரைப்புடன் வாந்தியும்
நோகு(ம்) நெஞ்சில் நுரைக்குஞ் சுவாசமும்
காகு மேகமுங் காச விருமலும்
போகும் பத்தியம் புளிபுகை மாற்றிடே.

| | |
|---|---|
| பசுவின் நெய் | 1. 3 லி. |
| கண்டங்கத்தரி<br>செம்முள்ளி<br>தூதுவேளை<br>உத்தாமணி<br>சங்கஞ்சாறு | இவற்றின் சாறுகள் வகைக்கு 375 மி.லி. |
| கற்கடகசிங்கி<br>கோட்டம்<br>திரிகடுகு<br>திரிபலை<br>பாலை<br>செவியம்<br>பங்கம்பாளை<br>சிவதைவேர்<br>சித்திரமூலம்<br>குறுஞ்சாரணை<br>திப்பிலிமூலம் | வகைக்கு 10.2 கி. |

இவற்றை நன்றாக அரைத்துச் சாறு எண்ணெயில் கலந்து அடுப்பேற்றிக் காய்ச்சிப் பதத்தில் வடித்துக் கொண்டு காலையில் 15-20 மி.லி. வீதம் கொடுக்க இருமல், சுரம், [141]சயம், ஈளை, இரைப்பு'', வாந்தி, நெஞ்சில் வலியுடன் நுரைக்கின்ற சுவாசம், மேகம், காசவிருமல் ஆகியவை தீரும். புளி, புகை நீக்கவேண்டும்.

## (வந்தை நோய்களுக்கு உள்ளித்தைலம்)

275. மாற்று[142] மண்டத்தி னுள்ளித் தைலமும்
சே(ர்)த்து லிங்கமுஞ் சித்திர மூலமும்
பா(ர்)த்து முருங்கையின் பட்டை ரசங்களும்
கோ(ர்)த்து[143] வந்தையுங் கூட்டுஞ் சம(ா)தியே.

| | | |
|---|---|---|
| அண்டத்தைலம் | சித்திரமூலம் | இவை தக்க |
| உள்ளித்தைலம் | முருங்கைப்பட்டைச்சாறு | அளவு |
| இலிங்கம் | | |

எடுத்துக் கலந்து கொடுக்க, நுண்ணுயிர்களால் (பாக்டீரியா, வைரஸ்-போன்ற நுண்கிருமிகள்) ஏற்படும் நோய்கள் நீங்கும்! அந்நுண்ணுயிர் களுக்கு இம்மருந்து சமாதி கட்டும் அளவு வல்லமை மிகுந்ததாகும்.

## (முகவாதசன்னி, பாரிசவாய்வுக்குத் திப்பிலிப்பொடி)

276. கூட்டுந் திப்பிலி காயம் பொரித்துடன்
போட்டு மாடை பொடித்துக் கொடுத்திட
மூட்டும் பித்த முகவாத சன்னியும்
வாட்டும் பாரிச வாய்வும் பறக்குமே.

| | |
|---|---|
| திப்பிலி | இவை இரண்டும் சம எடை |
| பெருங்காயம் | |

எடுத்து வறுத்துப் பொடித்து, 65 மி.கி. வீதம் கொடுக்கப் பித்த முக வாதசன்னி பாரிச வாய்வு ஆகிய இரண்டுந் தீரும்.

## (வாதம், திமிருக்கு முட்புளியிலைத் தைலம்)

277. எள்ளு யெண்ணெ யிருநாழி யாமதில்
முள்ளு(ம்) புளியிலை முந்நாழிச் சாறுமாய்
கள்ள குங்குமங் கத்தூ ரிகோ ரோசனை
மெள்ளக் கூட்டி யொமெழு காகுமே.

278 ஆகுமே யிரண்டு வேளைக்கு மாடையாம்
ஏகுமே வாத மெண்பத்து நான்குடன்
ஏகு(ம்) மெய்யினி லிட்டுப் பிடித்திட
போகுந் திமிரும் புளிதள்ளிச் சாதியே.

| | |
|---|---|
| எள்ளெண்ணெய் | 2.6 லி. |
| முட்புளியிலைச்சாறு | 3.9 லி. |
| குங்குமப்பூ | |
| கோரோசனை | வகைக்கு (4.2 கி.) |
| கத்தூரி | |

அனைத்தையும் கலந்து காய்ச்சி, மெழுகு பதத்தில் வடித்துக் காலை, மாலை ஆகிய இருவேளையும் 65 மி.கி. வீதம் கொடுக்க 84 வகை வாதமும், திமிர் நோயும் தீரும். புளியில்லாப் பத்தியம்.

## (அரோசகம், வாந்தி நீங்க[144] விளக்கெண்ணெய்த்தேன்)

279. சாதி விளக்கெண்ணெய் தனித்தேன் பலமுடன்
ஊதி மத்தித்து வுண்டிடப் பேதியாம்
ஆதி பித்த மரோசகம் வாந்தியும்
சாதி வாதம்போம் சாரமு தாகுமே.

நல்லவிளக்கெண்ணெய்
கலப்பில்லாத தனித்தேன் } வகைக்கு 35 கி:

சேர்த்து, மத்தித்துஉண்ண நன்கு பேதியாகும். இதனால் பித்தம், ருசியின்மை, வாந்தி, வாதநோய் ஆகியவை நீங்கி தேகம் உறுதி பெறும்.

## (பேதிக்கு வாளப்பூச்சு)

280. ஆகுந் தேங்காய்நீர் கண்திறந் தூற்றிடு
மீகுஞ் சூத மெடையும் வராகனா(ம்)
ஆகும் வாளமு(ம்) நான்கு வராகனாம்
பூகுந் தேங்காயிற் பொடித்து அடைத்திடே.

281. அடைத்துக் குப்பையில் ஐயாறு நாளினி(ல்)
உடைத்து(க்) காயரைத் துட்சிமிழ் வைத்திடு
படைத்து நாபியில் பணவெடை பூசிட
உடைத்து பேதியு(ம்) மீறினால் மாற்றிடே.

தேங்காய் — 1

பாதரசம் — 4.2 கி.

நேர்வாளம் — 16.8 கி.

தேங்காயின் கண்ணைத் திறந்து நீரை வெளியே ஊற்றிவிட்டு, அதில் பாதரசம், வாளம் இரண்டையும் பொடித்து அடைத்துக் குப்பையில் 30-நாட்கள் புதைத்துப் பின் எடுத்து அத்தேங்காயை உடைத்து, நன்கு அரைத்துச் சிமிழியில் வைத்துக் கொண்டு நாபியில் 488 மி.கி. மருந்தினைப் பூச நன்கு பேதியாகும். பேதி அளவுக்கதிகமாக வெளியானால் இதற்கு மாற்றிட வேண்டும்.

## (பேதிக்கு மாற்றாகச் சந்தனப்பூச்சு)

282\. மாற்று சந்தன மரைத்துமேற் பூசிடு
வா(ர்)த்து மேமோருஞ் சாத(மு) மருந்திட
காத்து[145] மேபதி கட்டுங்கை கண்டதே
சாற்றுமித் தேரையர் சொற்படி தப்பாதே.

வாளப்பூச்சினால் பேதியும் உடைத்து அளவுக்கு மீறி வெளியேறினால், சந்தனத்தை அரைத்து நாபியில் பூசி, மோர்ச்சாதம் உட்கொள்ளப் பேதி கட்டும்; இது கைகண்ட முறை என்று கூறும் இத்தேரையரின் கூற்றுப் பிசகாது.

# அடிகுறிப்புகள்

1. சுவடியில் 'குலை எரிவு', காலெரிவு கைஎரிவுக்கு மருந்து என்று கொடுக்கப்பட்ட தலைப்பில் 'மருந்து'க்குப் பதிலாக 'நிம்பழ இளகம்' என்பது பயன்படுத்துவோருக்கு எளிமையாக இருக்குமாறு மாற்றப் பட்டுள்ளது.

2. நிம்பழம்-1. வேப்பம்பழம், 2. எலுமிச்சம்பழம் என்று இருபொருட் கள் தருமெனினும், இது வழக்கில் பெரும்பாலும் எலுமிச்சம் பழத் தையும், 'நிம்பம்' எனும்போது மட்டும் வேம்பினையும் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

3. 'பழம்' எனும் சொல் வழக்கில் வாழைப்பழத்தையும், மருத்துவத்தில் எலுமிச்சம் பழத்தையும் குறிக்கும்.

4. சுவடியில் ''சுரம், சன்னி, பக்கசூலை இதுக்கு விறேசின குளிகை'' என்று இருந்த தலைப்பு, தவறுகள் திருத்தப்பட்டு, 'வாள விரேசன குளிகை' என்று மாற்றப்பட்டுள்ளது. மேலும் 'விரேசனத்தால் வாதம் தாழும்' — (சித்த மருத்துவம்) என்பதால் வாளம் சேர்ந்த மருந்து பேதியுண்டாக்கிப் பின் நோயையும் குணமாக்க வல்லது (விரே சனம் — பேதி).

5. 'மணிமிளகு' என்ற அளவுக்குத் தக்க, தற்கால அளவு பிற நூல்களில் கிடைக்காவிட்டாலும் கூட, உளுந்தளவு-65 மி.கி.யை விடப் பெரி யது என்பதால் 100 கி.கி என்று கொடுக்கப்பட்டுள்ளது.

6. மாத்திரையை இழைத்துக் கொடுத்தலினால் விரைந்து செயல்படும் தன்மை கிடைக்கிறது.

7. பூரக்கட்டு, இலிங்கக்கட்டு என்று ஒரே தலைப்பாக இருந்ததை அவ் வப் பாடல்களுக்கு ஏற்பத் தீரும் நோய்களையும் சேர்த்துப் பெயரிடப் பட்டது.

8. பொதுவாகக் 'கட்டு' ஒன்றை இழைத்துத்தரும்போது உரைகல்லில் வயதிற்குத் தக்க 1 முதல் 3 முறை இழைத்துத் தருவதே (ஒரு அரிசி எடை) வழக்கு என்பதால் 30-60 மி.கி. என்று கொடுக்கப்பட்டுள் ளது.

9. இலிங்கக்கட்டு, வேறு செய்முறையும் கொடுக்கப்பட்டதால் இதனைச் செய்முறை-1 என்பதன் சுருக்கமாக இலிங்கக்கட்டு I என்று குறித் துப் பதிக்கப்பட்டுள்ளது.

10. 'சுருக்குக் கொடுத்தல்' என்றால் கட்ட வேண்டிய உலோகத்தை இரும் புச் சட்டியிலிட்டு, அடுப்பேற்றிக் கொடுக்கப்பட்ட சாற்றினைச் சிறு கச் சிறுக விட்டுச் சாறுவற்றி உலோகத்துடன் உறவாகும்படி செய்த லாம்.

11. **13 வகை சன்னி:** 1. சந்திக சன்னி, 2. அந்தக சன்னி, 3. ருத்தாக சன்னி, 4. சித்தவிப்பிரம சன்னி, 5. சீதாங்க சன்னி, 6. தாந்திரிக சன்னி, 7. கண்ட குப்ச சன்னி, 8. கர்ன்னிக சன்னி, 9. புக்ன நேத்திர சன்னி, 10. இரத்தட்டீவிச் சன்னி, 11. பிரலாப சன்னி, 12. சிம்மக சன்னி, 13. அபிநியாச சன்னி (சித்தமருத்துவம்).

12. பொதுவாகக் கட்டு செய்வதற்கு ஒரு பலம் (35 கி.) எடையுள்ள உலோகமே எடுத்துக்கொள்ளப்படும். எனவே அளவு கொடுக்கப் படாத விடத்து 35 கி. எடுத்ததாகப் பதிப்பிக்கப்பட்டது.

13. நீர்வெட்டி — நீரடிமுத்து

14. சீனியாம்பட்டை — சீனப்பட்டை என்ற பரங்கிப்பட்டை.

* *18 வகை குட்டம்:*

*1. புண்டரீகக் குட்டம் (படர்தாமரைப் பெருநோய்), 2. விச்மோடகக் குட்டம் (கொப்புளப் பெருநோய்), 3. பாமா குட்டம் (சிரங்குப் பெருநோய்), 4. கசகுட்டம் (ஏககசருமகுட்டம்) (யானைத்தோல் பெருநோய்), 5. கர்ண குட்டம் (காதுப் பெருநோய்), 6. சர்ம குட்டம் (தோற் பெருநோய்), 7. கிருட்ண குட்டம் (கரும்பெரு நோய்), 8. அவுதும்பர குட்டம் (அத்திக்காய்ப் பெருநோய்), 9. மண்டல குட்டம் (வளையப் பெருநோய்), 10. அபரிச குட்டம் (வலிப் பெருநோய்), 11. விசர்ச்சிகா குட்டம் (சொறிப் பெருநோய்), 12. செங்குட்டம் (விபாதிகா குட்டம் செம்படை), 13. கிடீப குட்டம் (பன்றித்தோல் பெருநோய்), 14. சர்மதல குட்டம் (தோல்வெடி பெருநோய்), 15. தத்துரு குட்டம் (தடிப்புப் பெருநோய்), 16. சித்மா குட்டம் (நாப் பெருநோய்), 17. சதாரு குட்டம் (புரைப் பெருநோய்), 18. சுவேத (வெண்) குட்டம் வெண்படை (வெண் பெருநோய்).*

15. 'கழி' என்னும் அளவு எந்த நூலிலும் கிடைக்கப்பெறாமையால் மற்ற மருந்துச் சரக்குகள் கழஞ்செடையில் கொடுக்கப்பட்டுள்ளமையால் 'கழி'யும் கழஞ்செடையாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. டாக்டர் ஆர். தியாகராசன் அவர்களும் அவ்வாறே எடுத்துக் கொள்ளுமாறும், அதுதான் 99% சரியாக இருக்கும் என்று கூறியதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

16. நாழி(கை) — 24 நிமிடங்கள், நாழி என்னும் முகத்தலளவையாகக் கையாளப்படும்போது 1.3 லி. அளவைக் குறிக்கும்.

17. 'கிராணி யோடதிசாரம் மூவெட்டு' என்பதில் மூவெட்டு — 24 என்று கொள்ளாமல் மேற்பாடலில் கொடுக்கப்பட்ட, கிராணி வகை, சயபாண்டுக்கிரணி, மூலக்கிரணி, இரத்த மூலக்கிராணி என்ற மூன்றுடன் அதிசாரம் — 8 வகையும்

**அதிகாரம் — 8:**

1. வளி, 2. அழல், 3. ஐயம், 4. முக்குற்றம், 5. சுரம், 6. துக்கம், 7. தோடம், 8. குருதி.

கிராணி — நிணக்கழிச்சல், ஊன் கழிச்சல், பலநிறக்கழிச்சல், கொடிய கழிச்சல், நாறும் கழிச்சல் எனும் வேறு பெயர்களுடையது.

அதிசாரம் — பெருங்கழிச்சல், மிகுகழிச்சல் எனும் வேறு பெயர்கள்.

18. இருதிப்பிலி — 1. அரிசித்திப்பிலி, 2. யானைத்திப்பிலி.

19-21 **சுரம் — 64 :**

(வாதத்தில் - 20, பித்தத்தில் - 24, கபத்தில் - 20)
தன்வழிச் சுரங்கள் — 54

1. வாதசுரம், 2. பித்தசுரம், 3. கபசுரம், 4. வாதபித்தசுரம், 5. வாதகபசுரம், 6. பித்தவாதசுரம், 7. பித்தகபசுரம், 8. கபவார்தசுரம்.

9. கப்பித்தசுரம், 10. கலிப்புச்சுரம், 11. மந்தசுரம், 12. நளிர் சுரம், 13. வெஞ்சுரம், 14. மேனிச்சுரம், 15. உள்சுரம், 16. வெளிச்சுரம், 17. விட்டுவரும்சுரம், 18. விடாச்சுரம், 19. சாரச்சுரம், 20. செங் கறைச்சுரம், 21. ஊன் சுரம், 22. கொழுப்புச் சுரம், 23. என்புச் சுரம், 24. மூளச் சுரம், 25. விந்துசுரம், 26. துன்பச் சுரம், 27. முறைசுரம், 28. மயக்கசுரம், 29. பிதற்றல் சுரம், 30. புழுச் சுரம், 31. மஞ்சட் சுரம், 32. காலைச் சுரம், 33. பகற் சுரம், 34. மாலைச் சுரம், 35. இராச் சுரம், 36. அதிகாலைச் சுரம், 37. தீவறட்சி சுரம், 38. அனல் சுரம், 39. ஏப்ப சுரம், 40. வாந்திச் சுரம், 41. கொட்டாவசி சுரம், 42. விடவிக்கல் சுரம், 43. வியர் வைச் சுரம், 44. தூங்காச் சுரம், 45. இருமல் சுரம், 46. பழஞ்சுரம், 47. கட்டிச் சுரம், 48. சீழ்ச் சுரம், 49. பல்கொப்புளச் சுரம், 50. நடுக்கல் சுரம், 51. வீக்கச் சுரம், 52. கழிச்சல் சுரம்.

**பிறவழிச் சுரங்கள் - 12**

1. மோது சுரம், 2. சாபசுரம், 3. ஏவல் சுரம், 4. சேர்களகைச் சுரம், 5. பூதசுரம், 6. மருந்துவேகச் சுரம்,• 7. நச்சுசுரம், 8. சினச்சுரம், 9. பயச்சுரம், 10. துக்கசுரம், 11. காமசுரம், 12. தெய்வசினச் சுரம்.

20. *3 குன்மம் — 8

1. வளி(வாத) குன்மம் 2. அழல்(பித்த) குன்மம் 3. ஐய்(சேத்தும) குன்மம் 4. முக்குற்ற(சன்னி) குன்மம் 5. கால்(வாயு) குன்மம் 6. எரி குன்மம் 7. வாந்தி (சத்தி) குன்மம் 8. வலி குன்மம்.

21 பனி — பனிநீர் (கடலைச் செடிகளின் மீது ஒரு தூய வெள்ளைச் சீலையை முன்பனி, பின்பனிக் காலங்களில், இரவுப் பொழுதில் போட்டு வைத்துக் காலையில் பிழிந்து எடுத்துக் கொள்ள வேண்டும். பனிக்குடத்து நீர் (Amniatic fluid) என்றும் பொருள் கொள்வாரு முண்டு.

22. *வாலதோசம் — சிறுவர்களுக்கு வரும் தோடநோய், பக்களண் 140-ல் காண்க.

23. 1. முக்கடுகு — திரிகடுகு (சுக்கு, மிளகு, திப்பிலி).

24. மூலவேர் — சித்திர மூலவேர்

25. 175 - கிராம் மூலவேரினை, மைபோலரைக்க 325 மி.லி. மாவு வராது என்பதனால், பொருள் மயக்கம் தருமிடத்தை மாற்றி நற் சலம் — 325 மி.லி என்பதனை வலியுறுத்த 'மாவது' என்பதனை 'மாவதுடன்' என்று திருத்திப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

26. 175 கி. மூலவேரிலிருந்து கிடைக்கும் மாவினை, 325 மி.லி. நற்சலமிட்டுக் காய்ச்சிக் கூழாக்கினால் 1.3 லி. அளவு கூழ் கிடைக் கும் என்ற பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவே 'படி' என்பது (யிப்படி) என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.
நற்சலம் — சுத்தசலம், உரோம நீர், பனிநீர், எருக்கம்பால், ஊசிநீர், மதனவல்லி நீர் குடத்தினீர், மழைநீர் (விழா வெளியீடு மலர் Souvenir).

27. 'யிலை' என்ற அசை இல்லாவிட்டாலும் பொருள் மாறாது; ஓசை நயம் கருதி விட்டாலும் தவறில்லை.

28. வாதம் — 84 :

1. வாதத்தம்பம், 2. வாதகர்சணம், 3. கரத்தம்பம், 4. தலத்தம்பம், 5. பூசுவாதம், 6. காளாஞ்சகவாதம், 7. ஊருத்தம்பவாதம், 8. வாத கர்னகம், 9. குரிசகிரிசவாதம், 10. நரித்தலைவாதம், 11. கும்ப வாதம், 12. மலைத்தகம்பவாதம், 13. பாணிக்கம்பவாதம், 14. கூனி வாதம், 15. ஆகுனிவாதம், 16. அட்சோகவாதம், 17. வாதஉப கதம், 18. நெற்றி சூலைவாதம், 19. கர்னசூலை வாதம், 20. செவி படுவாதம், 21. பக்கவாதம், 22. பட்சவாதம், 23. பேய்வாதம், 24. பிரணாலயவாதம், 25. சலத்தம்பவாதம், 26. சந்துவாதம், 27. சகனவாதம், 28. அற்புதவாதம், 29. உரகவாதம், 30. உரகாரி வாதம், 31. அச்வதம்பவாதம், 32. பாசத்தம்பவாதம், 33. நேத்திர பவுத்திரவாதம், 34. தண்டகவாதம், 35. அட்டதந்திரவாதம், 36. வருனாவாதம், 37. மகாவாதம், 38. மிருத்வாதம், 39. உதர வாதம், 40. மூத்திரஉதிரவாதம், 41. சுக்கிலவாதம், 42. சவ்விரங்க வாதம், 43. ஊர்த்துவாதம், 44. அஞ்ஞானத்தம்பம், 45. சிரக்கம்ப வாதம், 46. சதத்தம்பவாதம், 47. வச்சிரரூபவாதம், 48. கண்டகிராக வாதம், 49. நகாரிவாதம், 50. பதிதவாதம், 51. யோனிச் சூலை வாதம், 52. கர்ப்பச் சூலைவாதம், 53. அட்டசூலை வாதம், 54. குடல்வாதம், 55. அசுவவாதம், 56. மெச்சுவாதம், 57. மூடு வாதம், 58. வசுவாதம், 59. பீசத்தம்பவாதம், 60. தந்திர வெட்டி வாதம், 61. வாதசுரோணிதம், 62. சித்துவாத சுரோணிதம், 63. வைகித வாதசுரோணிதம், 64. உதிரவாத சுரோணிதம், 65. பயித்தியவாத சுரோணிதம், 66. குண அவதானகம், 69. கண்டக அவதானகம், 70. சிரக்கம்ப அவதானகம், 71. வாதத்தலை நோக்காடு, 72. பித்தத்தலை, 73. சேட்டுமத்தலை நோக்காடு, 74. சன்னி வாத நோக்காடு, 75. இரத்தபித்த நோக்காடு, 76. கிருமிக நோக்காடு, 77. சூரியவர்த்த நோக்காடு, 78. சந்திராவர்த்த நோக்காடு, 79. கர்னாவர்த்த நோக்காடு, 80. ஒரு தலையின் வர்த்தம் 81. வாத கர்னசூலை, 82. பித்தகர்னசூலை, 83. சிலேட்டும கர்னசூலை, 84. கிருமிகர்னசூலை, 85. தந்தவாயு.

29. வாதம் — 80 என்று ஒரு கொள்கையும், வாதம் — 84 என்று ஒரு கொள்கையும் இருப்பினும் யூகிமுனி நூலில் கிடைப்பது. 85-வகை வாதமாகும். ஆனால் பாடல்கள் 80-மட்டுமே இதுவரை கிடைத்துள்ளன.

30. * பாண்டு - 6 : 1. வாதப்பாண்டு, 2. பித்தப்பாண்டு, 3. கபப் பாண்டு, 4. முக்குற்றப்பாண்டு, 5. நஞ்சுப்பாண்டு, 6. மண்ணுண் பாண்டு பாண்டு — வெளுப்பு நோய்; குருதியின்றி வெளுத்திருத்தல்.

31. அரைநாழி(கை) — 12 நிமிடங்கள்.

32. கழி — கழஞ்செடை (5.1 கி.).

33 காமப்பால் — தாய்ப்பால்.

34. இரத்த காசசுவாசம் — 1. இரத்த காசம், 2. சுவாசகாசம்

35. நவநீதம் — வெண்ணெய்

36. கவிச்சு — இறைச்சி வகை.

37. நாழி — 1.3 லி. (ஒரு படி).

38. ***6 கண்ணோய்கள் — 96 :** (அகத்தியர் நயனவிதி ஐந்நூறு)

1. அக்கிரரோகம், 2. அவிகாயவிரணம், 3. உக்கிரரோகம், 4. உடைந்தெழுகாசம், 5. சாய்கண் குருடு, 6. இமைத்தடிப்பு, 7. கண் தினவு, 8. தூயகண் குருடு, 9. சுக்கிரரோகம், 10. மானலகாசம், 11. சுழல் வண்டெரிதல், 12. அன்னகோபம், 13. மருவுகண் சிவப்பு, 14. ஊறுகாசம், 15. எரிவிழி மருங்குதல், 16. பற்ப ரோகம், 17. அதிமந்தம், 18. குவளை நெறித்தல், 19. அழிகண் பிரித்தல். 20. சோதிகாவிரணம், 21. மணிநீலகாசம், 22. படிகுந் தம், 23. மதனமந்தாரம், 24. நாகப்படலம், 25. நீர்ப்பாய்ச்சல், 26. அரூபம், 27. வெள்ளைப்படலம், 28. கண்விரணம், 29. நீரொழுக் கம், 30. நீலகாசம், 31. குமரிகாசம், 32. வாதகாசம், 33. முட மயிர், 34. கண்குருடு, 35. அடைந்தெழுந்திடுதல், 36. பருமுளை, 37. எழுச்சி, 38. துர்மாமிசம், 39. வெள்ளெழுத்து, 40. உறுவிழி புடைத்தல், 41. பரவைப் பூ, 42. பஞ்சநீர்ப் படலம், 43. அமரம், 44. புகைச்சல், 45. அதிமந்தாரம், 46. திமிரம், 47. செவ்வேர், 48. சோதிநெறி, 49. சிலேத்துமகாசம், 50. குவளைநெரித்தல், 51. காசமுறுகி, 52. மாலைக் கண், 53. துண்ணுகாசம், 54. சுழல் விழி எரிதல், 55. பக்கப்படுவன், 56. அக்கரம், 57. பில்லம், 58. அழிந்திடும் பிரித்தல், 59. பித்தகாசம், 60. துத்திடுங்காசம், 61. துண்ணு வெண் புகைச்சல், 62. சோராக் கண்துடிப்பு, 63. வெண்ணோக்காடு, 64. சூழ்ந்திடும் பில்லம், 65. மயிர்ப்புழு வெட்டு, 66. விதன மந்தாரம், 67. வளர்ந்தெழுரோகம், 68. சுடர் பலதோன்றல், 69. வீங்கி விழித்தல், 70. மதனமந்தாரம், 71. சுடர திமாமிசம், 72. உண்டை 73. வாரெழுகாசம், 74. உயர்ந்துகண் புடைத்தல், 75. வாலகாசம், 76. நீர்ப்பில்லம், 77. மந்தாரகாசம், 78. குவளைவிப் புருதி, 79. கும்பிமை தடித்தல், 80. குவளைகாசம், 81. நத்தைப்படுவன், 82. குவளைப்படுவன், 83. புத்தியழித்தல், 84. பொங்கியவி தனம், 85. கண்ணோய், 86. சந்திரரோகம், 87. எழுஞாயிறு, 88. கூசிவிழித்தல், 89. இரத்தப்படலம், 90. நீர்ப் படலம், 91. அழற்றி, 92. பிறவிக்குருடு, 93. வருஞ்சல ரோகம், 94. கொடுப்புழுவெட்டு, 95. இமையொடுறுத்தல், 96. அந்திர காசம்.

39. பட்சம் — 15 நாட்கள்

40. தலையோடு — மனிதன் மண்டையோடு (பேரண்டம்)
* வெந்த தலையோடு — பேரண்ட பற்பம்.

41. நெற்புடம் — தயாரித்த மருந்தினைக் குப்பியிலடைத்து குவித்த நெல் லில் புதைத்து வைத்தல். இது தானியபுடத்தில் ஒருவகை. ஒரு பட்சம் (15 — நாட்கள்) முதல் ஒரு மண்டலம் (40 — நாட்கள்) வரை புதைத்து எடுத்தல் வழக்கில் உள்ளது.

42. மாங்காயளவு — மற்ற மருந்துச் சரக்குகளின் அளவைக் கருத்தில் கொண்டு 100 கி. என்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

மாங்காயளவு(க்கு) என்று எடுத்தால், நல்லெண்ணையின் அளவைக் குறித்துப் பொருள்மயக்கம் தரும் என்பதால் (க்கு) என்பதை விட்டுப் பதிப்பித்து, பங்கம் பாளை, ஊமத்தையின் அளவைக் குறிப்பதாகக் கொள்ளுதல் நலம் பயப்பதாகும்.

43. காசெடை - ஒரு பைசா அளவு (கழஞ்சுநிறையே — 5.1 கி.)

44. ... சீரக மல்லிக்கல் நாருடன்
... செண்பக(ம்) செங்க(ழு)நீர் கோட்டமும்
... (மைந்து) — என்று 6 - மருந்துப் பொருட்களை (ஐந்து) என்று பிழையாக எழுதியிருந்தமையால் (மாறும்) என்று திருத்திப் பதிக்கப் பட்டது.

45. 1. சத்தி — வாந்தி (வமனம்)

46. அதுகளும் — என்பது 'அவையும்' என்று திருத்திப் பதிக்கப்பட்டுள்ளது.

47. விம்பச்சா(று) - கோவைச்சாறு
விம்பம் — கோவை

48. உரியுமா — உரி + மா : 672 + 50 = 722 மி.லி.

உரி — 672 மி.லி. மா — $\frac{1}{20} = \frac{1000}{1}$ = 50 மி.லி.

49. கண்டு — பொடுகு:

50. தாரம் — அரிதாரம்.

51. மண்ணுக்குப் பூச்சி — மண்புழு, நாங்கூழ்ப்புழு, பூநாகம் மண்சுமந்த வாசகி என்பன இதன் வேறு பெயர்கள்.

52.1 மாந்தம் — 21 :

1. வாதமாந்தம், 2. பித்தமாந்தம், 3. கபமாந்தம், 4. கட்டுமாந்தம், 5. கணமாந்தம், 6. செரியாமாந்தம், 7. சுரமாந்தம், 8. சந்நிமாந்தம், 9. சுழிமாந்தம், 10. நீர்மாந்தம், 11. பால்மாந்தம், 12. மோர்மாந்தம், 13. வாலைமாந்தம், 14. துலைமாந்தம், 15. தலைமாந்தம், 16. எரி மாந்தம், 17. ஊதல்மாந்தம், 18. விடமாந்தம், 19. வீக்க மாந்தம், 20. வலிப்புமாந்தம், 21. மூக்குமாந்தம்.

53.2 கணம் : 24

1. வாதகணம், 2. பித்தகணம், 3. சேத்துமகணம், 4. சுழிகணம், 5. சூலிகணம், 6. நீர்க்கணம், 7. ஆமகணம், 8. நீராமகணம், 9. பேராமகணம், 10. பிறகணம், 11. பிரளிகணம், 12. மகாகணம், 13. மூக்குகணம், 14. மூலகணம், 15. அந்தகக்கணம், 16. மந்தார கணம், 17. மாந்தகணம், 18. சிங்கிமாந்தகணம், 19. ஊதுகணம், 20. வறள் கணம், 21. வீங்குகணம், 22. இரத்தகணம், 23. எரி கணம், 24. கொதிப்புகணம்.

54.வாலதோசம் ('வால' என்பது சிறுவர்களை குறிக்கும் 'பால' என்ற சொல்லின் தமிழ்ச்சொல். 'தோசம் என்பது தோடம்'. தொடுதல் என்பது பொருள்படும். கண்ணால் தொடுதல், உடலால் தொடுதல், காற்று, நிழல் இவற்றால் தொடுதல். இது 25 வகைப்படும். 8 பிரிவுகள் அவை :

| | |
|---|---|
| 1. பட்சி தோடம் — 4 | 2. பறவை தோடம் — 1 |
| 3. புள் தோடம் — 10 | 4. எட்சி தோடம் — 1 |
| 5. எச்சில் தோடம் — 1 | 6. வெண் தோடம் — 6 |
| 7. ஆண் தோடம் — 1 | 8. தேரைத் தோடம் — 1. |

55.அக்கரம் — வாய்ப்புண்

56.சானகி — முடக்கொத்தான்

57.பேய் மிரட்டி
வெதுப்படி பெருந்தும்பை

58.வாமரத்தக் கணங்கள் — ஆமகணம், இரத்தகணம்.

59.அந்தாதி அமைவில் உள்ள பாடல் என்பதால் சீர்குறைந்து வருகின்ற பாடலின் இறுதிச் சீரினைச் சேர்க்க எளிமையாகவும், சரியான பாடத்தினைக் கொள்ள வசதியாகவும் உள்ளது. 'குண்டு குக்கிடத் தைலமே' என்ற பாடலின் இறுதி அடி, 'குண்டு குக்கிடத் தைலமும். முட்டையே' என்று அடுத்த பாடலின் முதல் சீரினைக் கருத்தில் கொண்டு மாற்றப்பட்டுள்ளது. இதுவே சரியான பாடம் என்பது பாடலின் பொருளை நோக்கியும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

60.முட்டையுள்ள முசறுத்தைலம் — 1. உள்ளித் தைலம், 2. முசறு முட்டைத் தைலம்.

61.பூநாகம் — நாங்கூழ்ப்பு (அ) மண்புழு, மண்சுமந்த வாசகி, மண் ணுக்குப் பூச்சி

62.சுழிகண மாந்தம் — சுழிகணம், சுழிமாந்தம்.

63.மருந்துச் சரக்குகளின் குணத்தினைக் கொண்டு தீரும் நோய்கள் தரப் பட்டன.

64.மருந்துச் சரக்குகளின் குணத்தினைக் கொண்டு தீரும் நோய்கள் தரப்பட்டது.

65.1 முழம் — 1½ அடி (45 செ.மீ.).

66.பஞ்சசூதங்கள் — 1. பாதரசம், 2. இரசச் செந்தூரம், 3. இலிங்கம், 4. இரச கற்பூரம், 5. சவ்வீரம்

பஞ்சசூ செந்தூரம் — இது ஒரு அமைப்புச் செந்தூரம் ஆகும். அஃதாவது அரைத்தலினால் சிவக்கச்செய்து நன்றாக முடியச் செய்த லாகும்.

67.'வாதையும்' என்பதில் சரக்குகளின் எண்ணிக்கை கருதி (ஐந்)தையும் எனப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

68. அளவுதக்காளி — என்பது உள்சேரும் மருந்துகள் யாவும் வீரியம் மிகுந்தவை என்பதால் மணித்தக்காளியின் அளவு எனக்கொள் ளப்பட்டு, கிட்டத்தட்ட 500 மி.கி. (½ கி.) என்ற அளவாகப் பதிக்கப்பட்டுள்ளது.

69. பேதி மாத்திரை — என்று சுவடியில் கொடுக்கப்பட்ட தலைப்பு, பயன்பாட்டு எளிமை கருதி இங்ஙனம் பதிப்பிக்கப்பட்டது.

70. ''இரத்தப் பிரமியத்துக்கு, சொறிசிரங்குக்கு, அரையாப்பு கொருக்கு, வெள்ளைவாதக் குடைச்சலுக்கு'' என்று சுவடிகளில் இருந்த தலைப் புக்கள் பயன்பாட்டு எளிமைக்காக மருந்துகளின் பெயரும் கொடுக் கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

71. பாக்களவு — 2.2 கி ('பாக்கெடை'யின் தற்கால அளவை).

72. 'கஷாயம்' என்பது கழாயம் எனப் பதிப்பிக்கப்பட்டது.

கழாயம் — கசாயம், குடிநீர், கியாழம், உண்ணுநீர், மருந்துநீர்.

73. ''இரத்தப் பிரமியத்துக்கு, சொறிசிரங்குக்கு, அரையாப்பு கொருக்கு வெள்ளை வாதக் குடைச்சலுக்கு'' என்று சுவடிகளில் இருந்த தலைப் புக்கள். பயன்பாட்டு எளிமைக்காக மருந்துகளின் பெயரும் கொடுக் கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

74. 'பூசிடு' என்று இருத்தலே போதுமானது; எனவே பூசிடு 'வாய்' என் பதில் இறுதிஅசை நீக்கிப் பதிப்பிக்கலாம்.

75. சுண்டைக்காயளவு — 2 கி. என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.

76. ஏழுநாளைந்து நாள் — 35 நாட்கள்.

77. மயிர் சுற்றி — மயிர் மாணிக்கம்

78. நண்டு நாட்டு நற்சாறு — நாட்டு நண்டு நற்சாறு.

79. கண்டு — கற்கண்டு

80. 'ராவும் பகலு' என்பது 'இரவும் பகலும்' என்று பதிப்பிக்கப்பட்டது.

81. சேர் — 280 கி.

82. மூலம் : 21

1. நீர்மூலம், 2. செண்டுமூலம் 3. முளைமூலம், 4. சிற்றுமூலம், 5. வறள்மூலம், 6. இரத்தமூலம், 7. சீழ்மூலம், 8. ஆழிமூலம், 9. தமரக மூலம், 10. வளிமூலம், 11. அழல்மூலம், 12. ஐயமூலம், 13. முக்குற்றமூலம், 14. வினைமூலம், 15. மேகமூலம், 16. பவுந் திரமூலம், 17. கிரந்திமூலம், 18. குதமூலம், 19. வெளிமூலம், 20. கருக்கு மூலம், 21. சவ்வு மூலம்.

83. சீனி : இச்சொல் ஆசிரியர் காலத்து வழக்கிலிருந்த சொல்லா என் பது சிந்திக்கப்பட வேண்டியது. சீனியாம்பட்டை, சீனிக்கிழங்கு, அதி மதுரம் என்று இனிப்புச்சுவை, கொண்ட மூலிகைகளின் பெயரைக் கருத்தில் கொண்டு அக்காலத்தே வழங்கப்பட்டிருக்கலாம் என்று எண்ணப்படுகிறது.

84. 'தக்காளி' எனும் அளவு மணித்தக்காளி அளவாகவே எடுத்துக் கொள்ளப்பட்டுக், கிட்டத்தட்ட 500 மி.கி. (½ கி.) என்று பதிப் பிக்கப்பட்டுள்ளது. நேர்வாளம் சேர்ந்த மருந்து என்பதால் (தக்காளி யளவு) எடுத்துக்கொண்டால், கட்டுக்கடங்காத பேதி ஏற்பட்டு ஆபத்து ஏற்படும்.

85. வெருகடி — ஐவிரல் கூட்டும் அளவு (கிட்டத்தட்ட 1-2 கி. என எடுத்துக் கொள்ளப்பட்டது).

86. சங்கு — சங்கஞ்செடி.

87. 'நல்ல' என்பது நீக்கிப் பதிப்பித்தலே சிறப்பாக இருக்கும். இதனால் பொருள் மாற்றம் ஏதுமில்லை.

88. குமரிச்சாறு, ஈருள்ளிச்சாறு போன்ற சாறுகளின் அளவு கொடுக்கப் படாத விடத்து, சேரும் எண்ணெயின் அளவு எடுத்துக்கொள்வதே வழக்கு என்பதால் 1.3 லி. ஆக எடுத்துக்கொள்ளப்பட்டது.

89. மருந்துச் சரக்குகளின் அளவு கொடுக்கப்படாவிட்டாலும் கூட, பிற மருந்துகளின் அளவைக் கணக்கில் கொண்டு ஒருபலம் (-35 கி.) என்று எடுத்துக் கொள்ளப்பட்டது.

90. சீனம் — சீனக்காரம்.

91. திருடி — திருகுகள்ளி.
திருடியின்பால் — திருகுகள்ளிப்பால்

92. 'சீசா' — என்ற சொல் எழுந்தகாலம் சுவடி எழுந்தகாலமாக இருந் திருக்கலாமே தவிர, நூலின் காலத்திலோ, நூலாசிரியர் காலத் திலோ வழக்கிலிருக்க இயலாது. குப்பியின் (அல்லது) சிமிழியில் என்பது, படியெடுக்கப்பட்ட சுவடியிலிருந்து மீட்டுருவாக்கம் படி யெடுத்தோரால் செ[illegible]பட்டிருக்கலாம்.

93. விதியிலுள்ள வியாதி — கரும நோய்கள்.

94. 'சுண்டைக்காயளவு' — பிறநூல்களில் இதன் எடை கிடைக்கா விட்டாலும் கூட, கிட்டத்தட்ட 2 கி. என்று பதிப்பிக்கப்பட்டுள்ளது.

95. வேலி — கொடிவேலி (சித்திரமூலம்)

96. பித்தங்கள் எண்ணைந்து — 40 — வகை பித்தம்

97. * பித்தம் : 42 வகை

ஆவுருபித்தம், 2. ஆமில பித்தம், 3. உன்மாத பித்தம், 4. தமந்தபித் தம், 5. வாதபித்தம், 6. வன்னிபித்தம், 7. சிலேட்டும பித்தம், 8. சுரோணித பித்தம், 9. விகாரபித்தம், 10. விரணபித்தம், 11. ஊத்த பித்தம், 12. இரத்தபித்தம், 13. காசபித்தம், 14. சுவாசபித்தம், 15. செம்பித்தம், 16. கரும்பித்தம், 17. கரப்பான்பித்தம், 18. அசீரண பித்தம், 19. அருசிபித்தம், 20. எரிபித்தம், 21. அழல்பித்தம், 22. துடிபித்தம், 23. விடபித்தம், 24. அதிகாரபித்தம், 25. மூல பித்தம், 26. முதிர்பித்தம், 27. கண்டபித்தம், 28. ஒடுபித்தம், 29. மூடுபித் தம், 30. நடுக்குபித்தம், 31. கபாலபித்தம், 32. சர்த்தி பித்தம், 33. தாகபித்தம், 34. விக்கல்பித்தம், 35. சயபித்தம், 36. திமிர்பித்தம், 37. வலிபித்தம், 38. சீதபித்தம், 39. கிருமிபித்தம், 40. அசாத்திய பித்தம், 41. மார்க்கபித்தம், 42. மருந்தீடுபித்தம். (சில நூலோர் இதனை நாற்பது என்றும் கூறுவர்).

98. 'வட்டக்கிலுப்பியே' — என்று சுவடியிலிருந்த பாடம் இடம் நோக்கி 'வட்டத்திருப்பியே' என்று பதிப்பிக்கப்பட்டது.

99. இருசீரல் — 1. நற்சீரகம், 2. கருஞ்சீரகம் (கருஞ்சீரகம் மட்டும் என்று சொல்வாருமுளர்)

100. மெந்தியம் — வெந்தியம்

101. * மேகம் — 20 :

**வளிக்குற்றத்தால் வருவன — 4**

1. ஆச்சிய சுந்தி மேகம் (நெய்மணநீர்), 2. சுத்தமேகம் (பசுமணநீர்), 3. பிரமிய மேகம் (சீழ்நீர்), 4. மாங்கிச்சிராவக மேகம் (சதைநீர்)

**அழல் குற்றத்தால் வருவன — 6**

1. அப்பிய மேகம் (யானைக் கொழுப்புமணநீர்) 2. கற்றாழைமேகம் (கற்றாழை மணநீர்), 3. சவிரண மேகம் (சுண்ண மணநீர்), 4. இனிப்புமேகம் (இனிப்புநீர்) 5. பளிங்குமேகம் (பளிங்கு நீர்), 6. முயற்குருதிமேகம் (முயற்குருதிநீர்).

**ஐயக்குற்றத்தால் வருவன — 10**

1. வசாமேகம் (கொழுப்பு மேகநீர்), 2. தூய்மை மேகம் (தூய்மை நீர்), 3. மூளைமேகம் (மூளைநீர்), 4. இளநீர்மேகம் (இளநீர்), 5. சுராமேகம் (கள்நீர்), 6. சுக்கிலமேகம் (வெண்ணீர்), 7. கழுமேகம் (கழுநீர்), 8. பிரசமேகம் (தேன்நீர்), 9. சாரமேகம் (உப்புநீர்), 10. தைத்திய மேகம் (கவிச்சிநீர்).

102. குன்றி — 130 மி.கி. (நிறுத்தலளவை).

103. பணவெடை — 488 மி.கி. (நிறுத்தலளவை) பொதுவாக படியுரி — படி + உரி என்றும் உரியுமா — உரி + மா என்று எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் இதில் வீரியமிக்க மருந்து சேரும்; பேதியுண்டாக்கும் மருந்து என்பதால் வயதிற்கேற்பவும் உடல் வன்மைக்கு ஏற்பவும் குன்றி எடை முதல் பணவெடை கொடுக்கலாம் என்ற நிலையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

104. 1...குன்மப் பெருவயி றாமை — 1. குன்மப் பெருவயிறு, 2. ஆமைப் பெருவயிறு.

105. இருமுறை 'கட்டும்' என்று எழுதப்பட்டுள்ளதாலும், ஒருமுறை எடுத்துக் கொள்வதே செம்மையாக அமையும் என்பதாலும் (கட்டும்) என்பதை விட்டுப் பதிப்பித்தலே சிறப்பாகும்.

106. அளவு தக்காளி — 500 மி.கி. (½ கி.) என்றே எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது. காரணம் வீரியமிக்க மருந்து என்பதே.

107. ஐந்து நாளேழுநாள் — 35 நாட்கள்; 5 — நாட்கள் முதல் 7 - நாட்கள் வரை என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் கடுமையான, நாட்பட்ட நோய்களே கிரந்திப்பிடிப்பு, மேகம் என்பவை. எனவே அவை தீரும் காலமும் மருந்துண்ணும் நாட்களும் கிட்டத்திட்ட 1 - மண்டலம் (40 — நாட்கள்) ஆகும் என்பதால் 35 — நாட்களாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

108. ... பத்துநாளும் பலமைத்து வுண்டிட... 10 நாட்கள் 175 கி. வீதம் எடுத்துக் கொண்டால் விளக்கெண்ணெய் சேரும் மருந்து என்பதால் அளவுக்கு அதிகமாகப் பேதியை உண்டாக்கி விடும். எனவே 10-நாட்களும் 17.5 கி. மொத்தம் 175 கி. என்று எடுத்துக் கொள்ளப் பட்டது. பொதுவாகக் குடித்தைலத்தின் அளவு 15 மி.லி. — 30 மி.லி. என்பது இங்கு கருத்தில் கொள்ளத்தக்கது.

109. அளவு கொடுக்கப்படாதவிடத்து ஒரு வராகனெடையாகக் கொள் ளப்பட்டுள்ளது.

110. சங்கு — இவ்விடத்தில் கடல்படுபொருளைக் குறிக்கிறது; ஏனெனில் சங்கன்' கண்ணோய்களில் பயன்படுத்தப்படுவதில்லை (ஊது) சங்கு — கண்ணோய்களில் பயன்படுத்தப்படுவது.

111. ...தேற்றா னொருபலங் கொட்டை — தேற்றான்கொட்டை ஒருபலம்.

112. 'சாணி' என்பது 'சாணம்' என்று திருத்திப் பதிப்பிக்கப்பட்டது.

113. காணி $\frac{1}{80} = \frac{1 \text{ லி.}}{80} = \frac{1000 \text{ மி.லி.}}{80} = 12.5$ மி.லி.

114. சோம்பு — பெருஞ்சீரகம்

115. அரப்பொடி — எஃகுத்தூள்

116. கரி — அத்தி

117. ....ய்ளவு கழற்கொடி....' என்ற சுவடிப்பாடம் 'சரியல்ல' என்பத னால் கழற்(காய்) என்று மாற்றிப் பதிப்பிக்கப்பட்டது.

118. கெசபுடம் — 1000 - வரட்டிகளால் புடம் போடுவது.

119. **புடம்:** இது வரட்டியின் உதவியால் எரிக்கப்படும் எரிப்புத் திட்டம். இது ஏழு வகைப்படும். அவை, 1. காடைப்புடம் — எரு ஒன்று, 2. கவுதாரிப்புடம் — எரு மூன்று, 3. குக்குடப்புடம் — எரு பத்து, 4. வராகபுடம் — எரு ஐம்பது, 5. கெசபுடம் — எரு ஆயிரம், 6. மணல் மறைவுபுடம் — எரு-90, 7. பூப்புடம் — ஆட்டெரு, அகல நீளம். இது தவிரவும் கீழ்க்கண்ட புடங்களும் வழக்கிலுள்ளன.

1. உமிப்புடம் — உமியில் புதைத்து வைத்தெடுத்தல், 2. தானியப் புடம் — நெல் முதலிய தானியங்களில் புதைத்தெடுத்தல், 3. சூரிய புடம் — வெயிலில் காயவைத்தல், 4. சந்திரபுடம் — சந்திரஒளியில் வைத்தெடுத்தல், 5. அமாவாசைப்புடம் — அமாவாசையன்று வைத் தெடுத்தல், 6. புருவபுடம் — பருவத்தன்று வைத்தெடுத்தல், 7. பனிப் புடம் — பனியில் வைத்தெடுத்தல், 8. பட்டைப்புடம் — மரத்தைத் துளைத்து அதில் மருந்தை வைத்து அத்தாளால் மூடிவைத்து எடுத் தல்.

120. ஈரரத்தை — 1. சிற்றரத்தை, 2. பேரரத்தை

121. எண்ணைந்து நாள் — 40 நாட்கள் (ஒரு மண்டலம்) (ஒரு மண்ட லம் என்பதனை 41-நாட்கள், 48-நாட்கள் என்று கொள்வோரும் உளர்).

122. ...நற்பொரி — என்பது நெற்பொரி என்று மீட்டுருவாக்கம் செய்யப் பட்டது.

123. முப்பழம் — மா, பலா, வாழை

124. முச்சீரகம் — நற்சீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம்.
(காட்டுச்சீரகம் — என்னும் ஒருவகையும் உள்ளது; இது பெரும்பாலும் தோல் நோய்களில் வெளிப்பூச்சு மருந்தாக மட்டுமே பயன்படுத்தப் படுகிறது.

125. ....சுடதுளி விட்டிடு... — என்று எடுத்துக் கொண்டால் காதில் தைலத்தைச் சூடாக இருக்கும்போது விடுதல் என்று பொருள்படும். ஆதலால் 'சுட(த்)துளி' என்று பதிப்பிக்கப்பட்டது. படிஎடுப்போ ரால் விடுபட்டிருக்கலாம். இங்கு சுடர்த்துளி என்பது காதுத்துளி (Ear drops)

126. 'குடைச்சலுச்சலும்' என்ற சுவடிப்பாடம் பொருள் நோக்கியும், சீர் நோக்கியும், ஓசைநயம் கருதியும், 'ச்சலு' மிகுதியாகத் தவறாக எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது. அதனை விட்டுப் பதிப்பித்தலே சிறப்பானதாகும்.

127. நீலி — அவுரி

128. உப்புகள் ஐவகை — 1. கல்லுப்பு, 2. கறியுப்பு, 3. இந்துப்பு, 4. வளையலுப்பு, 5. வெடியுப்பு.

129. மணிப்புங்கு — பூவந்தி

130. *** பெருவயிறு (மகோதரம்) — 32 :**

1. வளப்பெருவயிறு, 2. அழல் பெருவயிறு, 3. ஐயப் பெருவயிறு, 4. முக்குற்றப் பெருவயிறு, 5. வளிஐயப் பெருவயிறு, 6. அழலையப் பெருவயிறு, 7. கல் பெருவயிறு, 8. வில் பெருவயிறு, 9. வழவைப் பெருவயிறு, 10. நழுவைப் பெருவயிறு, 11. ஊராம்பல் பெரு வயிறு, 12. நீராம்பல் பெருவயிறு, 13. மேல்களிசைப் பெருவயிறு, 14. கீழ்க்கவிசைப் பெருவயிறு, 15. பக்கக்கவிசைப் பெருவயிறு, 16. பழுக்கவிதைப் பெருவயிறு, 17. மாப்பெருவயிறு, 18. சூல் பெருவயிறு, 19. வல்லைப் பெருவயிறு, 20. நஞ்சுப் பெருவயிறு, 21. பாண்டுப் பெருவயிறு, 22. சோபைப் பெருவயிறு, 23. காமா லைப் பெருவயிறு, 24. குன்மப் பெருவயிறு, 25. உதரப் பெரு வயிறு, 26. ஆமைப் பெருவயிறு, 27. மண்ணீரல் பெருவயிறு, 28. சுரப் பெருவயிறு, 29. நீர்ப் பெருவ்யிறு, 30. சதைப் பெரு வயிறு, 31. வெப்புப்பாவைப் பெருவயிறு, 32. சூலைமுட்டிப் பெரு வயிறு.

131. நாபி — தொப்புள்

132. பூவந்தி — மணிப்புங்கு.

133. செங்கத்தாரி — இடத்துக்குத் தக்கவும், சேரும் பிறமருந்துகளின் அடிப்படையிலும், தீரும் நோய்களுக்குத் தக்கவும் மீட்டுருவாக்கம் செய்யப்பட்டது.

134. .....தா யெண்ணெய்... என்று சுவடியிலிருந்த பாடம் அந்தாதி யாப் பினால் '...தா(க்கு)...' என்று பதிப்பிக்கப்பட்டது.

135. ....சாந்தில் என்பது 'நற் சாந்தில்' என்று மீட்டுருவாக்கம் செய்யப் பட்டுள்ளது.

136. புழுவெட்டு — மயிர்முளைக்கும் இடங்களில் எல்லாம் 'மயிர்ப்புழு வெட்டு' எனும் நோய் காண்பதால் தலைமயிர், இமைமயிர், புருவ மயிர், மீசை மயிர், தாடிமயிர், மேகனமயிர் முதலிய இடங்களில் பொதுவாகக்காணும்.

